
கல்கி

அன்பளிப்பு:
கந்தகோட்டம்
ஸ்ரீ முத்துக்குமார சுவாமி
வண்ணப்படம்

KALKI 8.4.2001
ரூ. 5.00



“போயஸ் தோட்டத்துக்குத் துரத்தியவர் கலைஞர்தான்!”

— ராமதாஸ் அதிரடி!

தேர்தல்
ஸ்பெஷல் – III



தேர்தல் களத்தில் மூப்பனார் மகன்!

தமிழக மக்களின் விரல்களுக்குப் பொட்டிட்டு, காதுகளுக்குப் பூச்சூட்டி மீண்டும் வி.ஐ.பி. அந்தஸ்து தரப்போகும் தேர்தலுக்கு இந்தப் பக்கங்கள் சமர்ப்பணம்.

★ நூறு கோடியில் ஒருவன்
- தேர்தல் சிறப்பு சிறுகதை

★ தேர்தல் ஸ்பெஷலாச்சே!
'கட்டிங் - கலெக்ஷன்'
- ஸ்கேனிங் ரிப்போர்ட்

★ இங்கதான் தயாராகுது
'வாக்காளர் மை'
- ஃபாக்டரி விஸிட்

❖ அரசியலுக்கா? நாங்களா?
- வாரிசுகள் பேட்டி

இதைத் தவிரவும் நிறைய அரசியல் மற்றும் அரசியல் சார்ந்த விஷயங்கள் இடம் பெற்றிருக்கின்றன. அவை எல்லாமே 'தேர்தல் ஸ்பெஷல் பகுதிகள்' என அறிக.



கல்கி இண்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ✉ மெயில் : kalkiweekly@vsnl.com

தேர்தல் வோட்டு எண்ணிக்கையின்போது மணிக்கணக்கில் தொலைக்காட்சியில் 'லைவ்' ஆக, அரசியல்வாதிகளைக் கொக்கி போடும் அரசியல் விமர்சகர்கள் இந்தத் தேர்தலுக்குத் தங்களை எப்படித் தயார் படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ரெடாக் கண்டார்கள்!



சுதாங்கன்– (ஆசிரியர், வெப் உலகம்):

முதன் முதலாக 1996 தேர்தல் வோட்டு எண்ணிக்கையின்போது ரவி பெர்னார்ட் அவர்களுடன் சேர்ந்து நிகழ்ச்சி நடத்தும் வாய்ப்பு கிடைத்தது. மைக்கில் பேசுவதற்கு சில பேருக்குக் கூச்சம், தயக்கம் இருக்கும். கல்லூரியில் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற அனுபவம் தவிர, மேடை நாடகங்கள், திரைப்படம் ஆகியவற்றில் நடித்ததால் என்னால் இயல்பாகப் பேச முடிந்தது. மற்றொரு அடிப்படையான காரணம் 22 ஆண்டு கால அரசியல் பத்திரிகையாளர் அனுபவம். தேர்தல் வெற்றி தோல்வி புள்ளிவிவரங்களை மனப்பாடமாக்கிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. அவற்றைச் சொல்வதற்குத்தான் உதவியாளர்கள் கம்ப்யூட்டருடன் இருப்பார்களே!

கட்சிகளின் நிலைப்பாடுகள், அரசியல் வாதிகளின் அந்தர் பல்டிகள், தடாலடி அறிக்கைகள் ஆகியவை பற்றி அவசியம் அப்டு டேட் ஆகத் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். ஓர் அரசியல்வாதியைப் பார்த்தவுடன் அவரது வரலாறு மெமரியில் வரவேண்டும். பொதுவாக எதிரெதிர் முகாம்களில் இருப்பவரை மோதிக் கொள்ளும்படி விட்டுவிடுவேன். யாராவது உண்மை நிலையைத் தவறாகக் குறிப்பிட்டால் மட்டுமே தலையிடுவேன். அரசியல் வாதிகளைக் கூடச் சமாளித்து விடலாம். ஆனால் பல மணி நேரப் பேச்சுக்குப் பிறகு குரல் 'உள்ளே' போய் விடும். தொண்டையைச் சமாளிப்பதுதான் கடினம்.

1999ம் ஆண்டு தேர்தலின்போது அப்படி ஆகிவிட்டது. என் நிலையை, தொலைக் காட்சியிலேயே குடும்ப டாக்டர் பார்த்து விட்டுக் கொட்டும் மழையில் ஸ்டுடியோவிற்கு வந்து உடனடி நிவாரணத்துக்கு மாத்திரை கொடுத்தார். குரல் தகராறு ஒரு பக்கம் இருக்க, தொடர்ச்சியான தும்மல் வேறு பாடாய்ப் படுத்த, நான் சமாளித்ததை நினைத்தால் இப்போதும் சிரிப்பு வரும்.

வீரபாண்டியன்– (சன் டீ.வி.):

என்னுடைய நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து பார்ப்பவர்கள் மறக்காமல் கேட்பது, 'ஏன் ஸார் 'அந்த' அரசியல்வாதி

பத்தாண்டுகளுக்கு முன்பு சொன்னதை அவருக்கு ஞாபகப்படுத்திச் சங்கடப்படுத்தி விட்டீர்களே... உங்களுக்கு எப்படி அது நினைவுக்கு வந்தது?'

இது போன்ற நிகழ்ச்சிகளை நடத்துபவர்களுக்குத் தேவை கடின உழைப்புதான். ஓர் அரசியல்வாதியை நான் பேட்டி காணப் போகிறேன் என்றால் படப்பதிவுக்கு முன் ஒரு வாரம், பத்து நாள் என்று அவரைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கிவிடுவேன். அந்த அரசியல்வாதி முதன் முதலாக மேடையேறியது தொடங்கி, சகல விவரங்களையும் குறிப்புகளாக எடுத்து விடுவேன். அவருடைய தோழர்கள், மூத்த பத்திரிகையாளர்கள் ஆகியோரை அணுகி நுணுக்கமான செய்திகளைச் சேகரிப்பேன். இப்படித் தமிழகத்தில் 90 சதவிகித அரசியல்வாதிகளின் வரலாறு அத்துப்படி ஆகிவிட்டது. தேர்தலின்போது இவர்கள் தானே அவரவர் கட்சி சார்பாக எங்கள் முன் வந்தமர்வார்கள். அதனால் சமாளிப்பது சுலபமாகிவிடும்.

வோட்டு எண்ணிக்கையின் போது கூடுதலாக நான் செய்யும் பணி, தொகுதி நிலவரங்களைப் பற்றி பத்திரிகைகளில் மட்டும் படித்து தெரிந்து வைத்துக் கொள்ளாமல் நேரடியாக களத்துக்கே சென்று விவரங்களைச் சேகரித்து விடுவதுதான். தமிழகத்தின் சட்டமன்றத் தொகுதிகளின் அமைப்பு, மக்களின் சமூக, பொருளாதார நிலை ஆகியவற்றையும் குறித்து வைத்துக் கொள்வேன். உதாரணமாக கரிசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியென்றால் அங்கே திருவேங்கடம் என்பவர் ஐந்தாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார் என்பது பளிச்சென்று நினைவுக்கு வரவேண்டும். வோட்டு எண்ணிக்கையின் போது குறிப்பிட்ட கட்சி வேட்பாளர் பின்னணியில் இருந்தால் அவர் ஏன் பின்னணியில் இருக்கிறார் என்பதை சென்னையில் என் முன்னால் உட்கார்ந்திருக்கும் கட்சித் தலைவருக்கு என்னால் விளக்க முடியும். தொகுதிவாரியாகவும் இப்போது சென்று தகவல்களைச் சேகரித்து வருகிறேன்.





அழகுராஜ்– (ஜெயா டீ.வி):

அரசியலே 'உணவாக' கொள்ளும் 24 மணி நேர அரசியல்வாதி நான். என் குரல் வளத்தையும், வாதத் திறமைகளையும் பார்த்து ஜெயா தொலைக்காட்சி அரசியல் நிகழ்ச்சிகளை நடத்தும் வாய்ப்பைக் கொடுத்திருக்கிறது. நான் சார்ந்திருப்பது

அ.இ.அ.தி.மு.க.வாக இருந்தாலும் நான் நடத்தும் நிகழ்ச்சிகள் கட்சி சார்பு எதுவுமில்லாமல் நடத்துகிறேன். ஆனால் சில அரசியல்வாதிகள் அ.இ.அ.தி.மு.க.வுக்கு எதிரான கருத்துக்களை எடுத்து வைக்கும் போது தவறான தகவல்களைக் கொடுத்தால் உடனடியாக திருத்துவேன்.

ஜெயலலிதாவின் பேச்சுகள், பல்வேறு பிரச்னைகளைப் பற்றி கழகத்தின் நிலைப் பாடுகள், என தெள்ளத் தெளிவாக அறிந்து வைத்திருப்பதுடன், தி.மு.க. அணியின் பலவீனங்களையும் அடையாளம் கண்டு வைத்திருக்கிறேன். ஆனால் நிகழ்ச்சி நடத்தும்போது, பார்ப்பவர்கள் எந்தக் கட் டத்திலும் நான் அ.இ.அ.தி.மு.க. கட்சிக் காரன் என்பதைப் புரிந்து கொள்ளாத வகையில் நடத்திச் செல்வேன். பார்ப்பவர் கள் பல புதிய விஷயங்களையும், சர்ச்சை களையும் விளங்கிக் கொள்ளும் வகையில் நடத்துவேன்.

சீக்கிரம் ஓட்டிப் போங்க!

சட்டமன்றத்தில் பால்வளத்துறை மான்யம் பற்றி விவாதம் நடந்து கொண்டி ருந்த சமயம். உரையாற்ற குமரி அனந்தன் எழுந்தபோது மாலை வெகு நேரமாகி விட்டது. அனந்தன் தமது உரையில் உவமைகள் இணைத்துப் பேச ஆரம்பித்தார்.



''மாலை மயங்கும் நேரம். கண்ணன் குழல் ஊதிக் கொண்டிருக் கிறான். மாடுகள் வீடு திரும்புகின்றன'' என்ற வர்ணனையுடன் பேச் சைத் தொடர்ந்தார்.

அப்போது பேர வைத் தலைவராக இருந்த க.ராஜாராம் குறுக்கிட்டு, ''இப்போது மாலை நேரம் கடந்து விட்டது. இந்த விவாதத்தில் இன்னும் நிறைய பேர் பேச வேண்டியிருக்கிறது. உறுப்பினர் மாடு களைச் சீக்கிரமாக ஓட்டிக் கொண்டு போனால் நல்லது'' என்று கூறியதும், அவையில் பலத்த சிரிப்பொலி.

'சிரித்து வாழ்வோம்' நூலிலிருந்து:
பா. குணா



காமராசர் தோற்றுப் போனார். தொண்டர்கள் அவரது வீட்டில் வந்து அழுதார்கள். ஒருவர் துக்கம் தாளாமல் "தலைவரே... நீங்க கூட தோற்றுப் போய் விட்டீர்களே... என்று அழ, அதற்கு காமராசர் "நான் கூட தோற்றுப் போவதற் குப் பெயர்தான் ஜனநாயகம்" என்றார்.
- பா. குணா

'பா.ஜ.க. தமிழகத்தில் வளர்வதற்கு நீங்கள் மதப்பூசல்களைத் தமிழகத்தில் உருவாக்குகிறீர்களா?' என்று இந்து முன்னணி இராம கோபாலனிடம் கேட்டதும், பெரியார் பிறந்த தின விழாவுக்கு, 'அ.இ.அ.தி.மு.க. பொதுச் செய லாளரைக் கூப்பிட்ட நீங்கள் திராவிட இயக்கத்தின் மற்றொரு குழந்தையான தி.மு.க.விலிருந்து ஏன் யாரையும் அழைக்க வில்லை?' என்று ஜெகவீரபாண்டியனிடம் கேட்டதும் பரவலாகப் பேசப்பட்ட விஷயங் கள். இந்தத் தேர்தலுக்குப் பரபரப்பாக நிகழ்ச்சிகளைத் தயாரித்துக் கொண்டிருக் கிறோம். எல்லா கட்சி அரசியல்வாதிகளுக் கும் அவர்களது கருத்துக்களைச் சொல்ல முழு வாய்ப்பு கொடுப்போம்.

— கௌசி

படம்: ராஜன்



டெஸ்ட் சாம்பியன் ஆஸி.யை வீழ்த்திய மகிழ்ச்சியுடன் முதல் ஒரு நாள் போட்டியையும் வென்றுவிட்டு பயங்கர 'குஷி'யில் இருந்த இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் கங்குலியை, பெங்களூர் சின்னசாமி ஸ்டேடியத்தில் சந்தித்தோம்.

சொன்னதைச் செய்து விட்டீர்கள்...

ஆமாம். ஆஸி. அணி, டெஸ்ட் போட்டிகளில் பலம் குறைந்த அணிகளைத்தான் இதுவரை வென்றிருக்கிறது. இதை நான் நீண்ட நாட்களாகவே சொல்லி வருகிறேன். அது உண்மைதான் என்பது இப்போது நிரூபணமாகி விட்டதே.

ஆனால் 'இந்தியாவும், பாகிஸ்தானும் எங்களிடம் தோற்றிருக்



"தனிப்பட்ட வாழ்க்கையை விமர்சிக்க வேண்டாம்!"

கின்றன. இவை இரண்டும் பலவீனமான அணிகள் என்கிறீர்களா?' என்று கேட்கிறாரே ஸ்டீவ் வாஹ்?

இந்தியாவையும், பாகிஸ்தானையும் ஜெயித்திருக்கலாம். ஆனால் சொந்த நாட்டில் தங்களது அம்பயர்களை வைத்து பெற்ற வெற்றிதான் அது. குறிப்பாக கடந்த வருட ஜனவரியில் நடந்த போட்டியில் சச்சினை மட்டும் குறி வைத்து டேவிஸ் என்ற நடுவரும் ஹேர் என்ற அம்பயரும் சொல்லி வைத்ததுபோல் அவுட் கொடுத்த விதத்தை ஆஸ்திரேலிய பத்திரிகைகளே தாக்கி எழுதியதை நான் மறுபடியும் ஸ்டீவ் வாவுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். இப்படி தங்களது அம்பயர்களை வைத்து 13 பேர் ஆடி பெற்ற வெற்றியை வெற்றி என கூறுவதா? இதைத்தான் நான் சொன்னேன். கோபம் பொத்துக் கொண்டு வந்தது. உள்ளதைச் சொன்னால் எப்பவும் எரிச்சல் தான். இதில் ஸ்டீவ் மட்டும் விதி விலக்கா?

இந்த வெற்றி பற்றி...?

இது அணியின் வெற்றி. தனிப்பட்ட யாருடைய வெற்றியும் அல்ல. அணியில் இடம் பெற்ற அனைவரும் தத்தம் பங்கை அளித்திருக்கிறார்கள். ஆனால் இந்த வெற்றி லட்சுமணையும் ஹர்பஜனையும் கிரிக்கெட் உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் லட்சுமண் அடித்த அடியால் உலகப் புகழ் பெற்ற வார்னேகூட தமக்குப் பந்தே போட வரவில்லை என கமெண்ட் அடித்தாராம்! அதே போல ஹர்பஜனை எதிர்கொண்ட ஆட்டக்காரர்கள் ஏதோ பிசாசை எதிர் கொண்டு ஆடியது போன்ற பயத்தில் ஆடியதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

ரைட் கொடுத்த ரைட் ரூட்தான் இந்த வெற்றிக்குக் காரணம். மும்பை டெஸ்டு போட்டியில் தோற்றபோது அனைவரையும் அழைத்து கிட்டத்தட்ட ஆறு மணி நேரம் வகுப்பு எடுத்தார். ஒவ்வொரு வீரரையும் தனிப்பட்ட முறையில் உற்சாகப்படுத்தினார்.

தனிப்பட்ட முறையில் நீங்கள் ரன்கள் அடிக்காதது பற்றி...

அந்த வருத்தம் எனக்கும் இருக்கு. ஆனால் கங்குலி ரன் அடித்து ஆட்டம் தோற்பதைவிட கங்குலி ரன் அடிக்காமல் வெற்றி பெறுவது பெட்டர் அல்லவா. தவிர, கேப்டன் என்ற முறையில் நான் செய்த முயற்சிகள் ஒவ்வொன்றும் வெற்றியைத் தேடித் தந்திருக்கிறது. குறிப்பாக ராகுல் இடத்தில் லட்சுமண் ஆடியது எனது ஐடியாதானே. இன்று லட்டுவை (லட்சுமண்) உலகமே பாராட்டுகிறதே. எனவே கேப்டன் என்ற முறையில் வெற்றி பெற்றுள்ளேன். இது போதாதா?

நடிகை நக்மாவால் உங்கள் பேட்டிங் பார்ம் போனதாக உள்ள கருத்து பற்றி.

(கோபமாக) என்னடா இந்தக் கேள்வி இன்னும் வரலையே எனப் பார்த்தேன். சரி. என் தனிப்பட்ட வாழ்க்கையை யாரும் விமர்சிக்கத் தேவையில்லை. அதற்கும் நான் ரன்கள் அடிக்காததற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. கேப்டன் என்ற முறையில் பெற்ற வெற்றியைப் பாருங்கள். அதில் ஏதாவது தவறு செய்தால் தட்டிக் கேளுங்கள்.

பேட்டி : **நந்தினி**
படம் : **உமாமணி**

"தேர்தல்ல வோட்டு வாங்கறதுக்காக என்னதான் பேசறதுன்னு ஒரு விவஸ்தையே இல்லாம போச்சு.... நம்ம தலைவருக்கு..."

"அப்படி என்னதான் பேசிட்டாரு..?"

"ஆட்சிக்கு வந்தா உங்களுக்கும் ஊழல்ல பங்கு தருவேன்னு சொல்லித் தொலைச்சிருக்கார்!"

- பா. ஜெயக்குமார்



INDIAN INSTITUTE OF MANAGEMENT & TECHNOLOGY

25, Mada Church Road, Mandaveli,
Chennai - 600 028. INDIA Phone : 4956036
Fax : 495 2692 e-mail : icolam@hotmail.com

in association with

ALL INDIA COUNCIL FOR MANAGEMENT STUDIES

29, Lazarus Church Road, R.A. Puram,
Chennai - 600 028. INDIA Phone : 4933210
Fax : 493 3259 e-mail : aiicas@hotmail.com

IIMAT and **AICOMAS** jointly offer the following **One Year and Six Months** Diploma Courses by correspondence

Eligibility : No formal qualification (Open Education System). **For Application and Prospectus send Rs. 10/- Postage stamp** to any one of the Institute.

ONE YEAR DIPLOMA COURSES

* BUSINESS MANAGEMENT
* BUSINESS ADMINISTRATION
* MARKETING MANAGEMENT
* TOTAL QUALITY MANAGEMENT & ISO 9000 / QS 9000
* MATERIALS MANAGEMENT
* EXPORT & IMPORT MANAGEMENT
* HOTEL MANAGEMENT
* CATERING MANAGEMENT
* BANKING & INSURANCE MANAGEMENT
* TRAVEL & TOURISM MANAGEMENT
* MECHANICAL ENGINEERING
* CIVIL ENGINEERING
* ELECTRICAL ENGINEERING
* ELECTRONICS & COMMUNICATION ENGINEERING

SIX MONTHS DIPLOMA COURSES

* BUSINESS MANAGEMENT
* BUSINESS ADMINISTRATION
* OFFICE ADMINISTRATION
* SALES & MARKETING
* FINANCIAL MANAGEMENT
* RESEARCH & DEVELOPMENT
* INDUSTRIAL RELATIONS & PERSONNEL MANAGEMENT
* HUMAN RESOURCES DEVELOPMENT
* EXPORT & IMPORT MANAGEMENT
* FOREIGN TRADE MANAGEMENT
* MATERIALS MANAGEMENT
* PRODUCTION MANAGEMENT
* FOOD & BEVERAGE MANAGEMENT
* FOOD PRODUCTION MANAGEMENT
* COMPUTERS IN OFFICE MANAGEMENT
* COMPUTER APPLICATION
* HOTEL MANAGEMENT
* BANKING MANAGEMENT
* TEACHER TRAINING EDUCATION
* LABOUR LAWS
* QUALITY CONTROL & ISO 9000
* ADVERTISING & PUBLIC RELATIONS
* NURSING MANAGEMENT
* ENVIRONMENTAL MANAGEMENT SYSTEM & ISO 14000/14001
* INTERNATIONAL BUSINESS MANAGEMENT
* BUSINESS INFORMATION SYSTEM
* MANAGEMENT INFORMATION TECHNOLOGY
* HEALTH & HOSPITAL MANAGEMENT
* HOSPITAL ADMINISTRATION
* EDUCATIONAL MANAGEMENT
* TOTAL QUALITY MMANAGEMENT & ISO 9000
* NETWORKING & INTERNET APPLICATION
* QUALITY ASSURANCE & QS 9000 / ISO 9000
* SOFTWARE CAPABILITY MATURITY MODEL (guidelines for improving software process)
* INTERNATIONAL AIRLINES MANAGEMENT (Affiliated/Recognised by Westwind Aviation Academy, Arizona, USA)
* E-COMMERCE APPLICATION
* WEB DESIGNING APPLICATION
* WEB APPLICATION DEVELOPMENT
* INTERNET & INTRANET SECURITY

We offer Post-Graduate Diplomas also. (Duration - 18 months). Kindly write to any one of the above institute for more information.

வாரம் ஒரு முறை

ஓமம், என்றவுடன், உடனடியாக நம் நினைவுக்கு வருவது, ஓமவாட்டர்தான். அந்தக் காலத்தில் சின்னக் குழந்தைகள் இருக்கிற வீடுகளில் கண்டிப்பாக ஒரு பாட்டில் ஓம வாட்டர் இருக்கும். இன்றைய நாகரிக காலகட்டத்தில் ஓம வாட்டர் போல, சில நவீன மருந்துகள் வந்துவிட்டன. ஒரு பங்கு ஓமத்துக்கு எட்டு பங்கு தண்ணீர் என்கிற விகிதத்தில் கலந்து, காய்ச்சி, நீராவியாக மாறியதும், அதை குளிர்வித்து, தயாரிப்பதுதான் ஓம வாட்டர். இதுபோலத் தயாரிக்கப்படும் இன்னொன்று ஓமத் தைலம்.

பெரியவர்கள், ஓமவாட்டருக்குப் பதிலாக ஒரு டம்ளர் தண்ணீரில், இரண்டு சிட்டிகை ஓமத்தைப் போட்டு, நன்றாக காய்ச்சி, வடிகட்டி, வெல்லம் சேர்த்துச் சாப்பிடலாம். ஓமத்தை அப்படியே சாப்பிட்டால் காரமாக இருக்கும். சிலருக்கு உட்புறம் புண்ணாகி விடக் கூடும்.



அல்சர், அமீபியாசிஸ் போன்ற பிரச்னை உள்ளவர்கள் மிகமிகக் குறைந்த அளவில் ஓமம் பயன்படுத்தலாம். அல்லது ஓமத்தைத் தவிர்ப்பது உசிதம்.

அஜீரணம் சம்பந்தப்பட்ட எந்த பிரச்னையானாலும் இந்த ஓம மருத்துவம் பலன் தரும். குறிப்பாக குழந்தைகளுக்கு அஜீரணம் என்றால் ஓம வாட்டர் கைகண்ட மருந்து.

குளிர்காலத்தில் குழந்தைகளுக்கும், முதியவர்களுக்கும் உடல் ஜில்லிட்டுப் போகும். அது போன்ற சமயங்களில், கற்பூரம், மஞ்சள், ஓமம் இவற்றைச் சம அளவு எடுத்துக் கொண்டு, தேங்காய் எண்ணெயில் போட்டுக் காய்ச்சி, வடிகட்டி எடுத்து வைத்துக் கொண்டு, அதை உள்ளங்காலில், உள்ளங்கையில் தடவித் தேய்த்தால், உடலில் சூடு பிறக்கும். மூச்சுத் திணறல், மார்ச்சளியில் அவதிப்படுகிறபோது, கோதுமைத் தவிடு, ஓமம் இரண்டையும் கலந்து, இலேசாய் வறுத்து, சிறு துணியில் கட்டி வைத்துக் கொண்டு, ஒத்தடம் கொடுக்கலாம். பலன் கிடைக்கும். நுரையீரல் செயல்பாடு சீரடையும்.



தொழிற்சாலைகளில், இயந்திரங்கள் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்குமானால், அது சீக்கிரமே சூடாகி, பழுதடைந்து விடும். நம் உடம்பும் அதுபோலத்தான். அலைந்து திரிகிறவேலையானாலும் சரி, ஒரே இடத்தில் மணிக்கணக்கில் உட்கார்ந்து செய்கிற உத்தியோகம் ஆனாலும் சரி, உடம்பு உஷ்ணமாகி, அதனால் பல வேண்டாத விளைவுகள் ஏற்பட்டுவிடும். அப்புறம் டாக்டரிடம் போய் வருவதும், மருந்து, மாத்திரைகளும்... இதையெல்லாம் தவிர்க்க முடியும் என்றால், அதை கடைபிடிப்பது தானே புத்திசாலித்தனம்?

நான் எதைச் சொல்ல வருகிறேன் என்று புரிகிறதா? எண்ணெய்க் குளியலைத்தான் சொல்லுகிறேன். எண்ணெய் என்று நான் குறிப்பிடுவது நல்லெண்ணெயைத்தான். அது பெயருக்கு ஏற்றபடி, உடம்புக்கு ரொம்ப நல்ல எண்ணெய். உடம்பின் அகம், புறம் இரண்டுக்குமே நல்லெண்ணெய் ஒரு நன் மருந்து. சித்த மருத்துவத்தில், ஆதிகாலம் தொட்டே மிகவும் சிலாகித்துக் குறிப்பிடப் படுகிறது.

மூலிகைமணி டாக்டர் க. வேங்கடேசன்
டாக்டர் க. வே. அபிராமி



மிஸ்டர் நல்லெண்ணெய்!



இளம் பெண்கள் பூப்பெய்தியவுடன், நல்லெண்ணெய் கொடுக்கும் பழக்கம் கிராமப்புறங்களில் இன்றளவும் கடைபிடிக்கப்படுகிறது. நல்லெண்ணெய், கருப்பையை நன்கு பலப்படுத்தும் என்பதே காரணம்.

கிருஷ்ண தேவராயர் தினமும் காலையில் தவறாமல் ஒரு கிண்ணம் நல்லெண்ணெய் குடிப்பாராம்! உடல் ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் இருக்க அவரது ராஜவைத்தியர் கொடுத்த ஆலோசனையாம் அது.

கர்நாடகம் மற்றும் ஆந்திர மாநிலங்களில், காலையில் எழுந்தவுடன் பல் துலக்கிய பிறகோ அல்லது பல் துலக்குவதற்கு முன்போ, இரண்டு ஸ்பூன் நல்லெண்ணெயை வாயில் விட்டுக் கொண்டு, அப்படியே வைத்துக் கொண்டு இருப்பார்கள். சிலர் இலேசாக கொப்பளிப்பது கூட உண்டு. சுமார் பத்து பதினைந்து நிமிடங்கள் போல, அப்படி வைத்துக் கொண்டு இருந்துவிட்டு, பின்னர் எண்ணெயை வெளியில் துப்பி விடுவார்கள். அதன்பின் வாயை நன்றாகக் கொப்பளித்து, சுத்தப்படுத்திக் கொண்டு விடுவார்கள்.

தினமும் நம் உடலில் சேருகிற நச்சுப் பொருட்களை இந்தக் காலை நேர எண்ணெய்க் கொப்பளித்தல் வெளியேற்றி, உடலை சுத்தப்படுத்தி விடும். இதை கடைபிடிப்பதால், பொதுவான தேக ஆரோக்கியம் மேம்படும்.

பெங்களூரைச் சேர்ந்த ஒரு நண்பர் வீட்டில், அவரது மொத்தக் குடும்பமும் எண்ணெய்க் கொப்பளிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இதனால் அவரது மகனின் கண் பார்வை பிரச்னை தீர்ந்து விட்டது என்கிறார் அவர். இதைக் கடை பிடிக்கிற இன்னொரு பெண்மணி, கண்களுக்குக் கீழே வரும் கருவளையங்களை அகற்றி, முகத்துக்கே புதுப்பொலிவு தந்ததாக சந்தோஷத்துடன் குறிப்பிடுகிறார்.

எண்ணெய் தேய்த்துக் குளிப்பதே வீண் என்கிற ரீதியில் பல டாக்டர்கள் பேசுவார்கள். இதனால் என்னிடம் வருகிறவர்கள் பலர் இதுபற்றித் தவறாமல் கேட்கிறார்கள். என்னைக் கேட்டால், எண்ணெய்க் குளியல் என்பது மிகமிக அவசியமான ஒன்று. வாரம் ஒரு தடவையாவது எண்ணெய் தேய்த்துக் குளிப்பது மிகவும் அவசியம். ஆகவேதான் 'சனி நீராடு' என்றார்கள்.

நம் ஊரில் பொதுவாகவே கோடை, கடும்கோடை என்று தான் சீசன் நிலவுகிறது. எனவே, பெரியவர்கள், சிறியவர்கள் அனைவருக்கும் வாரம் ஒரு தடவை எண்ணெய்க் குளியலை பலமாக



"மருத்துவராக இருக்க மருத்துவம் படித்திருக்க வேண்டும். வழக்கறிஞராக இருக்க சட்டம் படித்திருக்க வேண்டும். அரசியல்வாதியாக இருக்க தன் தேவைகளை மட்டும் அறிந்து வைத்திருந்தால் போதும்."

— மாக்ஸ் ஓரெல்



சிபாரிசு செய்கிறேன்.

நம் சருமத்தில் மிக நுண்ணிய துவாரங்கள் இருப்பதும், அவற்றின் வழியே வியர்வை வெளியேறுவதும் நாமறிந்த விஷயம்தான். நம் சருமத்தில் தேய்க்கப்படும் எண்ணெயும், இதே துவாரங்கள் மூலமாக, உடலின் உள்ளேயும் செல்லுமல்லவா? அதிலும், சூடு பறக்கத் தேய்க்கிறபோது, துவாரங்கள் விரிவடைந்து அவற்றின் மூலமாக எண்ணெய் சுலபமாக உட்செல்லும். தலைவலிக்குத் தேய்க்கப்படும் தைலம் எப்படி சருமம் வழியே உடலினுள் சென்று செயலாற்றுகிறதோ அவ்வாறே எண்ணெயும் செயல்படுகிறது.

தவறாமல் எண்ணெய் தேய்த்துக் குளித்தால், சைனஸ் பிரச்னையையும் தீர்க்கும்.

சிலருக்குக் குளிர்ச்சியான உடல் காரணமாக நல்லெண்ணெய்க் குளியல் ஒத்துக் கொள்ளாது. அப்படிப்பட்டவர்கள் தேங்காய் எண்ணெய் தேய்த்துக் குளிக்கலாம். எண்ணெய் தேய்த்துக் கொண்டு, ஓர் அரை மணி நேரம் நன்றாக ஊறியபின், வெதுவெதுப்பான நீரில் குளிக்க வேண்டும். பச்சைத் தண்ணீரில் குளிப்பதைத் தவிர்ப்பது நல்லது. அன்றைய தினம், எளிதில் ஜீரணமாகக் கூடிய உணவாகச் சாப்பிட வேண்டும். வெயிலில் அலையக் கூடாது. நன்றாக ஓய்வு எடுக்க வேண்டும்; பகல் தூக்கத்தைத் தவிர்க்கவும். வாரம் ஒரு தடவை எடுக்கப்படும் எண்ணெய் குளியல், நம் உடம்பின் பஞ்ச இந்திரியங்களையும் எப்போதும் சுறுசுறுப்பாக வைத்திருக்கும்.

பெண்கள் எண்ணெய் தேய்த்துக் குளித்தபின் நன்றாக ஈரம் போக, சாம்பிராணிப் புகை பிடிப்பது நல்லது. எண்ணெயைச் சிறிது ஓமம் சேர்த்து, இலேசாகக் காய்ச்சி தேய்த்துக் கொள்வது நல்ல பலன் தரும்.

எண்ணெயைப் பற்றிச் சொன்ன கையோடு, சமையலறையில் இருக்கக் கூடிய சில வற்றல்களையும், அவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளுவதால் ஏற்படக் கூடிய பலன்கள் பற்றியும் சொல்ல விரும்புகிறேன்.

மணத்தக்காளி வற்றல் வாய்ப்புண், ரணத்துக்கு மிகவும் நல்லது. மிளகாயை அதிகம் உணவில் சேர்த்துக் கொள்ளுகிற குடும்பங்களில், மணத்தக்காளி வற்றலை நிறைய அளவில் உணவில் சேர்த்துக் கொள்ளுவது கட்டாயம். (வாய்ப்புண்ணுக்கு, மணத்தக்காளி வற்றலைவிட, மணத்தக்காளி கீரையை, சிறிதளவு பச்சையாகவோ அல்லது சமைத்தோ சாப்பிட்டால் சீக்கிரமே நிவாரணம் பெற முடியும்) காரக்குழம்பு வைக்கிறபோது அதிலும் மணத்தக்காளி வற்றல் சேர்த்துக் கொள்ளலாம்.

வயிற்றில் புழுக்கள் இருந்தால், அவற்றை ஒழிக்கும் சாம்பியன் சுண்டைக்காய் வற்றல். பெரியவர்களாக இருந்தால், சுண்டைக்காயை வறுத்து, நேரிடையாகவே சாப்பிடலாம். வறுத்தெடுத்த சுண்டைக்காயைப் பொடி செய்து, சாம்பார் ரசத்திலோ, பொரியலிலோகூட சேர்த்து விடலாம். குழந்தைகள் கூட சாப்பிட்டு விடுவார்கள். சுண்டைக்காய் வற்றல் பொடியை சாதத்தில் சேர்த்து பிசைந்து சாப்பிடலாம். சுவையாக இருக்கும். பொதுவாக வாரம் ஒருமுறை சாப்பிடுவது ஆரோக்கியத்துக்கு வழி செய்யும். குறிப்பாக வயிற்றில் பூச்சித் தொல்லை என்றால், வாரம் மூன்று நான்கு நாட்கள் சாப்பிட்டு வந்தால் பலன் கிடைக்கும்.

அமீபியாசிஸ் காரணமாக வரும் வயிற்றுப் போக்குக்கு, சுண்டைக்காய் வற்றல் மிகவும் நல்லது. வயிற்றுப் போக்குக்கு, சித்த வைத்தியத்தில் கொடுக்கிற மருந்துக்கு 'சுண்டைக் காய் சூரணம்' என்றுதான் பெயர்.

வேப்பம்பூ பற்றியும் சொல்ல வேண்டியது மிக முக்கியம். வயிற்றில் புண், வாயில் புண், வயிற்றில் பூச்சி என்றால் வேப்பம்பூ நல்லது. நன்கு உலர்ந்த வேப்பம்பூ ரசம் வைப்பது, நம் வீடுகளில் வழக்கம்தான். திருமணமாகி, குழந்தை இல்லாத ஆண்கள் வேப்பம் பூவைத் தவிர்ப்பது உசிதம். காரணம் வேப்பம்பூ, குடும்பக் கட்டுப்பாட்டு மருந்து போன்றது!

– அடுத்த இதழில் முடியும்





கட்டிங்

எல்லா அரசியல் கட்சிகளுமே தேர்தல் நிதி வசூலில் மும்முரமாக இறங்கியிருப்பதால், 'கட்டிங் அண்ட் கலெக்ஷன்' விவகாரம் பற்றி ஸ்கேனிங் ரிப்போர்ட் தரும்படி ஆசிரியர் கட்டளையிட்டுவிட்டார். பரபரப்பாகப் புலனாய்வு செய்யப் போய், எங்கேயாவது எக்கச்சக்கமாகி, புத்தூர் கட்டுப் போட்டுக் கொள்ள நாங்கள் தயாரில்லை என்பதால், எங்களுக்குத் தெரிந்த சில கட்டிங் - கலெக்ஷன் விவரங்களைச் சேகரித்துத் தந்திருக்கிறோம். ப்ளீஸ் அட்ஜஸ்ட்!

உஷா நாராயணன் (ஸ்ரீபா ஃப்ளாரிஸ்ட்)

ராட்சச கத்திரியை வைத்துக் கொண்டு 'சதக்', 'சதக்' என்று பூங்கொத்துக்களின் தண்டுகளைக் கட்டிங் செய்து கொண்டிருந்தவரை நெருங்கினோம்...

ஏங்க, உங்க கட்டிங் கலெக்ஷன் எவ்வளவு?

அப்படீன்னா?

இல்லை... மானாவாரியாக பூக்களின் தண்டுகளை வெட்டிச் சாய்ச்சுக்கிட்டு இருக்கீங்களே, இதில் கிடைக்கும் கலெக்ஷன்...

ஓ, அதுவா... கடை போட்ட புதுசில், ஒரு நாளைக்கு எண்பது ரூபாய்தான் கலெக்ஷன் ஆச்சு. இப்போ ஐயாயிரம் ரூபாய் வரை ஆகுது!

உங்களுடையது ஸ்டாண்டர்டு கலெக்ஷனா, சீசனல் கலெக்ஷனா?

சீசனல்தான்.

உங்களுக்கும் 5 வருஷத்துக்கு ஒரு தடவைதான் சீசனா?

ஏங்க இப்படி லொள்ளு பண்றீங்க... 5 வருஷத்துக்கு ஒரு தடவை சீசன் வந்தா, நான் என்னங்க ஆகறது? முன்பெல்லாம் நியூ இயர் தான் சீசன். இப்ப வாலன்டைன்ஸ் டே! அந்த டயத்திலே எவ்வளவு பூ வரவழைச்சாலும் போறலை, காதலர்கள் வந்து அள்ளிக்கிட்டுப் போயிடுறாங்க.

கட்டிங் செய்வது கஷ்டமான



கலெக்‌ஷன் எவ்வளவு?



வேலையா?

டச் ரோஸஸ், கார்னேஷன், கிளாடியோலா, ஜெபரா, ஆர்கிட்...

ஐயோ, யாரைத் திட்டினாலும் தமிழிலியே திட்டுங்க!

இல்லீங்க, இதெல்லாம பூக்க ளோடே பெயர்கள். இந்தப் பூக் களோட தண்டுகளை வெட்றது ரொம்பக் கஷ்டம்னு சொல்ல வந்தேன். 'கிராஸ் கட்' செஞ்சு, ரசாயனம் கலந்த தண்ணி யில் போட்டு, ஃப்ளோரோ ஃபோமில் செட் செய்து...

'வயலும் வாழ்வும்' நெடி அடிக்கவே இடையில் கட் செய்தோம்.

பெரிய புள்ளிகளிடம் கலெக்‌ஷன் செய்வதுண்டா?

நீங்க என்ன ஒரு தினுசாவே கேள்வி கேட்கிறீங்க... மேயர் ஸ்டாலினிலிருந்து பிரகாஷ்ராஜ், முரளி, அர்ஜுன், நக்மா, ஜோதிகா, வினீத், கரண், பார்த்திபன், அஜீத் வரைக்கும் நிறைய வி.ஐ.பி.ங்க என்னோட வாடிக்கையாளர்கள்தான்.

அடே...ங்கப்பா! என்று வாயைப் பிளந்த மேனிக்கு அடுத்த ஸ்பாட்டுக்கு விரைந்தோம்.



ஆர்.ராஜா (ஆர்.ஆர்.ஹேர் டிரஸ்ஸர்ஸ்)

"ஆர்மியா, குணாலா, அப்பாஸா, டைட்டானிக்கா..." என்று ஆயுதங்கள் சகிதமாக ஒருவர் மிரட்டிக்கொண்டே நெருங்கினார்.

"பயப்படாதீங்க, என்ன கட்டிங் வேணும்?"

"கட்டிங் எல்லாம் வேண்டாம்... கட்டிங் கலெக்‌ஷன் தான் வேணும்"

என்னது, கட்டிங் கலெக்‌ஷன் வேணுமா...?

இ..இ...இல்லீங்க, உங் களோட கட்டிங் கலெக்‌ ஷன் எவ்வளவுன்னு தெரி யணும்...

ஓ. அதுவா... தினமும் முந்நூறு ரூபாய் கிடைக் கும். ஞாயிற்றுக்கிழமை, விடுமுறை நாள்னா, ஜாஸ்தி கிடைக்கும்னு வெச்சுக்கங்களேன்.

கலெக்‌ஷன்னா கும்பல் தானே... நீங்க தனி ஆளாவா செய்யறீங்க?

உதவிக்கு ஆள் எல்லாம் வெச்சுக்கிட்டா கட்டுப்படி ஆகாதுங்க. அதனாலே,

கட்டிங்கும் சரி, கலெக்ஷனும் சரி, நானே தான் ஒண்டியா சமாளிக்கிறேன்!

அட, நம்முடைய அலைவரிசைக்கு மாறிவிட்டாரே!

என்னோட லட்சியமே ஜென்ட்ஸ் பியூட்டி பார்லர் ஆரம்பிக்கணும்ங்கிறது தான். கழுத்து சொடுக்கு எடுத்துவிட்டு, தலைக்கு எண்ணெய் தேய்த்து, மசாஜ் செஞ்சு, தோள்பட்டையை நீவி பிடிச்சு விட்டா... அந்த சுகத்திலே அப்படியே தூங்கிப் போய்டுவீங்க. ஹெட் மாலிஷ் ட்ரை பண்றீங்களா?

நாங்க இன்னொரு நாள் வந்து தூங்கறோம், ரொம்ப நன்றிங்க!

எஸ்கேப் ஆனோம்.

எஸ். உஷாராணி *(ஹருஷ்யா பியூட்டி கிளினிக்)*

கையில் இருந்த கத்திரியைத் தூரிகையாகப் பாவித்து, ஒரு பெரிய ஓவியனைப் போல் கருமமே கண்ணாக கட்டிங் செய்து கொண்டிருந்தார் உஷாராணி. (இவருக்கு ஓவியம் வரையவும் தெரியுமாம்!)

என்னங்க, என்னங்க...

சொல்லுங்க...

ஒரு மறக்க முடியாத கட்டிங் - கலெக்ஷன் அனுபவம் வேணும்ங்க...

என்னங்க... வேலை நேரத்திலே...

ஒண்ணே ஒண்ணு மட்டும் சொல்லிடுங்க, இடத்தைக் காலி பண்ணிடுறோம்...

கத்திரியைக் கீழே வைத்துவிட்டு தொண்டையைச் செருமிக் கொண்டார்.

ஒரு தடவை, ஒரு பொண்ணு வந்து டயானா ஹேர்கட் செய்யச் சொன்னது. ஆனால், அதோட முகத்துக்கு 'டயானா' நிச்சயம் பொருந்தாதுன்னு தெரிஞ்சு 'பிரெஞ்ச் கட்' செஞ்சுவிட்டேன். கட்டிங் முடிஞ்ச உடனே, கண்ணாடியில் பார்த்திச்சு, அவ்வளவுதான். 'என் அழகே போச்சு, எப்படி இப்படி வெட்டலாம்...' அப்படீன்னு தாம்தூம்னு ஒரே ரகளை. நான் என்ன சொன்னாலும் கேட்கலை.

ஆனால் மறுநாளே திரும்ப வந்து 'இந்த கட்டிங் எனக்கு ரொம்ப அழகா இருக்கிறதா என் கணவரும் தோழிகளும் பாராட்டறாங்க, ரொம்ப தாங்க்ஸ்'னு சொல்லி ஐம்பது ரூபாய் அதிகமா கொடுத்திட்டுப் போச்சு... மறக்க முடியாத கட்டிங் கலெக்ஷன் அதுதான். ஆமா, ஏன் இதெல்லாம் கேட்குறீங்க?

சும்மானாச்சுக்கும்தான், நீங்க வெட்டுங்க...

என்று கத்திரியை அவர் கையில் பழையபடி திணித்துவிட்டு ஜூட் விட்டோம்.

கே.எம். மனோகர் *(கே.எம்.டெய்லர்ஸ்)*

''முன்னாடி எல்லாம், தீபாவளி, பொங்கல்னா ஒரே கொண்டாட்டம்தான். ஆனா, இப்பத்தான் எல்லாரும் ரெடிமேடு வாங்கிடறாங்களே...'' என்று கலெக்ஷனைப் பற்றிய புலம்பலோடு ஆரம்பித்தார் பிளவுஸ் ஸ்பெஷலிஸ்ட் மனோகர்.

கட்டிங் உதவி...

உதவிக்கு ஒரு ஆளைப் போட்டிருக்கேன். ஆனா அவரை நான் வெறும் உதவியாளனா நினைக்கறதில்லே. எப்படி என் முதலாளி, என்னைத் தம் குடும்பத்து ஆளா நினைச்சாரோ, அதே போல, நானும் என்கிட்டே வேலை செய்பவரை, என் சகோதரனா, குடும்பத்தில் ஒருத்தனா, ரத்தத்தின் ரத்தமா தான் நினைக்கிறேன்...

அவர் இப்படி உணர்ச்சிவசப்பட்டு பேசியவுடன் பழக்கதோஷத்தில் கைதட்டிவிட்டு, ஒன்றும் புரியாமல் அவர் முழிக்க, 'எலக்ஷன் டைம், வேறொண்ணுமில்லை, தாங்க்ஸ்!' என்று நடையைக் கட்டினோம்.

- 'கல்கி டிடெக்டிவ் டீம்'


ரகசிய காமெரா : **ஸ்ரீஹரி**

''தலைவரே! கூட்டணியில நம்ம கட்சிக்கு எழுபது தொகுதிகள் ஒதுக்கி இருக்காங்க.''

''பரவாயில்லையே...''

''அட! ஒவ்வொரு தேர்தலுக்கும் ஐந்து தொகுதினு வரப்போற 14 தேர்தலுக்குச் சேர்த்து ஒதுக்கி இருக்காங்க.''

- பா. ஜெயக்குமார்





எல்லாவித சர்க்கரை வியாதிகளுக்கும் தெய்வீக மூலிகை மருத்துவம்!



பல வருட ஆராய்ச்சியின் மூலம், வேதங்களும், ஞானிகளும் போற்றியதும், கடவுளுக்கு சமமாகவும், நம் நாட்டின் பல பொக்கிஷங்களில் ஒன்றாகவும் கருதக் கூடிய பல தெய்வீக மூலிகைகளைக் கொண்டு பக்க விளைவுகள் இல்லாத வகையில், நாமே தயார் செய்த தெய்வீக மூலிகை மருந்துகள் மூலம் அடிக்கடி இரவில் சிறுநீர் கழித்தல், தேவையில்லாத போதும் அதிக அளவில் தண்ணீர் தாகம், சிறுவேலைகள் செய்தாலும் களைப்பு, பலஹீனம், சரியான உணவு உட் கொண்டும் எடை குறைவு, உடல் மெலிவு, அதிகமான பசி, அதிக அளவு தண்ணீர் குடித்தும் நாவறட்சி, தோல் வறட்சி, பரிசோதனையின் போது இரத்தத்திலும், சிறுநீரிலும் சர்க்கரையில் அளவு அதிகம் இருத்தல், உடலில் காயம் ஏற்பட்டால் விரைவில் ஆறாமை, ஆண்மைக் குறைவு கால் பாதம் எரிச்சல், குத்தல், மரத்துப்போகுதல், விக்கம், மயக்கம், BP, கண்பார்வை குறைவு, மூட்டுவலி, போன்ற குறைகளை உடைய நாட்பட்ட சர்க்கரை நோயாளிகளுக்கும் எந்த வித மான அறிகுறிகளும் இல்லாத ஆரம்ப நிலை சர்க்கரை நோயாளிகளுக்கும், குழந்தை சர்க்கரை நோயாளிகளுக்கும் (Juvenile Diabetics) சிறந்த முறையில் ஆலோசனைகளும் & சிகிச்சைகளும் அளிக்கப்படுகின்றது.

மற்றும் சிறுநீரகக்கோளாறு, எல்லாவிதமான இதயநோய், எய்ட்ஸ், பல வகையான புற்றுநோய் ஆண்மைக்குறைவு குழந்தையில்லாத குறை, அல்சர், மூட்டுவலி, ஆஸ்துமா, சொரியாசிஸ் எனப்படும் எல்லாரக சர்மநோய்களுக்கும் தரமான மூலிகை சிகிச்சைப் பெறலாம். அணுக வேண்டிய முகவரி



தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

தலைமை முகவரி : Dr. M.குருபரன் & Dr. M. சபாபதி, Dr. M.சிவசக்தி, S/O. Dr. C.K.மாணிக்கவாசகம்
P.B. NO. 30, 3,திருந்தாத முதலி நகர் (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர், வேலூர் DT 635601 ✆ : 04179-20469, 22769
சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - 600 010. ✆ : 044-6424285, 6427638.

இரு முகவரிகளிலும் ஆலோசனை நேரம் காலை 10.00-1.00 P.M. மாலை 5.00-7.00 P.M.

ஒவ்வொரு மாதமும் வெளியூர்களில் டாக்டரை நேரில் சந்திக்க.

வேலூர் 2 ந்தேதி 12.00 P.M. TO 2 P.M. (N.S.K. லாட்ஜ் 24/A, ஆரணி ரோடு பஸ் ஆபீஸ் அருகில்) ✆ : 0416/21029	**காஞ்சீபுரம்** 2 ந்தேதி 5 P.M. TO 6 P.M. ராஜம் லாட்ஜ் பஸ் நிலையம் அருகில் காமராஜர் தெரு ✆ : [illegible]	**கடலூர் (S.A. DT.)** 4 ந்தேதி 9 A.M. TO 11 A.M. ஆர்காடு உட்லண்ட்ஸ் ஹோட்டல். ✆ : [illegible]	**விழுப்புரம்** 4 ந்தேதி 2 P.M. TO 3 P.M. ஹோட்டல் ஆனந்த், பஸ் நிலையம் எதிரில் ✆ : [illegible]	**திருவண்ணாமலை** 4 ந்தேதி 5 P.M. TO 6 P.M. ராஜா லாட்ஜ் பஸ் நிலையம் எதிரில் ✆ : [illegible]
மும்பை 7 & 8 ந்தேதி 10 A.M. TO 8 P.M. The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga (CR), PH : 022/4011588	**பெங்களூர்** 9 ந்தேதி 11 A.M. TO 1 P.M. ஹோட்டல் [illegible] [illegible] அருகில் [illegible] ரோடு ✆ : [illegible]	**ஓசூர்** 9 ந்தேதி 4 P.M. TO 5 P.M. [illegible] லாட்ஜ், பாகலூர் ரோட். ✆ : [illegible]	**சேலம்** 12 ந்தேதி 11 A.M. TO 1 P.M. ஹோட்டல் செல்வம், புதிய பஸ் நிலையம் எதிரில் ✆ : [illegible]	**ஈரோடு** 12 ந்தேதி 4 P.M. TO 6 P.M. ஹோட்டல் ஆக்ஸ்போர்டு, பஸ் நிலையம் எதிரில், ✆ : [illegible]
கோயம்புத்தூர் 13 ந்தேதி 9 A.M. TO 1 P.M. [illegible] லாட்ஜ் [illegible] [illegible] ✆ : [illegible]	**மதுரை** 14 ந்தேதி 9 A.M. TO 11 A.M. ஹோட்டல் [illegible], [illegible] தெரு. ✆ : [illegible]	**தஞ்சாவூர்** 14 ந்தேதி 5 P.M. TO 7 P.M. அசோகா லாட்ஜ். ✆ : [illegible]	**திருச்சி** 15 ந்தேதி 9 A.M. TO 11 A.M. ஹோட்டல் ஆனந்த், சென்ட்ரல் பஸ் நிலையம் அருகில். ✆ : [illegible]	**நாமக்கல்** 15 ந்தேதி 2 P.M. TO 4 P.M. ஹோட்டல் தேவி [illegible] ✆ : [illegible]
நியூடெல்லி 18&19 ந்தேதி 10 A.M. TO 8 P.M. South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh ✆ : [illegible]	**தர்மபுரி** 17 ந்தேதி 8 A.M. TO 10 A.M. ஸ்ரீ [illegible] லாட்ஜ், 103, அதியமான் [illegible] ரோடு, ✆ : [illegible]	**திருப்பூர்** 21 ந்தேதி 2 P.M. TO 3 P.M. [illegible] லாட்ஜ், [illegible] [illegible] தெரு ✆ : [illegible]	**உடுமலைபேட்டை** 21 ந்தேதி 6 P.M. TO 7 P.M. ஹோட்டல் [illegible], பஸ் நிலையம் எதிரில் ✆ : [illegible]	**திண்டுக்கல்** 22 ந்தேதி 9 A.M. TO 11 A.M. ஹோட்டல் [illegible], பஸ் நிலையம் [illegible] ✆ : [illegible]
தூத்துக்குடி 23 ந்தேதி 5 P.M. TO 6 P.M. ஹோட்டல் [illegible], [illegible] ரோடு, ✆ : [illegible]	**திருநெல்வேலி** 24 ந்தேதி 8 A.M. TO 11 A.M. ஹோட்டல் ஸ்ரீ [illegible], மதுரை ரோடு. ✆ : [illegible]	**நாகர்கோவில்** 24 ந்தேதி 2 P.M. TO 3 P.M. ஹோட்டல் [illegible], மீனாட்சிபுரம் ✆ : [illegible]	**விருதுநகர்** 25 ந்தேதி 8 A.M. TO 10 A.M. [illegible] லாட்ஜ், மதுரை ரோடு. ✆ : [illegible]	**கரூர்** 25 ந்தேதி 2 P.M. TO 4 P.M. [illegible] லாட்ஜ், [illegible] ✆ : [illegible]

தகவல் : SUN, RAJ, VIJAY, D.D T.V. களில் எமது பேட்டியை காணத்தவறியவர்கள். டாக்டரின் மூலிகைகள் பற்றிய 26 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய **"எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்"** இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய **"என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்"** என்ற இரு புத்தகத்தையும் பதிவுத் தபாலில் பெற ரூ. 130/-மேற்கண்ட முகவரிக்கு D.D. அல்லது M.O. அனுப்பவும்.

வட்டமேஜை

ஜிங் சக்!

✉ நீர் கலைஞரின் ஜால்ரா என்பதுதான் ஊரறிந்த விஷயமாயிற்றே, பக்கத்துக்குப் பக்கம் அதைப் பறைசாற்றிக் கொள்ளாவிட்டால் என்ன?
- கலைஞர் புராணமாகவே இருக்கும் அக்னிசர்மாவின் பக்கத்தைத்தான் சொல்கிறேன்!
சென்னை - 63, என்.வி. சீனிவாசன்.

லொள்ளோ லொள்ளு!

✉ அரசியல் தலைவர்களில் 'யார் அழகு?' என்ற 'அதி முக்கிய' கேள்வியோடு மக்களைச் சந்தித்த உங்கள் லொள்ளுத்தனம் வாழ்க!
பொன்மலை, ஆர். பிரகாஷ்.



யூ டூ கல்கி!

✉ 'அன்பளிப்பு' வலைக்குள் கல்கியும் சிக்கத்தான் வேண்டுமா? - வண்ணப்படங்களைச் சொல்கிறேன்!
மும்பை - 98, வி. பிச்சுமணி.

குறையொன்றுமில்லை!

✉ கிருஷ்ணபாகவதரின் உபன்யாசம் படித்து விழுந்து விழுந்து சிரித்தேன். நேரில் பார்க்காத, கேட்காத குறை தீர்ந்தது!
கரூர் - 4, ஆர். ராஜலட்சுமி.

பிளாக் ஷீப்!

✉ அரசியல் பிடிக்காது, ஆனால் ஜோதிபாசுவைப் பிடிக்குமே...! துணிச்சலாக பதில் சொன்ன அபிராமி ஒரு வித்தியாசமான நடிகைதான்!
கடலூர் - 1, ஏ. நாகராஜன்.

தங்கமலை ரகசியம்!

✉ அரசியலில் தனித்தன்மையை விரும்பும் ப. சிதம்பரத்தைப் பற்றிய ரகசியங்களை அக்குவேறு ஆணி வேறாக அலசிவிட்டு, 'சிதம்பர ரகசியங்கள்' என்று தலைப்பை மேதாவித்தனமாக வைத்தது ஏனோ?
வடபழனி, சி. மகேஷ்.

மாறவே மாறாத கூட்டணி

✉ மாறாத கூட்டணி என்ற தலைப்பில் அரசியல் தொடர் பற்ற பிரபலமானவர்களைச் சந்தித்தது எல்லாம் சரி. ஒரு ஸ்பெஷல் கேஸாக, மாறாத கூட்டணியின் இலக்கணமாக வாழும் ஜெ-சசி கூட்டணியின் வாயையும் கிளறியிருக்கலாம்!
விசலூர் - 1, ஜி.ஜி. கிருஷ்ணன்.

லாங் டைம், நோ ஸீ

✉ குறிஞ்சி மலராக, நீண்ட இடைவெளிக்குப் பிறகு பூத்த திருப்பூர் கிருஷ்ணனின் கதை, ஓர் உலுக்கு உலுக்கி விட்டது. இதயநாதனின் மகள் என்ன பாடுபடப் போகிறாளோ என்று பதற்றமாக இருக்கிறது!
சென்னை - 33, டி. சௌந்தரராஜன்.


மச்சான் போனால் கம்பளி என்னுது!

அரைவேக்காடு

✉ புலமைப்பித்தனின் பாட்டு 1977ல் எழுதப்பட்டது, 1997-ல் அல்ல. தேர்தல் கூட்டணிக் கணக்கை எண்ணிக் கொண்டே கட்டுரைகள் எழுதினால் இப்படித்தான்!
திருவெண்காடு, ஆர். இரகு.

ஜே!

✉ 'மச்சான் போனால் கம்பளி என்னுது' டைப் அரசியல்வாதிகளுக்கு மத்தியில் 'ஜனநாயகப் பேரவை' என்ற சத்தியாகிரகத்தைத் தொடங்கியிருக்கும் ப. சிதம்பரம் தமிழ்நாட்டுக்கு ஒரு வரப் பிரசாதம்!
கோவை - 6, பி. தங்கவேல்.





2001 ஏப்ரல் 8
விக்ரம பங்குனி 26
மலர் : 59
இதழ் : 36

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



தெஹல்கா விவகாரமும் தேர்தல் நிதியும்!

தெஹல்கா விவகாரம் அரசை ஓர் உலுக்கு உலுக்கியதன் விளைவாக திடீர் சுறுசுறுப்புடன் சில காரியங்கள் நடக்கின்றன.


உள்துறை அமைச்சர் அத்வானியின் தலைமையில் உருவாகியிருக்கும் அமைச்சர் குழுவின் சிபாரிசின் பேரில், ஒரு புதிய தேசிய பாதுகாப்பு அமைப்பே ஏற்படுத்தப் படவிருக்கிறது. அதன் ஓர் அங்கமாக, ராணுவ உபகரணங்கள் வாங்குவதற்கென்றே ஒரு வாரியம்!

எந்த ராணுவ உபகரணம் வாங்குவதானாலும் இந்த வாரியத்தின் உறுப்பினர்கள் சம்மதத்தைப் பெறாமல் வாங்கிவிட முடியாது.

இந்த ஏற்பாடு தவிர, ராணுவ ஊழியர்களுக்கென ஒரு தனித்தலைவர், முப்படைகளையும் உள்ளடக்கிய ஓர் உளவுப் பிரிவு என்று பல புதுமைகள் புகுத்தப்படவுள்ளன.

ராணுவ உபகரணங்கள் வாங்குவது குறித்து முடிவெடுக்க ஒரு தனிக்குழு இயங்குவது லஞ்ச-ஊழலைத் தவிர்க்க உதவுமா என்பதுதான் கேள்வி.

மேற்படி குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் நேர்மையாளராயிராது போனாலும், தவறுக்குத் துணிபவரைத் தட்டிக் கேட்க ஓரிரு நேர்மையாளர் இருந்தாலும் போதுமானது.



ஆனால், குழு உறுப்பினர்களை எந்த அடிப்படையில், யார் தேர்ந்தெடுக்கப் போகிறார்கள் என்பது இன்னமும் தெளிவுபடுத்தப்படவில்லை.


நடந்து முடிந்த தெஹல்கா விவகாரத்தைக் கொஞ்சம் ஆராய்ச்சிக் கண்ணோட்டத்துடன் அணுகினால், 'லஞ்சம்' பெற்றுக் கொண்ட நபர்களுள் ஒருத்தருக்குக்கூட ராணுவ அமைச்சகத்துடன் தொடர்பு இல்லை. ஆனால், தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி காரியங்கள் சாதிப்பதாக ஏமாற்றி அவர்கள் பணம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

யஷ்வந்த் சின்ஹாவை முன்பின் அறியாத ஆர்.கே. ஜெயின், அவர் குறித்து இல்லாததையும் பொல்லாததையும் பேசிவிட்டு, இப்போது வக்கீல் நோட்டீஸ் அனுப்பப்பெற்ற பிறகு, மன்னிப்புக் கோரியிருக்கிறார்.

இந்தச் சம்பவங்களை நோக்குகையில், சந்தர்ப்பம் கிடைத்தால் பணம் பண்ண அரசியல் கட்சியினர் துடிப்பாய் இருப்பது நிதர்சனமாகத் தெரிகிறது. செல்வாக்கைப் பயன்படுத்தி காரியத்தைச் சாதித்துக் கொடுக்கத்தான் என்றில்லை... காரியத்தை சாதிக்கும் உத்தேசமேயின்றிக் கூட, செல்வாக்கு இருப்பதாகப் பொய்யாகக் காட்டிக்கொண்டு, பணம் பெற்றுக்கொள்வது வாடிக்கையாகிவிட்டது; அதற்குப் பணம் கொடுப்பது என்பதும் உலகளாவிய வழக்கமாகவே ஆகிவிட்டது.

இந்நிலையில், அனைத்து ராணுவ உபகரணங்களை வாங்குவதற்கும் ஒரு சிறு குழு பொறுப்பாக்கப்படும்போது, வேறொரு அபாயம் தலைதூக்க வாய்ப்பு இருக்கிறது. கட்சி மட்டத்திலும் அமைச்சக வட்டாரங்களிலும் அதிகாரிகள் மத்தியிலும் ராணுவ நிலைகளிலும் யாருக்கு செல்வாக்கு இருக்கிறது என்று தேடியலைந்து லஞ்சம் கொடுத்து ஆர்டர் பிடிப்பதற்குப் பதிலாக, ஆயுத கொள்முதல் பொறுப்புக் குழுவினரை மட்டும் 'கவனித்து விட்டால்' போதும் என்கிற பேரபாயம் உருவாகும் வாய்ப்பு நிறையவே இருக்கிறது. ஆகவே, இக் குழுவில் யார் நியமிக்கப்படப் போகிறார்கள்? யாரால் நியமிக்கப்படப் போகிறார்கள் என்பது மிகவும் முக்கியம்.

அடிப்படையில் ராணுவ உபகரணங்களை விற்றாக வேண்டிய கட்டாயம் அவற்றை



உற்பத்தி செய்கிற நிறுவனங்களுக்கு இருக்கிறது.

ஆனால், வாங்க வேண்டிய கட்டாயம் என்பது ஒரு கட்டத்துக்கு மேல் அதிகரிக்காது; குறைந்துகொண்டே வரும். ஆகவே, தங்கள் சரக்குகளைத் தள்ளிவிட பல்வேறு தவறான நடைமுறைகளை உற்பத்தி நிறுவனங்கள் கையாளவும் கூடும்.

அரசு நிர்ணயிக்கும் ராணுவ உபகரணக் கொள்முதல் குழுவை, நேரடியாகப் பணியவைக்க இயலாவிட்டால், அரசியல் செல்வாக்கு உடையவர்கள் மூலம் அழுத்தம் தரப்படும்.

அரசியல் கட்சிகளுக்கோ சதா சர்வ காலமும் தேர்தல் நிதிக்கான தேவையிருந்து கொண்டேயிருக்கிறது. எனவே, அவை சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் தொழிலதிபர்களிடம் பணம் பெற்றுக் கொள்கின்றன.

தேர்தலில் ஒரு வேட்பாளர் செலவழிக்கக்கூடிய பணத்துக்கு உச்சவரம்பு உள்ளது. ஆனால் ஒரு கட்சி அவர் சார்பில் செலவழிக்கக்கூடிய தொகைக்கு உச்சவரம்பு கிடையாது. இத்தகைய முரண்பாடுகளை நீக்கி, தேர்தல் செலவுகளை முறைப்படுத்தி, கட்டுப்படுத்துதல் உள்பட, பலவிதமான தேர்தல் சீர்திருத்தங்கள் அமுலுக்கு வந்தால், பணத் தேவை குறைந்து, லஞ்ச-ஊழலும் குறைய வாய்ப்பு உண்டு. ஆனால், கட்சி நிதி என்ற பெயரில், ரசீது தராமல் வாங்கப்படும் தொகையில் சொந்த ஆதாயம் தேடிக் கொள்ளும் தலைவர்கள்தான் இங்கு மிகுதியாக இருக்கிறார்கள். அந்த ஆதாயத்தை இழக்க விரும்பாத அரசியல்வாதிகள் நிச்சயமாக தேர்தல் சீர்திருத்தங்களுக்காகப் போராடவோ முனையவோ போவதில்லை.

அப்படி தேர்தல் சீர்திருத்தங்கள் வராத வரையில், கட்சிக்காக நன்கொடை என்று கூறி, பணம் வாங்குவதோ லஞ்சம் பெறுவதோ குறையாது. இதைத்தான் நமது அமைப்பில் (சிஸ்டம்) உள்ள குறைபாடு என்று பிரதமர் கூறுகிறார். இதைச் சரிப்படுத்துவதற்காக இந்த அரசு உத்தேசித்துள்ள நடவடிக்கை, 'நோயை விட மருந்து கொடியது' என்ற நிலைமைக்குக் கொண்டு போய்விடாமலிருந்தால் சரி. ○

திருச்சி மாநாடு நீங்கள் எதிர்பார்த்த படி அமைந்ததா?

பா.ம.க.வுக்கு 'வன்னியர் கட்சி' என்று இருந்த இமேஜ் மாறிவிட்டது. தமிழகத்தின் தெற்கு மற்றும் மேற்கு மாவட்டங்களில் வன்னியர்கள் கிடையாது. ஆனால் எங்கள் மாநாட்டிற்கு அந்தப் பகுதியிலிருந்தும் நிறையத் தொண்டர்கள் வந்திருந்தனர். தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், நாயுடு மற்றும் கவுண்டர் பிரிவு மக்களிடம் கட்சி வேகமாக வளர்ந்திருக் கிறது. இன்று தமிழகத்தின் இரண்டாவது பெரிய கட்சி நாங்கள்தான்.

வட மாவட்டங்களில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர், விடுதலைச் சிறுத்தை ஆதர வாளர்களாக மாறிவிட்டதாகச் சொல் கிறார்களே?

துவக்கத்திலிருந்தே எங்களுடன் இருக் கும் தாழ்த்தப்பட்ட மக்கள் எங்களோடுதான் இருக்கிறார்கள். ஆனால் 'விடுதலைச் சிறுத்தைகள்' திருமாவளவன் மதுரைக்குத் தென்பக்கம் ஜாதி மோதல்களை உருவாக்கி அவரது கட்சியை வளர்க்கப் பார்த்தார்.

பார்க்கக் கூடாது. சமீபத்தில் பாண்டிச்சேரி மாநிலத்தில் போலீஸ் என்னைக் கொலை செய்ய சதி தீட்டிய இரண்டு பேரைக் கைது செய்தது. எவ்வளவோ முறை எடுத்துச் சொல்லியும் கருணாநிதி அரசு எனக்குப் பாதுகாப்பு கொடுக்கவில்லை. கடைசியில் மத்திய உள்துறை அமைச்சக உத்தரவின் பேரில் 'ஒய்' பிரிவு பாதுகாப்பு வழங்கப்பட் டது. இப்படி ஒரு வன்முறைக் கும்பல் என்னைக் கொலை செய்யும் நோக்கத்துடன் சுற்றி வரும்போது, எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில் எங்கள் கட்சித் தொண் டர்கள் கோபமடைந்து பேசுவதைத் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. 'எனக்கு ஏதேனும் நடந்தால்' என்ற அனுமானத்தின் பேரில் பேசப்படும் உணர்வுரீதியான பேச்சு அன்று காடுவெட்டி குரு பேசிய பேச்சு.

ஜாதிச் சங்கமாக துவங்கிய நீங்கள் அரசியல் ரீதியாக வெற்றி பெற்றிருப்பதை முன்னுதாரணமாகக் கொண்டு இன்று பல ஜாதி அமைப்புகள் கட்சிகளாக உருவாகி யுள்ளன. இது ஆரோக்கியமான ஜன நாயகம் அல்லவே...

"போயஸ் தோட்டத்துக்குத் தூதுவிட்டவர் கலைஞர்தான்!"

டாக்டர் ராமதாஸ் பேட்டி

அங்கு அது நடக்காததால் வடக்குப் பக்கம் வந்து, படித்த, தாழ்த்தப்பட்ட இன இளை ஞர்களைத் தவறான பாதைக்குத் திருப்பி யிருக்கிறார். "அடங்க மறு; அத்து மீறு" இது தான் அவர்களின் கோஷம். தற்போது சிறுத்தைகளுடன் கூட்டணி அமைத்திருப் பதைப் பார்க்கும்போது கலைஞரின் உள் நோக்கம் புரிகிறது. இப்போது என்ன நிலை என்றால் என்னைக் கொல்வதற்கும் 'அவர் கள்' தயாராகி விட்டார்கள்.

என்ன இருந்தாலும் மாநாட்டில் பேசிய காடுவெட்டி குரு உங்கள் எதிரி லேயே 'ஐயாவுக்கு ஏதாவது நேர்ந்தால் ரத்த ஆறு ஓடும்' என்றதும் 'ஒரு காவல் நிலையம் இருக்காது' என்றதும் வரம்பு மீறிய வன்முறைப் பேச்சல்லவா?

அவரது பேச்சைத் தனியாகப் பிரித்துப்

நூற்றுக்கணக்கான படித்த வன்னியர் இளைஞர்கள் விரக்தியில் தீவிரவாதத்தை நாடாமல், அவர்களை நல்வழியில் திருப் பியதில் வன்னியர் சங்கத்துக்குப் பெரும் பங்கு இருக்கிறது. மாமல்லபுரத்தில் பல வருடங்களாக இளைஞர் பெருவிழா என்று நடத்தி வருகிறோம். இது தவிர மகளிர் விழா என்று ஆண்டுதோறும் கொண்டாடி, பெண்களின் உரிமைகள், சுயசார்பு ஆகியவை பற்றி அவர்களுக்கு விழிப் புணர்வு ஊட்டுகிறோம். பா.ம.க என்று கட்சி துவங்கிய பிறகு ஒட்டு மொத்த பிற் பட்டவர்களின் சமூகநீதிக்காக பல போராட் டங்களை நடத்தி இருக்கிறோம். இட ஒதுக்கீடு போராட்டத்தில் 21 உயிர்களைப் பலி கொடுத்திருக்கிறோம். கர்நாடகத் தமிழர்கள், ஈழத் தமிழர்கள் என்று எங்கெல்











லாம் தமிழர்கள் உரிமை நசுக்கப் படுகிறதோ அதைக் கண்டித்து பா.ம.க போராடியிருக்கிறது. எங்கள் இருபது ஆண்டு கால வரலாறு என்பது வீரப் போராட்டங்களையும், விழிப்புணர்வு களையும் கண்ட வரலாறு. எங்களை நீங்கள் இப்போது தோன்றியுள்ள ஜாதி அமைப்புகளுடன் ஒப்பிடவே கூடாது. குறுகிய அரசியல் நோக்கத்துடன், தேர்தலை மனத்தில் வைத்துத் துவக்கப்பட்ட அமைப்புகள் அவை. நேற்று பெய்த மழையில் முளைத்த காளான்கள்.

முன்பு கலைஞருடன் கூட்டணி; இப்போது ஜெயலலிதா வுடன் கூட்டணி. உங்கள் பார்வையில் அவர்களின் அணுகுமுறை எப்படி?



வன்முறைக் கும்பலான சிறுத்தைகள் மீது நடவடிக்கை எடுக்காதது மட்டுமல்ல, எங்கள் கட்சிக்காரர்கள் 21 பேரை தேவையில்லாமல், தேசியப் பாதுகாப்பு சட்டப்படி சிறையில் தள்ளி விட்டது கலைஞர் அரசு. தோழமைக் கட்சி என்றும் பார்க்காமல் எங்களை அழிக்க நினைத்தார்கள். எங்கள் கட்சியை உடைத்து 'தமிழ் பா.ம.க' என்று தீரனை வளர்க்கப் பார்த்தார்கள். கடந்த 20, 30 ஆண்டு கால தமிழக அரசியல் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் கலைஞரால் சிதைக்கப்பட்ட அமைப்புகள், கட்சிகள் ஏராளம். இதுபற்றி 500 புத்தகங்கள் போடலாம். மத்தியில் உள்ள எங்கள் அமைச்சர்களையும் விலக்கிக் கொண்டு, அணி மாறியிருக் கிறோம் என்று சொன்னால் அதற்குக் காரணம் கலைஞர் செய்த சித்ரவதைதான். சுருக்கமாகச் சொன்னால் போயஸ்தோட்டத்துக் கதவைத் திறந்து எங்களை உள்ளே தள்ளி விட்டவர் கலைஞர்தான். ஆனால் ஜெயலலிதா அவர்களிடம் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் வழக்கம் இல்லை. எது முடியும், முடியாது என்பதை பட்டென்று சொல்லி விடு கிறார். ஒரு முடிவு எடுத்தால் அதில் உறுதியாக இருக்கிறார்.

ஜெயலலிதா தலைமையில் நல்லாட்சி அமைய அர்ப் பணித்துக் கொள்வதாக மாநாட்டில் தீர்மானம் போட்டிருக் கிறீர்கள்! அவர் தம்மைத் திருத்திக் கொண்டுவிட்டதாக நம்புகிறீர்களா?



"எந்தக் கட்சியுடன் எங்க கட்சி கூட்டணி வச்சுக்கிறதுனு தீர்மானிக்க கொஞ்சம் அவகாசம் தேவைப்படுது!"

"அதுக்காக தேர்தலை ஆறு மாதம் தள்ளிப் போடச் சொல்றதா? அதெல்லாம் முடியாது!"

- உ. ராஜாஜி




"ஆனாலும் பக்கிரி இவ்வளவு மோசமா நடந்துக்கக் கூடாது!"

"ஏன்? என்ன செய்தான்?

"பொண்ணு மாப்பிள்ளைக்கு மாலைக்குப் பதிலா சைக்கிள் செயின் மாத்திக்கச் சொல்லிக் கொடுக்கிறான்!"

- எஸ். உஷாராணி



"டி.வி. பெட்டிக்கு முன்னால் உட்கார்ந்து என்ன செய்றே? வந்து சோறு போடுடி!"

"இருங்க, சரத்குமார் 'எங்கேயும் போயிடாதிங்க. அங்கேயே இருங்க'ன்னு சொல்லியிருக்கார்!"

- செ. ரா. ரவி

ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் நிர்வாகம் நன்றாகவே இருந்தது. சில அமைச்சர்கள், அதிகாரிகள் அடித்த கொட்டம் காரணமாக அவரது ஆட்சிக்கு அவப் பெயர் ஏற்பட்டது. கடந்த கால குறை பாடுகள் களையப்பட்டு நல்லாட்சியைத் தர ஜெயலலிதா அவர்களால் முடியும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். தேர்தலில் அவர் போட்டியிட முடியுமா; முடியாதா என்றெல்லாம் சர்ச்சைகள் ஒருபுறம் இருந்தாலும் அவரை முதல்வராக முன் நிறுத்திதான் எங்கள் பிரசாரம் அமையும்.

பாண்டிச்சேரியைப் பொறுத்தமட்டில் உங்கள் அணியில் காங்கிரஸ் போக்கு காரணமாக குழப்பம் நீடித்துக் கொண்டேயிருக்கிறதே!

தமிழ்நாட்டைப் பொருத்தவரை எங்களுடன் இணைந்து பிரசாரம் செய்ய காங்கிரஸார் ஒப்புக் கொண்டுவிட்டார்கள். பாண்டிச்சேரியில் நாங்கள் நிச்சயம் வெற்றி பெறுவோம். முதல் இரண்டரை ஆண்டு காலம் எங்கள் கட்சிக்காரர்தான் முதல்வர். இதற்கு காங்கிரஸ் ஒப்புக் கொள்ளா விட்டால், எங்களுக்குக் கவலை இல்லை. நாங்கள் அ.இ.அ.தி.மு.க.வுடன் அணி அமைத்து ஆட்சியைக் கைப்பற்றுவோம். பாண்டிச்சேரி விஷயத்தில் சமரசத்துக்கே இடமில்லை.

வாழப்பாடி மீண்டும் பா.ம.க.வுடன் தோழமையாக வரும் வாய்ப்பு இருக்கிறதா?

வாழப்பாடி என்ன மாபெரும் வன்னியர் தலைவரா? அவர் ஒரு வழிப்போக்கர். எங்கள் கதவு அவருக்காக இனி திறக்காது.

உங்கள் மகன் அன்புமணி இந்தத் தேர்தலில் போட்டியிடமாட்டார் என்று சொல்லி விட்டீர்கள். எதிர்காலத்திலும் இது பொருந்துமா?

இந்தத் தேர்தலில் அவர் போட்டியிட மாட்டார். எதிர்காலத்தைப் பற்றிய உறுதியை நான் இப்போது தர முடியாது. அது பா.ம.க தொண்டர்கள் முடிவு செய்ய வேண்டிய ஒன்று.

சந்திப்பு: **ப்ரியன் ஸ்ரீநிவாசன்**

படங்கள்: **ராஜன்**

சென்னையில் ஏந்தத் தொகுதியையும் கூட்டணிக் கட்சிகளுக்கு விட்டுத் தர தி.மு.க.வுக்கு விருப்பமில்லை. ஆனால் ராய புரத்தையோ ஆர்.கே. நகரையோ ஏன் கேட்டு வாங்கவில்லை என்று ம.தி.மு.க. வடசென்னை செயலாளருக்குக் கோபம். தொகுதி சர்ச்சைகள் தொடர்ந்து கொண் டிருந்தபோது, போஸ்டர் யுத் தம் நடத்தினார். தமது தொண்டர் களுடன் வந்து கோஷங்களை எழுப்பி சாலை மறியலிலும் ஈடு பட்டார் அவர். ஒட்டுமொத்த ம.தி.மு.க.வே தி.மு.க. கூட்டை எதிர்ப்பது போல் காட்சி உருவாக் கப்பட்டது. கலைஞர், ஸ்டா லின் ஆகியோ ரைக் கண்டித்து அவர்கள் எழுப் பிய கோஷங்கள் வீடியோ மூலம் அறிவால யம் சென்றது.



விரிசல்!

தி.மு.க. பிரமுகர்களைக் கோபப்படுத்திய விஷயம், அப்படி அவர்கள் கோஷம் போட்டு ஆர்ப்பாட்டம் நடத்திய போது, அலுவலகத்தில் இருந்த முக்கியப் பிரமுகர் யாரும் அவர்களைக் கண்டிக்காததுதான். செய்தித் தொடர்பாளர் ராதாகிருஷ்ணன், கோஷம் போட்டவர்களை அமைதியாக இருக்கச் சொல்ல, "இவர் கலைஞர் ஆளு" என்று அவர் மேலும் பாய்ந்தார்கள் கூட் டத்தினர்.

இந்த விஷயம் தவிர, எல். கணேசன் நிற்பதற்கு ஒரத்தநாடு, அல்லது தஞ்சாவூர் அல்லது தி.நகர் தொகுதி கேட்டார்கள். சென்னை தொகுதி கேட்டு கலைப்புலி தாணுவின் 'அன்புத்' தொல்லை வேறு. "இந்தத் தொகுதிகள் எதையும் உங்களுக்குத் தர இயலாத நிலையில் இருக்கிறோம்" என்று சொல்லி விட்டது தி.மு.க.

தமது கட்சியின் மூத்த தலைவருக்கு தொகுதி வாங்கித் தர முடியவில்லையே என்ற ஆதங்கம் வைகோவை வாட்ட, அதன் விளைவாகக் கொஞ்சம் கெடுபிடி செய்து பார்க்க முயல, உறவு என்கிற கண் ணாடிப் பாத்திரம் விரிசல் கண்டுவிட் டது!

"தி.மு.க. என்ற ஆலமரத்தின் நிழலில் யாரும் வளர முடியாது. அதுவும் அதிலி ருந்து பிரிந்து வந்த நாங்கள் எப்படி அதன் நிழலில் இளைப்பாற முடியும்" என் கிறார்கள் ம.தி.மு.க. பிரமுகர்கள்.

"வெற்றி பெற வாய்ப்பு இருக்கும் எல்லா தொகுதிகளையும் கூட்டணிக் கட்சிக்குக் கொடுத்து விட்டு நாங்கள் வாயில் விரலை வைத்துக் கொள்ள வேண் டியதுதானா? எங்களால் நான்கு தொகு திகள் அவர் களும், அவர் களால் நான்கு தொகுதிகள் நாங்களும் வெற்றி பெறுவதற்கேற் பத்தானே பங்கீடு செய்ய இயலும்" என்கிறார்கள் தி.மு.க. பிரமுகர்கள். வைகோ. கேட்ட தொகுதிகளை அப்படியே கொடுப்பதாக கலைஞர் உறுதிமொழி தரவில்லை என் கிறார்கள் அவர்கள்.

ம.தி.மு.க. பந்தாடப்பட்டதன் விளை வாக, தமிழகத்தில் என்.டி.ஏ. கூட்டணி பலவீனமாகப் போய்விட்டிருப்பது பா.ஜ.க.வை கவலை கொள்ளச் செய்திருக் கிறது. வாஜ்பாய் அல்லது அத்வானி சமரசம் செய்ய முயற்சி எடுப்பார்கள் என்கிறது ம.தி.மு.க. வட்டாரம்.


தனியாகப் போகவும் தயாராக இருக் கிறார் வைகோ. பா.ஜ.க., பா.ம.க. போட்டியிடும் தொகுதிகளில் மட்டும் போட்டியிடாமல், 108 தொகுதிகளில் தனியாக ம.தி.மு.க. போட்டியிடக்கூடும் என் கிறார்கள். ஆனால் தனியாகப் போட்டியிடுவது தற்கொலைக்கு ஒப்பானது என்கிறார்கள் ம.தி.மு.க. பிரமுகர்கள். "அதற்காக மானம் இழந்து தி.மு.க.வின் கதவைத் தட்டிக் கொண்டிருக்க முடியுமா?" என்று ஆவேசத்துடன் கேட்டார் வட சென்னை ம.தி.மு.க. பிரமுகர் ஒருவர்.

— சஞ்சயன்

படம்: சௌரா

அந்த இக்கன்னா எதற்கு?

வினோத்



A diamond is a chunk of coal made good under pressure என்பது வைரமொழி. காதலும் அப்படித்தான். அழுத்தம் ஏற ஏற வலிவும் வனப்பும் ஏறுகிறது. ஆனால் அதற்காக, 'கனவே கலையாதே' படத்தில் சிம்ரனைத் துரத்திப் பிடித்துக் காதல் செய்யும் முரளி- 'க்கண்ணோடு க்கண்ணாக வந்தக் காதல், க்காதோடு க்காதாக க்கேட்ட க்காதல்' என்று அத்தனை அழுத்தம் கொடுத்துப் பாட வேண்டுமா என்ன?

எல்லா அரசியல்வாதிகளும் ஒரே மாதிரிதான் என்றார் குருஷ்சேவ். Politicians promise to build bridges even when there are no rivers என்பது அவர் கூற்று. இருக்கட்டும். இலங்கை அதிபர் சந்திரிகாவுக்கும் பாரதப் பிரதமர் வாஜ்பாய்க்கும் உள்ள ஒற்றுமை என்ன? அவர்கள் பொதுக்கூட்டத்தில் பேசும் காட்சி டிவியில் வரும்போது பாருங்கள். குளோசப் காட்சியாக இருந்தால் கூர்ந்து கவனியுங்கள். விடை: கடைசிப் பத்தி, கடைசி வரிகள்.

தினந்தோறும் 'ஸன்'னில் காலைச் சிற்றுண்டி ஆற்றும் இறையன்பு, அந்தத் தொடர் நிகழ்ச்சிக்கு 'தெரிந்ததும் தெரியாததும்' என்று தலைப்பு வைத்துக் கொண்டிருப்பது சாலப் பொருத்தம். ஒரு தெரிந்த விஷயத்தோடு தெரியாத விஷயத்தையும் இணைத்துச் சொல்வது இந்த ஐ.ஏ.எஸ்காரரின் தனித்திறமை. Knowledge is the wing wherewith we fly to heaven என்று மாபெரும் கவிஞர் பாடினார்.

நூறு என்பது மனித வரலாற்றில் ஒரு மகத்தான எண்ணாக, மனிதனை மேம்படுத்துவதாக இருக்கிறது என்று கூறி, தன் நூறு குமாரர்களில் 99 பேரை வெவ்வேறு பிரதேசங்களில் ஆட்சி செய்யும்படி அனுப்பிய அரசரின் கதையைச் சொன்னார். நூறாவது மகன் மட்டும் தந்தைக்கு உதவியாகத் தங்கியிருந்து மக்களுக்கு நன்மை செய்து ஆட்சியுரிமையையும் பெற்றானாம். அண்ணன்மார்கள் அவனை ஒழிக்க முயன்று, மொத்தப் பேரும் சேர்ந்து இருப்பதே எதிரிகளிடமிருந்து காப்பாற்றும் என்பதை உணர்ந்து ஒன்றுபட்டார்களாம். நூற்றுக்கு நூறு சரியான குட்டிக்கதை.





தெலுங்கு சேனலான 'தேஜா'வில், திருமண நாள் தம்பதியருக்கு வாழ்த்துக் கூறுகிறார்கள். அந்த ஜோடியின் புகைப்படத்தையும் காட்டுகிறார்கள். சிலர் சிரித்துக்கொண்டு, சிலர் உம்மென்று, சிலர் பொம்மை மாதிரி நேர் போஸாக - இப்படிப் பல படங்கள்.

இருந்தாலும் சென்ற வாரம் காட்டப்பட்ட ஒரு கணவன் - மனைவி போட்டோ மாதிரி பார்க்கவே முடியாது. இருவரும் முதுகோடு முதுகு ஒட்டினாற்போல் திரும்பி உட்கார்ந்திருக்கிறார்கள். கணவன் கிழக்கே பார்க்கிறான். மனைவி மேற்கே பார்க்கிறாள். அவர்களுக்குள் ஏதோ சண்டை நேர்ந்திருந்த சமயம் யாரோ இப்படி எடுத்துவிட்டார்கள் போலிருக்கிறது. Whenever you are wrong, admit it; Whenever you are right, shut up என்று அடிபட்ட அனுபவசாலியொருவர் சொல்லியிருப்பது அந்தக் கணவனுக்குத் தெரியவில்லை.

'அம்மான்னா அம்மாதான், அப்பான்னா அப்பாதான்' என்று சொல்றமாதிரி சரிதான்னா சரிதாதான்.

'அக்னி சாட்சி'யில் பிரமை பிடித்த பெண்ணாக அவர் வருவதை ஜெயா டீவியில் பார்க்க முடிந்தது. 'கனாக் காணும் கண்கள்' என்ற பாட்டு; பின்னணியில் ஒரு வெள்ளைக்கார (?) பெண் மின்னலில் செய்த பம்பரமாகச் சுழன்று ஆடுகிறார். சரிதாவின் கண்களில் இன்னதென்று விளக்க முடியாத ஒரு மிரட்சி; சிவகுமார் அவரைத் தூக்கித் தோளில் சாய்த்துக் கொள்ளும்போது முகத்தில் ஒரு வெறுமை. The art of expressionless expression என்று சொல்வார்கள். சரிதாவிடம் அந்தக் கலை சம்பூர்ணம்.

அப்படியொரு கனமான கட்டத்தைக் காட்ட இன்று எந்த டைரக்டராலும் - பாலசந்தராலேயேகூட - முடியாது. அப்படியே காட்டினாலும் அதை நடிப்பிலேயே கொண்டு வரக் கூடிய நடிகை யார் இருக்கிறார்கள்! (சிறிககளே, சீறாதீர்கள்.)

இலங்கை அதிபருக்கும் பாரதப் பிரதமருக்கும் உள்ள ஒற்றுமை: இருவருமே பொதுக்கூட்டத்தில், தலையை வலமிருந்து இடமாகவும் இடமிருந்து வலமாகவும் வெட்டி வெட்டி பேசுகிறார்கள்.

சுமி சூப்பர் மார்க்கெட்



'இந்தியாவுல பெண்களுக்கு இன்னும் வீட்டுல எமோஷனல் அண்ட் இன்டலெச்சுவல் ஸ்பேஸ் இல்லை'ன்னு எழுதி மூனு வாரம்தான் ஆகுது. அதுக்குள்ளே சுமியோட வார்த்தையை நிரூபிக்கற மாதிரி ஒரு இன்ஸிடன்ட் - கூத்தாண்ட குப்பம் கிராம பஞ்சாயத்துத் தலைவி உமா. நாட்டுலேயே சிறந்த பஞ்சாயத்துத் தலைவின்னு 1999ல தேசிய விருது வாங்கினவங்க. இந்த வருஷம் சி.எம். கையால இரண்டு லட்ச ரூபாய் பரிசு வேற வாங்கியிருக்காங்க மகளிர் தினத்தன்னைக்கு. வரதட்சணை கொடுமைனால புருஷன் வீட்டைவிட்டு வெளியேறி பிரதர் வீட்டுக்குப் போயிட்டாங்க உமா. அங்கேயும் வந்து கொடுமை பண்ணியிருக்காங்க. பரிசுப் பணத்தைக் கொடுக்கலைன்னா பொல்லாதவனாயிடுவேன்னு மிரட்டியிருக்காரு ஹஸ்பென்ட்! வேற வழியில்லாம உமா வேலூர் போலீஸ் ஸ்டேஷன்ல புகார் பண்ணியிருக்காங்க. இப்போ ஹஸ்பன்ட் ராஜா ரிமான்ட் கைதி. உமாவுக்கு மனசு திடம் இருக்கறதால பிழைச்சாங்க. இல்லாட்டி கதை கந்தல்தான்...

மாரல் அஃப் தி ஸ்டோரி என்ன..? பொறுப்புகளைப் பொதுக் காரியங்களை ஒத்துக்கிறவங்களுக்கு - ஆணோ, பெண்ணோ - மனசு திடமும் பக்குவமும் வேணும். அதை உருவாக்கற வழியைப் பார்க்காம குருவி தலையில பனங்காயை வைக்கறதுல அர்த்தமில்லே.

இந்த 'குருவி தலையில பனங்காய்' வாசகம் நீங்க கேள்விப்பட்டிருக்கீங்களா...? எங்க பாட்டி இது மாதிரி நிறைய ஸ்டாக் வைச்சிருக்காங்க.

பருத்தி புடைவையாய்க் காய்ச்சுது! (எதிர்பார்த்ததைவிட குயிக்கா ஒன்னு நடந்தது)

துடைப்பக்கட்டைக்குப் பட்டுக் குஞ்சலம் கட்டினாப்போல (தகுதியில்லாத பெருமையை வர்ணிக்க)

ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியை விரட்டிச்சாம்! (இதுக்கு விளக்கம் தேவையில்லைன்னு நினைக்கிறேன்)

கண்டைக்காய் கால் பணம், சுமைகூலி முக்கால் பணம்...

பேசிக்கிட்டேயிருக்கறச்சே, சில சமயம் பேச்சுக்குப் பதிலா இந்த மாதிரி ஒரு வசனத்தைப் பாட்டி எடுத்து விட்டாங்கன்னா சும்மா டிராவிட் அடிக்கற சிக்ஸர் மாதிரி எஃபக்ட்!

இப்போ இந்த மாதிரி பேச்சுக்கெல்லாம் மவுசு குறைஞ்சு போய் வீடு தோறும் தொலைக்காட்சி மகளிரின் மழலை மிழற்றல்தானே கோலோச்சுது. போதாத குறைக்கு சினிமா டயலாக்கையும் ஹீரோ - ஹீரோயின் மட்டும் இதே டீவி. ஸ்டைல் கொஞ்சு மொழில பேசறாங்க.

டயலாக்ஸ் புரியலைன்னா அமெரிக்காலேருந்து டிரேஸி ஹாக்ன்ற அம்மணியை வரவழைச்சுக் கேட்கலாம் போலிருக்கு... ப்ரிட்டன்ல பிறந்து லாஸ் ஏஞ்சல்ஸ்ல இப்போ கொடிகட்டிப் பறக்கற இந்த லேடி ஒரு கொஞ்சு மொழி பெயர்ப்பாளர் - அதாவது பேசத் தெரியாத ரொம்ப சின்ன பாப்பாக்கள் பொறுப்பில்லாம நைட் பூரா அழுது பிராணனை வாங்கும் பாருங்க, அந்த அழுகை சவுண்டை போன்ல கேட்டே கூட பாப்பாவுக்கு என்ன தேவைன்னு கண்டு பிடிச்சு சொல்லிடுவாங்களாம். அப்புறம் அவங்க சொன்னபடிக்கு அதைக் கவிழ்த்துப் போட்டோ, நிமிர்த்திப் போட்டோ, தட்டி கொட்டியோ, பத்து நிமிஷம் பார்த்துச் கிட்டா அழுகை நின்னுடுமாம்!

- இது சுமியோட கற்பனை இல்லை... நியூஸ்வீக்ல வந்திருக்கற நிஜம்.

டிரேஸி ஹாக் இரண்டு மணி நேரம் போன்ல கன்ஸல்டன்ஸி



கொஞ்ச

கொடுக்க ஐந்நூறு டாலர் சார்ஜ் பண்றாங்க - நேர்ல வந்து வீட்ல ஒருநாள் இருக்கணும்னா ஆயிரம் டாலர்!



கட்டுப்படியாகாதவங்க, 22 டாலர் கொடுத்து அவங்க எழுதியிருக்கற 'சீக்ரட்ஸ் ஆஃப் தி பேபி விஸ்பரர்'ன்ற புத்தகத்தை வாங்கிக்கலாம். இப்போதைய அமெரிக்க பெஸ்ட் ஸெல்லர் பட்டியல்ல இருக்காம் இந்த புக்!

நம்ம ஊர் அத்தைப் பாட்டிங்க இந்த ஹாக் அம்மையாரை ஃபாலோ பண்ணினா 'கோடீஸ்வரன்' புரோக்ராம் போகாமலே பணக்காரங்களாயிடலாமே!

பி.கு. : டிரேஸி ஹாக் கொஞ்சம் 'ஃப்ராட்' பண்றதா பாதி அமெரிக்க நினைக்குது... புத்தகத்தைப் பதிப்பிச்சிருக்கற பாலன்டைன் நிறுவனம் பலமா ஹாக்கை ஆதரிக்குது!

மொழி பெயர்ப்பாளர்!

பேக்டு சென்னை - ஞானபானுன்னு ஒரு பப்ளிஷர்ஸ் கம்பெனி (22, ஜர்னலிஸ்ட் காலனி, சென்னை-41) ரொம்ப அழகான கெட் அப்போட ஒரு புக் போட்டிருக்காங்க. புக் டைட்டில் 'பெண்மொழி'. எழுதியிருக்கிறவர் 'மா' - என்கிற ஏ.எஸ். பத்மாவதி. அவங்களோட முன்னுரை ரொம்ப ஆனஸ்டா மனசைத் தொடற மாதிரி இருக்கு.

பதிமூனு வருஷமா பல்வேறு பத்திரிகைகள்ல வந்த பெண்கள் தொடர்பான கட்டுரைகளோட தொகுப்பு 'பெண்மொழி'. இன்னும் முழுக்க படிக்கலை. பட், எந்த பேஜ் புரட்டி எங்க படிச்சாலும் இம்ப்ரஸிவ்வா இருக்கு. பேட்டி, கட்டுரை, சிந்தனை, விஞ்ஞானம்னு ஒரு மிக்ஸ்சர்... இப்படித் தொகுத்துப் போட தைரியம் வேணும். தைரியம் ஜஸ்டிஃபைட்தானான்னு முழுக்கப் படிச்சுட்டுச் சொல்றேன். எனக்கு முன்னாடி யாராவது படிச்சு முடிச்சிங்கன்னா சூப்பர் மார்க்கெட்டுக்குக் கருத்து எழுதிப் போடுங்க.

பேப்பர்ல வராத ஒரு நியூஸ் சொல்லிட்டு ஐ வில் சைன் ஆஃப்... ஜே.என். அய்யர் ஒரு ரிடையர்ட் சீஃப் எலக்ட்ரிகல் எஞ்சினியர், ரயில்வேஸ். அவர், நேஷனல் ஹ்யூமன் ரைட்ஸ் கமிஷனுக்கு ஒரு மனு போட்டிருக்கார் - டிரெயினேஜ் பிளாக்கை நீக்கறதுக்கு நம்ம சூவேஜ் போர்ட் வொர்க்கர்ஸ் அப்படியே மேன்ஹோலுக்குள்ளே இறங்கிருவாங்க தெரியுமா..? அந்த பயங்கரமான அகௌரவத்தை எதிர்த்து குரல் கொடுத்துப் போட்டிருக்கார்... (காபி எனக்கு ஈமெயில்ல வந்திருக்கு!) ஒரு தேசத்தோட மனச்சாட்சியை உலுக்கற விஷயமில்லையா இந்தக் கொடுமைன்னு கேட்டிருக்கார். 53 வருஷ சுதந்தரத்துக்கப்புறம் டெக்னாலஜில நம்ம நாடு பிரமாதமா முன்னேறியாச்சு; இன்னமும் இப்படி கொடூரமான்றார்.

கமிஷன்கிட்டேயிருந்து பதில் வந்தா கண்டிப்பாச் சொல்லுங்க நாராயணன் சார்!

— சுமி

நூறு கோடியில் ஒருவன்

சிறுகதை : சீதா ரவி

ஓவியம் : சேகர்

பொன்னியின் செல்வனைப் போல் கைகளில் சங்குசக்கர ரேகையுடன் பிறந்து விடவில்லை தாண்டவமூர்த்தி. ஆனால் அவருக்கென்று சில அடையாளங்களை ஞாபகமாகக் கொடுத்திருந்தான் நான்முகன். அப்பா தம்புசாமியிடமோ, அம்மா கிரிஜா தேவியிடமோ இல்லாத பிரத்யேக அடையாளங்கள் – சராசரியைக் காட்டிலும் மிகப் பெரிய கண்கள், காதுகள், நெற்றியின் முடிவில் ஆரம்பிக்க வேண்டிய தலைமுடி ஞாபகமறதியாய் ஓர் அங்குலம் பின்தங்கி கோபமாய் விறைத்துக் கொண்டு நின்றது.

கவிகள் வேண்டுமானால் 'தாமரைக் கண்கள்', 'தடாகக் காதுகள்', 'அறிவைத் தெரிவிக்கும் அகன்ற நெற்றி' என்று அந்த அங்க அடையாளங்களைப் பாடியிருக்கக் கூடும். ஆனால், மேலூர் கிராமத்துத் திண்ணைப்பள்ளித் தோழர்கள், தாண்டவமூர்த்தி வகுப்பில் சேர்ந்த முதல் நாளன்றே அவனைத் தனித்து அடையாளப் படுத்திவிட்டார்கள்– 'முட்டைக் கண்ணன்' என்று!

இப்போது யோசித்துப் பார்த்ததில் அதிலொரு வலுவான நியாயமும் தெரிந்தது தாண்டவமூர்த்திக்கு. கண்கள் கிடக்கட்டும்; தாண்டவமூர்த்தி என்ற பெயர் நான்கு வயதுப் பிள்ளைகள் சுலபத்தில் உச்சரிக்கக் கூடியதா என்ன...?

நல்லகாலமாய், பாட்டி அழைத்ததைப் போல் தம்மைத் 'தாண்டு' என்று அவர்கள் அழைத்துவிடவில்லை என்று ஆறுதல் கொண்டார் அவர்.

அவர் பெற்றோர், பாட்டியினும் மேலானவர்கள். 'தாண்டு', 'குதி' என்றெல்லாம் சிறுவனை அதிகாரம் செய்யாமல், 'நடுப் பயல்' என்று நயமாக அழைத்தார்கள்– அதையும் தாண்டவமூர்த்தி ஏற்றார். பின்னே, ஏழு குழந்தைகளைப் பெற்று பெயரிட்டவர்கள், அவர்களை ஆளாக்கும் மும்முரத்தில் தனித்தனியாகப் பெயர்களை ஞாபகம் வைத்துக் கொண்டா அலைய முடியும்?

தாண்டவமூர்த்தியை பி.ஏ. படிக்க வைத்தார் தம்புசாமி. கஷ்டப்பட்டுதான் படிக்க வைக்க முடிந்தது. அதனால் என்ன..! மற்ற அரை டஜன் பிள்ளைகளும் பாடங்களுடன் திணறித் திண்டாடிக் கொண்டிருக்க, தாண்டவமூர்த்தி கஷ்டப்படாமலே வகுப்புகளைத் தாண்டிக் குதித்து முன்னேறிக் கொண்டிருந்தான். அந்த வகையிலாவது அவனுக்குப் பெயர் பொருத்தம் அமைந்ததே என்று கல்லூரி ஹாஸ்டலுக்கு அனுப்பிய தினத்தில் அம்மா கண் கலங்கி கைமுறுக்குப் பொட்டலத்துடன் அனுப்பி வைத்தாள்.

கல்லூரியில்தான் பிடித்துக் கொண்டது சனியன்! ஆங்கிலத்தில் எழுதிய வருகைப் பதிவேட்டிலிருந்து பெயர்களை உரக்க உச்சரித்த ஆசிரியர்கள் 'தண்ட'வமூர்த்தி என்று வைதும் 'தாண்டவா' மூர்த்தி? என்று கேட்டும் பொறிகலங்கச் செய்தார்கள். அதெல்லாம் இல்லை 'தாண்டவமூர்த்தி' என்று பெயருக்குரிய மாணவன் அடிக்கடி எழுந்து நின்று திருத்துவதை எந்த பேராசிரியர்களால்தான் சகித்துக் கொள்ள முடியும்? தாண்டவமூர்த்தியின் பெயர் பதவி உயர்வு பெற்றது:- "சாகேதராமன், சேகரன், சுந்தரராஜன், சௌந்தரராஜன், தம்புசாமி– ரோல் நம்பர் நைன்டி ஃபோர்" என்று தாண்டவமூர்த்தியை எண்ணாக்கி முதலில் புண்ணியம் கட்டிக்

கொண்டவர் ஆங்கிலப் பேராசிரியர்தான்.

அதைத் தொடர்ந்து கணிதம், இயற்பியல், உயிரியல் ஆசிரியர்களும் வழிமொழிய, மாணவசிகாமணிகளின் நகைச்சுவை உணர்வுக்கு நைன்டிஃபோர் பெரும் விருந்தாகிவிட்டது.

நொந்து நூலாகிப் போனான் இளைஞன் தாண்டவமூர்த்தி. பத்தொன்பது வயதில் தொண்ணூற்றி நாலு என்று அழைக்கப்படும் அபத்தம் மட்டுமே அவன் வேதனைக்குக் காரணமல்ல... அந்த வயதை மிஞ்சிய வேதாந்த கேள்வியொன்று அவன் உறுதி கொண்ட நெஞ்சில்





முளைவிட்டுத் தொல்லை தர ஆரம்பித்திருந்தது.

'தாண்டு' என்றும் 'நடுப்பயல்' என்றும் 'முட்டைக் கண்ணன்' என்றும் அழைக்கப்பட்டபோது தோன்றாத விசாரம் அது. அந்தப் பெயர்களெல்லாமே அடையாளங்களாகத் தோன்றின - தான் யார் என்பதற்கான அடையாளங்கள். ஆனால் 'தொண்ணூற்றி நாலு' என்பது ஊரையும் உறவையும் பிரிந்து பட்டினம் புகுந்த புதியவனை மிரட்டும் அமானுஷ்யம்!

மேலும், ஊரிலிருந்தவரை இப்படிப்பட்ட ஆன்மிக வேட்கை(டை)களுக்கு எங்கே நேரமிருந்தது? பத்து வயதிலிருந்து தம்பிகளையும் தொழுவத்து மாடுகளையும் குளிப்பாட்டி, முறையே பழையசோறும் புண்ணாக்கும் தின்னக் கொடுத்து, பின்னர் வீட்டுப் பாடம் எழுதி, தான் தயாராகி பள்ளிக்குப் போய் வந்தால், மாலையில் மளிகைக் கடை கல்லாவில் அமர்த்திவிட்டு



''என்ன ஆச்சரியம்! அந்த கூட்டணியில் மட்டும் அதிக கட்சிகள் சேர்ந்திருக்கு.''

''பின்னே! ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு வாரம் முதல்வர் பதவி கொடுப்பதா ஒப்பந்தம் ஆயிடுச்க இல்லே!''

– பொள்ளாச்சி
கே. சித்ரா



மக்களை, அறிவும் ஆற்றலும் நேர்மையும் துணிவும் உடையவராய் ஆக்குவதே ஜனநாயகத்தின் அடிப்படை நோக்கமாக இருக்க வேண்டும். அவர்களுக்குப் பணியாற்றுவதைவிட அவர்களைப் பணியச் செய்வது எப்படி ஜனநாயகமாகும்?

- அறிஞர் அண்ணா

அப்பா சரக்கு பிடிக்க டவுனுக்குப் போய் விடுவார். இரவு பதினொன்றுக்கு மிளகாய் மூட்டையோ கொப்பரைத் தேங்காயோ சைக்கிளில் வைத்துத் தள்ளிக் கொண்டு அவர் கடை திரும்பும் போது பற்று வரவு பைசா குறையாமல் கணக்கு நோட்டில் பதிவாகியிருக்க வேண்டும். இல்லையேல் தாண்டவமூர்த்தியை அடையாளப்படுத்த பிரும்மா வழங்கிய காதுகள் சிவந்து துடிக்கும்!

கல்லாவிலேயே கணக்கும் வழக்கும் கற்று விட்டதால் தாண்டவமூர்த்திக்குக் கல்லூரி வாழ்க்கை கை நிறைய நேரத்தை அள்ளித் தந்தது. அந்த புறம்போக்கு நேரத்தில் பட்டாபோட்டுக் கொண்டு அமர்ந்தது 'நான் யார்?' என்கிற விசாரம்.

யாருடனும் அதைப் பகிர்ந்து கொள்ளும் துணிவு தாண்டவமூர்த்திக்கு இல்லை. பாடங்களிலிருந்து கவனம் சிதறி மதிப் பெண்கள் குட்டுப்பட ஆரம்பித்ததும், இந்த விசாரம் நமக்குக் கட்டுப்படியாகாது என்று முடிவு செய்து விட்டான்.

பி.ஏ. இறுதிப் பரீட்சையில் வின்னாமல் கின்னாமல் சுளை சுளையாக அவன் மார்க் எடுத்ததற்காக உப்பு மிளகாய்ச் சுற்றிப் போட்டு, மாமன் மகளையும் முடித்துப் போட்டுவிட்டார்கள் வீட்டில்.

திரிபுரத்தின் கழுத்தில் மூன்று முடிச்சு போட்ட கணத்தில் தாண்டவமூர்த்தியின் மனத்தில் முடங்கிக் கிடந்த கல்லூரிப் பருவத்துக் கேள்வி எழுந்து வந்து தடதடவென்று இதயச் சுவர்களைத் தட்டி ஆர்ப்பாட்டம் செய்தது.

"மாப்பிள்ளைக்கு வேர்த்து விறுவிறுக்குது சர்பத் குடுங் கடா!" என்ற சுப வசனத்துடன் நிறைவடைந்தது கல்யாணச் சடங்கு.

பட்டிணத்தில் குடித்தனம் போட்ட பிறகு, திரிபுரத்தின் அழகிலும் அனுசரணையிலும் அந்த அச்சுறுத்தல் அடங்கி, 'எம் புருஷன்' என்று வாய்க்கு வாய் அவள் இட்ட அடையாளத்தில் மிதப்பு கொண்டு, தலைநிமிர்ந்து திரிய முடிந்தது.

தலைச்சன் பிறந்ததும் இரவோடிரவாக எல்லாம் தலைகீழாகிவிட்டது.

அன்புள்ள கோபாலு அப்பாவுக்கு,

இப்பவும் திரிபுரம் அடிபணிந்து எழுதும் மடல்...

என்று கடிதத்திலேயே மனைவி தன்னைக் கைகழுவி விட்டதாகத் தோன்றியது.

அக்கம்பக்கத்தில் தாண்டவமூர்த்தியைத் 'திரிபுரம் புருஷன்' என்று அழைத்தவர்கள்கூட 'கோபாலு அப்பா' என்று மாற்றிக் கொண்டார்கள்.

தெருவாசிகளுக்கு மட்டும்தான் கோபாலு அப்பா. அலுவலகத்தில் ஏ.ஓ (அக்கவுன்ட்ஸ் ஆபீசர்) என்று பெயர்ப் பலகை இருந்தாலும் சகாக்கள் அவருக்கிட்ட பெயர் எம்.கே. காந்தி– பெரிய காதுகளை உத்தேசித்து அல்ல; பிழைக்கத் தெரியாத அவரது நேர்மை கருதி! வங்கிக்குப் போனால் எயிட் ஒன் சிக்ஸ், நடமாடும் இஸ்திரிக்காரருக்கு மூணாவது தெரு ஏழாம் நம்பர் ஐயா, ரேஷன் கடையில் சண்டைக் கோழி புருஷன், பாலிகிளினிக்கில் 'கடைசி டோக்கன்' என்று

பணிக்காலம் முடிவதற்குள் பல்வேறு அடையாளங்களுக்குத் தன்னைத் துளித் துளியாய்ப் பிய்த்துக் கொடுத்து ஒட்டு மொத்தமாகத் தொலைந்து போயிருந்தார் தாண்டவமூர்த்தி.

இந்நிலையில் அவரை உத்தாரணம் செய்ய வந்ததே போல், வந்தது தேர்தல் கமிஷனின் அறிவிப்பு:

அனைத்து வாக்காளர்களுக்கும் அடையாள அட்டை!

அடையாள அட்டை இல்லாதவர்கள் வாக்களிக்க முடியாது!

வந்தே மாதரம் சொல்லி வெள்ளைக்கார அரசாங்கத்தால் சிறைவைக்கப்படாவிட்டாலும் தாண்டவமூர்த்தி தேசபக்தர் தான்.

பாரத தேசம் சுதந்தரம் பெற்ற தினத்தில் மேலூர் கிராமம் மூவர்ணக் கொடிக்கு வீர வணக்கம் செய்ய, முதல் வரிசையில் நின்று சல்யூட் வைத்தது பசுமையாக நினைவிருக்கிறது. இப்போதும் கூட தாண்டவ மூர்த்தியைச் சிலிர்க்க வைக்கும் அந்த நினைவு.

வாக்குரிமை பெற்ற நாள் முதலாக, பொறுப்போடு எல்லா தேர்தல்களிலும் வாக்களித்திருக்கிறார். மகன் சாந்தியின் கல்யாணத்துக்கு முகூர்த்தம் வைத்து, பத்திரிகை அடித்த பிறகு தேர்தல் தேதி அதே தினத்தில் அறிவிக்கப்பட்டுவிட, மாப்பிள்ளை வீட்டாரிடம் வாதாடி, முகூர்த்தத்தையே மாற்றி வைத்து, வேறு பத்திரிகை அடித்து விநியோகித்திருக்கிறார். நாட்டில் நடந்த நல்லது கெட்டதுக்கெல்லாம் முதல் ஆளாக நிவாரண நிதியும் உதவித் தொகையும் அனுப்பி அமைதியாகப் பெருமை கொண்டிருக்கிறார். குடும்பக் கட்டுப்பாடென்பது அரசு இயக்கமாகி ஊர்ச் சுவர்கள் சிவப்பு முக்கோணங்களால் நிரப்பப்படுவதற்கு முன்பே சிறு குடும்ப தத்துவத்தை ஏற்று அமுல் படுத்தியிருக்கிறார். வருமான வரி செலுத்திய முதல் சந்தர்ப்பத்தில் தனிப் பெருமை கொண்டு தலைநிமிர்ந்திருக்கிறார். கோபாலுவை ராணுவத்துக்கு அனுப்ப வேண்டும் என்று கூட ஆசைப்பட்டிருக்கிறார். "பொண்ணு குடுக்க மாட்டாங்க" என்று திரிபுரம் சண்டைபிடித்தபோது மூன்று நாட்கள் அவனோடு பேசாமல் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டிருக்கிறார். இறுதியில் கோபாலுதான் பெற்றோரிடையே மத்தியஸ்தம் செய்து வைக்க வேண்டியதாயிற்று. காவல் துறையில் சேர நுழைவுத் தேர்வு எழுதி ஐ.பி.எஸ். ஆகி ஓரளவு அவர் மனச் சாந்தியடையச் செய்திருக்கிறான்.

யாதொரு பிரதிபலனும் கருதாமல், இவையனைத்தையும் வெகு இயல்பாகவே செய்திருந்த தாண்டவமூர்த்திக்கு, தேர்தல் கமிஷனின் அறிவிப்பு அகக் கண்களைத் திறந்துவிட்டதாகத் தோன்றியது. 'நான் யார்? யார்?' என்று அடையாளம் தேடிய அந்தராத்மாவுக்கு இதோ கிடைத்துவிட்டது விடை:

நீ ஓர் இந்தியன்– இந்திய வாக்காளன்.

ஆகஸ்ட் 15, 1947 அன்று மூவர்ணக் கொடிக்கு சல்யூட் வைத்தபோது ஓடிய சிலிர்ப்பை மீண்டும் அனுபவித்தார் தாண்டவமூர்த்தி. அடையாள அட்டை பெறுவதற்கான விதிமுறைகளை ஊன்றிப்



ஜனநாயகம் என்பது வெறும் தேர்தல்களுக்குரிய விஷயமன்று.

– ஜவாகர்லால் நேரு

சமுதாயத்துக்கு நல்ல கருத்து உருவாகி விட்டால் அதற்குப் பிறகு தீய அரசு ஏற்பட முடியாது. ஏற்பட்டாலும் நிலைக்க முடியாது.

– மு.வ.

பதவி ஆசை என்பது, வேலை செய்யாமலேயே வாழ்க்கையை நடத்த விரும்புவதாகும்.

– லிங்கன்

தொகுப்பு: குல்லூ

"தலைவருக்குத் திடீர்னு 'கூன்' விழுந்திடுச்சே... பார்த்தீங்களா?"

"கூட்டணி கட்சிகளுக்கு ரொம்பவே வளைஞ்சு குடுத்துட்டார்... அதான்!"

– அ. சுகுமார்



படிக்கலானார்.

ஒருமுறை போட்டோ எடுத்து வந்த பிறகும் அடையாள அட்டை கிடைக்க வில்லை. தாசில்தார் அலுவலகத்தில் விசாரித்து விசாரித்து அலுத்துப் போன கட்டத்தில், இரண்டாவது முறை போட்டோ எடுப்பதாக அறிவிப்பு வந்தது. வெயிலைப் பாராது மீண்டும் வரிசையில் நின்றார் தாண்டவமூர்த்தி.

முதல் முறையைக் காட்டிலும் மும்மடங்கு கூட்டம்! 'கார்டு வரவேயில்லை' என்று புலம்பித் தீர்த்தவர்களிடையே அமைதி காத்தார்.

நூறு கோடி ஜனத்தொகை கொண்ட நாட்டில் இப்படிப்பட்ட காரியங்கள் சுலபமாகவா நடக்கும். ஒரு மாபெரும் வேள்வியல்லவா இந்த நல்முயற்சி!

அதிகாரியின் மேஜையை நெருங்கியதும் விவரத்தைச் சொன்னார்.

''அப்படியா? கார்டு வரலைங்களா பெரியவரே...?''

''வரலைங்க...''

''இந்த விண்ணப்பத்தை நிரப்பிக் கொடுங்க...''

வாக்காளர் புகைப்பட அட்டை–புகைப்படம் குறித்த ஆவணம் (வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகளில் உள்ள குறைகள் களையவும் மாற்று அடையாள அட்டைகள் வழங்கவும் விண்ணப்பம்) என்று அச்சிட்டிருந்தது.

''அட்டையே கைக்கு வரலைங்களே...''

''பரவாயில்லே, 'தொலைந்து போனதால்'ன்னு டிக் பண்ணி விண்ணப்பத்தை நிரப்பிக் கொடுங்க....''

''ஐயா! அது தப்பில்லீங்களா..? அட்டையே வாங்கலையே... எப்படி எழுதறது...?''

''இதைத் தரலைன்னா, போட்டோ புடிக்க முடியாது; அப்புறம் அட்டை வராது...''

''சீக்கிரம் வாங்கிட்டுப் போங்க. பின்னால எத்தினி பேர் நிக்கறோம்''– வரிசையில் அடுத்து நின்றவரின் அலுப்பு அவர் மூச்சுக் காற்றோடு சீறிக் கொண்டு வந்து செவிகளில் பாய்ந்தது.

தாண்டவமூர்த்திக்குத் தலையைச் சுற்றியது. வெயில் உறிஞ்சித் தீர்த்திருந்த சக்தியில் எஞ்சியிருந்த துளியும் வடிந்து போய் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது...

தடாலென்று சரிந்தவரைச் சுற்றிலும் கூட்டம் திரண்டது.

அதிகாரி எழுந்தார்...

''யாருப்பா இந்தப் பெரியவர்?.... யாருக்காவது இவரை அடையாளம் தெரிஞ்சா அழைச்சுட்டுப்போய் பத்திரமா வீட்டிலே கொண்டு சேருங்க...'' ○

''இந்தியாவை 'ரீ டிசைன்' செய்ய வேண்டும்!''

– டி. என். சேஷன் மினி பேட்டி



தேசத்தை ஒருங்கிணைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறீர்களே! அதை எப்படிச் செய்வது?

அது பிரம்மாண்டமான காரியம். மொழிவாரியாகப் பிரிந்து கிடக்கும் மாநிலங்களை இணைத்து, தேசநலன் என்ற அடித்தளத்தின் மீது ரீ–டிசைன் செய்ய வேண்டும்.

'எந்தக் கட்சியும் நல்லது செய்வதாகத் தெரியவில்லை; எங்களுக்கு யாருமே வேண்டாம்' என்று மக்கள் எல்லோரும் சேர்ந்து ஒட்டு மொத்தமாகத் தேர்தலைப் புறக்கணித்தால் என்னாகும்?

மக்கள் அனைவரும் சேர்ந்து ஒட்டுமொத்தமாகத் தேர்தலைப் புறக்கணித்தால், அந்தத் தேர்தல் ரத்தானதாக, தேர்தல் கமிஷன் அறிவித்துவிட்டு மறு தேர்தலுக்கான பணிகளைத் துவங்கும். ரெப்ரசென்டேஷன் ஆஃப் பீப்பிள்ஸ் ஆக்ட் 1951 அப்படித்தான் சொல்கிறது. ஆனால் அடுத்தடுத்து அறிவிக்கப்படும் தேர்தல்களையும் மக்கள் புறக்கணித்தால் என்ன நடக்கும் என்பதை என்னால் யூகிக்க முடியவில்லை. மக்களே முடிவெடுக்க வேண்டிய நிலைமை உண்டாகும்.

– எஸ். வினோத்






''இயற்கைதான் எங்களை வஞ்சித்து விட்டது என்றால், அரசு அதிகாரி களுமா? எங்களை ஏன் இப்படி வதைக் கின்றார்கள்...'' குமுறுகிறார்கள் ஊன முற்ற மாணவர்கள்.

'அரசு இயந்திரம்' என்று அரசாங்கத்தைக் குறிப்பிடுவதாலேயோ என்னமோ தெரிய வில்லை, அரசாங்கத்தில் பணி புரியும் அதிகாரிகள் இயந்திரத்தனமாகவே நடந்து கொள்ளுகிறார்கள். வெகு சாதாரணமான விஷயங்களில்கூட, குறைந்த பட்ச மனிதாபிமானம் இல்லை. இதற்கு உதாரணம், மாநகரப் பேருந்து நிர்வாகம் உடல் ஊனமுற்ற பள்ளி மாணவர்களுக்கு வழங்கும் இலவச பஸ் பாஸ்.

ஒவ்வொரு ஆண்டும், பள்ளி மாணவர்களுக்குப் பள்ளிக்கூடம் சென்று வர அரசாங்கம் இலவச பஸ் பாஸ் வழங்குகிறது. ஜூன் மாத ஆரம்பத்தில், இந்த இலவச பாஸைத் தங்களுடைய பள்ளிகளி லேயே வாங்கிக் கொண்டு அதையே அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை, பயன்படுத்த



• ராஜகோபால்

முடியும்.

ஆனால், உடல் ஊனமுற்ற பள்ளி மாணவர்களின் நிலைமை பரிதாப மானது. ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும், ஊனமுற்ற மாணவர்கள், தத்தம் பள்ளியி லிருந்து அவர்கள் ஊனமுற்றவர்தான் என்று ஒரு சான்றிதழ் வாங்க வேண்டும். அதை எடுத்துக் கொண்டு, சமூக நலத் துறை அலுவலகத்துக்குப் போக வேண்டும்.

அவர்கள், அந்தச் சான்றிதழ்களை உறுதிப்படுத்தி, கையெழுத்திட்டுத் தருவார் கள். இதற்காக, ஊனமுற்ற குழந்தைகளின் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை நேரடியாக சமூக நலத்துறை அலுவலகத் துக்கு அழைத்துக் கொண்டு போக வேண்டியது கட்டாயம்!

பின், மாநகர போக்குவரத்துக்கழக அலுவலகத்துக்குப் போனால், விண் ணப்பம், சான்றிதழ் இவற்றை வாங்கிக் கொண்டு, ஒரு தேதி குறித்து, மறு படி வரச் சொல்லுவார்கள். ஊன முற்ற குழந்தையைக் கூட அழைத்துக் கொண்டு போனால், காத்திருக்க வைத்து, ஒரு வழியாக இலவச பஸ் பாஸ் தரு வார்கள்.

இதில் அவலம் என்னவென்றால், இவர்கள் வழங்கும் பாஸ், ஒரு மாதத்துக்கு மட்டுமே உரியது. ஒவ்வொரு மாதமும், சமூக நலத்துறை சான்றிதழ் பெற்று மாநகர போக்குவரத்துக் கழகத்துக்குப் போய் பாஸ் பெற்றுவர வேண்டும்.

ஒவ்வொரு மாதமும், முந்தைய மாதத் தின் பாஸைத் திரும்பக் கொடுத்தால்தான் புதிய பாஸ் கிடைக்கும். இத்தனைக்கும், ஊனமுற்ற மாணவர்களுக்கான பாஸ், ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் ஆகஸ்ட் முதல் மார்ச் வரை மட்டுமே வழங்கப் படுகிறது. ஆனால், பிற மாணவர்களுக்கு ஜூன் மாதத்திலேயே தரப்படும் இலவச பயண அட்டையை, புதுப்பிக்க வேண்டிய அவசியமே இல்லாமல், ஏப்ரல்வரை பயன்படுத்த முடியும்.

ஊனமுற்ற மாணவர்களின் சிரமங் களைச் சுட்டிக்காட்டி சமூக நலத்துறை, மாநகர போக்குவரத்துக் கழகம் இரண் டுக்கும் பலமுறை கடிதம் எழுதிவிட்டார் அடையாறில் உள்ள காதுகேளா மாண வர்களுக்கான பள்ளியில் படிக்கும் மாணவன் கணேஷின் அப்பா ராஜ கோபால்.

''முதலமைச்சர் உட்பட பல்வேறு அரசியல் தலைவர்கள், அரசாங்கத் துறைகள், பொது நலத் தொண்டு நிறு வனங்கள், பத்திரிகைகள் அனைவருக்கும் மனு அனுப்பி வைத்திருக்கிறேன். ஆனால் பலன் பூஜ்ஜியம்தான்!'' என்று வேதனை யுடன் குறிப்பிடுகிறார் ராஜகோபால்.

அனைத்து பள்ளி மாணவர்களுக்கும், ஆண்டு முழுவதும் பயன்படுத்தத் தக்க முறையில், ஜூன் மாதத்தில் இலவச பாஸ் தரும் அரசாங்கம், அதையே உடல் ஊன முள்ள மாணவர்களுக்குக் கொடுத்தால் என்ன? தனி பாஸ் என்று எதற்காக அலைகழிக்க வேண்டும்?

- எஸ். சந்திரமௌலி

''லஞ்சம் வாங்கறதுக்கு முன்னால் ஏன் தலைவரே மேக் அப்பெல்லாம் போடுறீங்க?''

''பணம் கை மாறுவதை நமக்குத் தெரியாம வீடியோ எடுத்துத் தொலைச் சான்னா, கொஞ்சம் அழகா இருக்க வேணாமா? அதுக்காகத்தான்!''

- பாம்பன் செ. சல்மான்



காலத்தை வென்ற முதலீட்டு முறை
இந்த தமிழ்ப் புத்தாண்டில் புத்துணர்வுடன்!

சீட்டுத் திட்டங்கள். 3 மில்லேனிய இளமை!

இன்றைய தேவைக்கும் நாளைய வளமைக்கும்.

ஸ்ரீராம் சீட்டுத் திட்டங்கள்:
ஆயிரம் ஆண்டுகளின் அனுபவம்

3000 ஆண்டுகளுக்கு முன்பு தென்னிந்தியாவின் கிராம மக்களின் அனுபவ அறிவிலிருந்து தோன்றியவை சீட்டுத் திட்டங்கள். காலத்தை வென்று இன்றும் இழப்பற்ற, அதிக லாபம் தரும், என்றும் ஏற்புடைய முதலீட்டு முறையும் அதுவே.

வருடங்கள் கூடக்கூட வனப்பும் கூடும்

உலகின் உன்னதமான முதலீட்டு முறையான சீட்டுத் திட்டங்கள் தற்போது கூடுதல் டிவிடெண்ட் திட்டம் மூலம் கூடுதல் பொலிவு பெற்றுள்ளது. முன்னெப்போதும் இல்லாத அளவு அதிகப் பலன்களை வழங்குகின்றன. சீட்டுத் திட்டங்கள், சேமிப்பவர்கள் மற்றும் உடனடியாக தள்ளி எடுப்பவர்கள் இருவருக்கும் இரட்டைப் பலன்.

பொருளாதாரச் சேவையின் பொக்கிஷம் ஸ்ரீராம் சிட்ஸ்

கடந்த 27 வருடங்கள் அயராத சேவையில் 30 லட்சம் குடும்பங்கள் பலனடைந்துள்ளன. 16 லட்சம் பேருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு. ரூ.7,250 கோடி இதுவரை சீட்டுப்பணமாக பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. சமூகத்தின் வளமைக்கான பொக்கிஷம் ஸ்ரீராம் சிட்ஸ்.

3 மில்லேனிய இளமை:
உங்கள் தேவைக்கும் வளமைக்கும்

சேமிப்பில் சிறந்த சீட்டுத் திட்டங்கள் மூலம் புதிய புத்தாயிரம் ஆண்டின் தேவைகளையும் சவால்களையும் எதிர்கொள்வோம். சேமித்து வளம் பெறவும் தேவையெனில் உடனே தள்ளி எடுத்து பணம் பெறவும் இன்றே சீட்டில் சேர்வோம்.

ஸ்ரீராம் சீட்டுத்திட்டங்கள்
புத்துணர்வுடன் முன்னேறுவோம்
புதிய புத்தாயிரம் ஆண்டில்!


திட்டம்				சீட்டு மதிப்பு
ரூ. 250	X	40 மாதங்கள்	ரூ.	10,000
ரூ. 500	X	30 மாதங்கள்	ரூ.	15,000
ரூ. 625	X	40 மாதங்கள்	ரூ.	25,000
ரூ. 500	X	60 மாதங்கள்	ரூ.	30,000
ரூ. 1,000	X	50 மாதங்கள்	ரூ.	50,000
ரூ. 2,500	X	30 மாதங்கள்	ரூ.	75,000
ரூ. 2,500	X	40 மாதங்கள்	ரூ.	1,00,000
ரூ. 5,000	X	30 மாதங்கள்	ரூ.	1,50,000
ரூ. 5,000	X	40 மாதங்கள்	ரூ.	2,00,000
ரூ. 10,000	X	30 மாதங்கள்	ரூ.	3,00,000
ரூ. 12,500	X	40 மாதங்கள்	ரூ.	5,00,000

* நுழைவுக் கட்டணம் தனி. * முன் அனுமதி பெறப்பட்டது.
நேரடியாக சீட்டில் சேருவோருக்கும் சந்தாதாரர் பரிசு உண்டு.
அறிமுகப்படுத்துவோர் பரிசுகள் தற்போதைய சந்தாதாரர்களுக்கு மட்டுமே.

சித்திரை சீட்டுத் திருவிழா 2 - 14 ஏப்ரல் 2001

ஸ்ரீராம் சிட்ஸ்
தமிழ்நாடு லிமிடெட்
www.shriramchits.com
சுப்ரமணியன் பில்டிங், 1 கிளப் ஹவுஸ் ரோடு
சென்னை - 600 002. போன்: 8461833 - 39.

WORDCRAFTS



இந்தியா முழுக்க எங்கெல்லாம் தேர்தல் தமாஷ் திருவிழாக்கள் நடத்தப்பட்டாலும், அங்கெல்லாம் பரிவட்டம் கட்டிக் கொள்ள முதல் ஆளாய் முந்திக் கொள்வது மேன்மை பொருந்திய மைசூர் மைதான்!

'வோட்டர்ஸ் இங்க்' என்று செல்லமாக அழைக்கப்படும் 'இன்டெலிபிள் இங்க்' மைசூர், பண்ணிமண்டபம் அருகில் உள்ள 'மைசூர் பெயின்ட்ஸ் அண்ட் வார்னிஷ்' நிறுவனத்தில் தயாராகிறது.

• மைசூர் அரண்மனை

மைசூர் மை



• விஸ்வநாத்



'மை'க்குப் பின்னால் ஒரு ராஜா காலத்துக் கதை சொல்கிறார்கள்.

மைசூர் மகாராஜா கிருஷ்ணராஜ உடையாரால் 1937ல் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமிது. மைசூர் அடர்ந்த வனப்பகுதியாக இருந்ததால் அரக்கு, குங்கிலியம், மரப்பிசின் போன்றவை தாராளமாக கிடைத்தன. இயற்கையின் கொடையைப் பயன்படுத்த நினைத்த மைசூர் மகாராஜா, 'லாக்ஸ் அண்ட் பெயிண்ட்ஸ்' என்ற கம்பெனியை ஆரம்பித்தார். ஏக்கர் கணக்கில் விரிந்திருந்த அரண்மனை, சந்தனம், செந்தேக்கு, கருந்தேக்கு, ரோஸ்வுட் போன்ற விலை உயர்ந்த மரங்களால் இழைக்கப்பட்டது. வேலைப்பாடு செய்யப்பட்ட மரத்தாலான கைவினைப் பொருட்கள் வேறு நிரம்பியிருந்தன. அவற்றை பாலிஷ் செய்யவும், அரசாங்க அரக்கு முத்திரைகளைத் தயாரிக்கவும் இந்த வார்னிஷ் கம்பெனி ஆரம்பிக்கப்பட்டதாகத் தகவல்.

பின்னாளில், அது 'டெகோரேடிவ்' பெயிண்ட் தயாரிக்கும், கம்பெனியாக மாறியது. 1962ல் இந் நிறுவனத்தின் நிர்வாகத் தலைவராக இருந்த நரசிம்ம அய்யங்கார் என்பவரின் நூதனமான ஐடியாதான் இந்த வாக்காளர் மை தயாரிப்பு.

சரி, ஃபிளாஷ்பேக் முடிந்துவிட்டது. இனி, தொழிற்சாலைக்குள் நுழைவோமா?

ஊருக்கு வெளியே, வாட்டசாட்டமாக வளர்ந்து நிற்கும் மரங்களின் நடுவே, மிக அமானுஷ்யமாய் நிற்கிறது அந்த 'பெயின்ட் ஹவுஸ்.'

இரும்பு கேட்டில் ஆயுதம் தாங்கிய தீவிர காவல். பத்தடிக்கு ஒரு பரிசோதனை. தீவிர

• முன்வாசல் கேட் பலத்த காவலில்





• அழியாத மை நிரப்பப்படுகிறது

விசாரிப்புகள். அதையெல்லாம் கடந்து மரப் படிகளில் ஏறிப் போனால், நிர்வாக இயக் குநர் வரவேற்கிறார்.

"பார்முலா தவிர, நீங்கள் எதைப் பற்றி வேண்டுமானாலும் கேள்வி கேட்கலாம். 'மை' தயாராகும் இடத்திற்கு வெளி ஆட்கள் அனுமதிக்கப்படுவதில்லை. பத்திரிகை சார்பில் வந்திருப்பதால், பாட்டிலில் மை- அடைக்கப்படும் இடத்தை வேண்டுமானால் பார்வையிடலாம்" என்று சிறப்பு அனுமதி தருகிறார் நிர்வாக இயக்குநர் டி.எஸ். விஸ்வ நாத்.

இங்கே ஆண்டு முழுவதும் 'இங்க்' தயாரிக்கப்படுகிறதா?

இல்லை. இந்த அழியாத மை நெயில் பாலிஷ் போல உலர்ந்து விடும் தன்மை கொண்டது. ஆறு மாதம்தான் லைஃப் டைம். அதனால் 'ஆர்டர்' வந்தால் மட் டுமே தயாரிப்பில் இறங்கு வோம். செய்தித் தாளில் தேர்தல் அறிவிப்புச் செய்திகள் வர ஆரம்பித்ததும், மூலப் பொருட் களைச் சேகரித்துத் தயார் நிலையில் வைத்துக் கொள் வோம். சம்பந்தப்பட்ட மாநிலத் தேர்தல் ஆணையரிடமிருந்து அதிகாரபூர்வமான கடிதம் வந் ததும், 'மளமள' என்று வேலை யில் இறங்கி விடுவோம்.

95 சதவிகிதம் பணம் கைக்கு வந்ததும், நாங்களே எங்கள் பொறுப்பில் தேர்தல் அலுவல கத்திற்குக் கொண்டு சேர்க் கிறோம். நேஷனல் ஃபிஸிகல் லேப்பிலிருந்து மையைப் பரி சோதித்து, தரச் சான்றிதழ் தந்த தும், மீதி பணத்தையும் தந்து விடுவார்கள்.

தமிழ்நாட்டைப் பொருத்த வரை, எப்போதுமே 'ப்ராம்ப்ட்' பேமண்ட்தான். சிலசமயம் காசோலையையும் ஆர்டரையும் இணைத்தே அனுப்பி விடுவார் கள்.

மைக் குப்பியின் குறைந்த பட்ச, அதிக பட்ச விலை என்ன?

5 சி.சி பாட்டில் பதினாறு ரூபாய், 7.5 சி.சி இருபத்திரண்டு ரூபாய் என விற்கிறோம். வெளிநாட்டினரின் தேவைக்கு ஏற்ப 25 சி.சி, 50 சி.சி, 80 சி.சி, 100 சி.சி என அளவுகள் மாறுபடுவது போல, ஏற்றுமதி விலைகளும் மாறுபடும். தென் னாப்பிரிக்கா, நைஜீரியா, துருக்கி, நேபாளம், நியுகினியா, கனடா, கம்போடியா, கானா போன்ற நாடுகளும் எங்கள் வாடிக்கையா ளர்கள்தான்.

இந்தத் தொழிற்சாலையில் பெயிண்ட் வகைகளும் தயாராகின்றனவாமே!

தேர்தல் மை என்பது சீசனல்தான். மற்ற நேரங்களில் மைசூர் பெயிண்ட்ஸ் வேலை கள் நடைபெறும். 'மைலாக்' என்ற வீட்டு அலங்கார வர்ணப்பூச்சும், வர்த்தகப் பூச்சும் தயாராகின்றன. எங்களுடைய 'பிருந்தாவன் அல்கஹாலிக் பாலீஷ்' உலகத் தரம் வாய்ந் தது. மர வேலைப்பாடுகளுக்கு நல்ல பள பளப்பையும், நீடித்த ஆயுளையும் தரும் என்பதால் நல்ல கிராக்கியுள்ளது.

'அழிசலாகத ஷாயி' அதாவது 'அழிக்க

முடியாத மை' என்கிறீர்கள். ஆனாலும் சில இடங்களில் கள்ள வோட்டுப் புகார் வருகின்றதே!**

ஒரு சிலர் மை வைக்கும் சமயம் சின்னத் தந்திரம் செய்கிறார்கள். (அது என்ன ட்ரிக் என்பதை அவர் சொன்னார். ஆனால் அதை வெளியிட முடியாது. ஸாரி!) அதன் மூலம் மையை அழிக்க முடியும். அதனால்தான் நகத்தின் வேரும், விரலின் சருமமும் இணையும் இடத்தில் 'புள்ளி' வைக்கப்படுகின்றது. சருமத்தின் மீது பட்ட மையை அழித்து விட்டாலும், நகத்தின் வேரால் உறிஞ்சப்பட்டு விடும் மை இலேசில் போகாது. நகம் வளர வளர வெட்டும்போது தான் 'மை' முழுமையாக அழிபடும். மை அழிக்கப்பட்டதா என 'லேப் டெஸ்ட்' செய்து கண்டுபிடித்து விடலாம். ஆனால் தேர்தல் தினத்தன்று அதற்கெல்லாம் ஏது நேரம்? பல இடங்களில் கண்டு கொள்வதில்லை.



• 'பாக்' செய்யப்படுகிறது.

இந்தியா முழுவதுக்கும் நீங்கள் மட்டுமே சப்ளை செய்கிறீர்களே! யாராவது போட்டி கம்பெனி ஆரம்பித்தால் என்ன ஆகும்?

'இன்டெலிபிள் இங்க்' தயாரிக்கும் பேடன்ட் உரிமை எங்களிடம் மட்டுமே இருக்கிறது. அதையும் மீறி, ஓரிரு தனியார் மை தயாரிப்பாளர்கள் 'அழியாத மை' தயாரித்தார்கள். ஆனால் அரசாங்க ஆர்டர் எதுவும் வராத நிலையில் நஷ்டம் ஏற்பட்டு நிறுத்தி விட்டார்கள்.

தனியாருக்கு இந்த மையைத் தருவீர்களா?

பொதுவாகத் தருவதில்லை. அரசாங்கம், கூட்டுறவு மையங்கள் தவிர, ஓரிரு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு விசேஷ அனுமதியின் பேரில் சப்ளை செய்கிறோம். ஆனால் அது தேர்தல் சமயமாக இருக்கக் கூடாது.

சமீபத்தில் மிகப் பிரபலமான ஆன்மீகப் பெரியவரின் ஆசிரமத்தில், லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்ட பிரும்மாண்டமான விழா நடந்தது. அந்தச் சமயம், தரிசனம் முடிந்து பிரசாதம் வாங்கிக் கொண்டவர்களை அடையாளம் காண்பதற்காக 'மை' வாங்கிச் சென்றார்கள்.

தமிழ்நாட்டிலிருந்து 'ஆர்டர்' வந்துவிட்டதா?

நேற்றுதான் வந்திருக்கிறது. அறுபத்திரண்டாயிரம் 7.5 சி.சி குப்பிகளும், இருபத்தையாயிரம் 5 சி.சி குப்பிகளும் தேவை என குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போது பீஹார் உள்ளாட்சித் தேர்தலுக்காக குப்பிகள் 'பேக்' ஆகி கொண்டிருக்கின்றன. அது முடிந்ததும் தமிழ்நாட்டுக்கான 'இங்க்' தயாரிப்பு பணி தொடங்கி விடும்.

பெரும்பான்மையான அரசு நிறுவனங்கள், தொழிற்சாலைகள் நஷ்டத்தில் இயங்கிவரும் சமயத்தில் 'மைசூர் பெயின்ட்ஸ் அண்ட் வார்னிஷ்' கம்பெனி' மட்டும் கடந்த பத்து வருஷமாக கணிசமான லாபத்தில் இயங்கி வருகிறதாமே!

வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை முழுமையாக பெற்றிருக்கிறோம். அதுதான் எங்கள் வெற்றியின் ரகசியம்.

சுமார் நாற்பது வருடமாக எங்கள் மை பயன்படுத்தப்பட்டு வருகிறது. சிறு புகார் கூட வந்ததில்லை. அதைத்தான் எங்களுடைய சாதனையாக நினைக்கிறோம் என்றார் டி.எஸ். விஸ்வநாத் பெருமையாக.

கருநீல நிறம் போரடிக்கிறதே! வேறு ஏதாவது நிறத்தில் இங்க் தயாரிக்கக் கூடாதா என்று ஆலோசனைகள் வருவதால், கரும் பச்சை நிறமாக மாற்றலாமா என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்களாம்!

— அனு

காளான் தெரபி...



சீனாவில், காட்டுப் பகுதிகளை ஒட்டிய கிராமங்களில், சில குறிப்பிட்ட வகை காளான்களைப் பறித்து எடுத்துக் கொண்டு வந்து, அரைத்து, மருந்தாகக் கொடுப்பார்களாம். அந்தக் காளான் மருந்து, உடனடி நிவாரணத்தைக் கொடுக்குமாம். இந்த ரகசியம் நாளடைவில் பரவி, காளான் மருத்துவம் மக்கள் மத்தியில் பிரபலமடைந்தது. குறிப்பாக 'கேனோடெர்மா' என்கிற காளான் வகை, அதன் அரிய மருத்துவ குணங்களுக்காக, 'மூலிகைகளின் அரசன்' என்றே குறிப்பிடப்பட்டது.



• டாக்டர் லிம் சூ ஜின்

இதில் ஓர் ஆச்சரியம் என்ன தெரியுமா? இந்தக் காளான் மருத்துவம் பற்றி ஆராய்ந்தால், அதன் ரிஷிமூலம் இந்தியாதான். இங்கிருந்து சீனாவுக்குச் சென்று, மலேசியா, ஜப்பான் என்று கிழக்காசிய நாடுகளுக்குப் பரவி, இப்போது, கேப்ஸ்யூல் வடிவில் மறுபடி இந்தியாவுக்கே வந்துள்ளது.

அண்மையில் மலேசியாவைச் சேர்ந்த டாக்டர் லிம் சூ ஜின் சென்னை வந்திருந்தார். இந்தியாவில்-கரக்பூர் ஐ.ஐ.டியில் இஞ்சினியரிங் படித்துவிட்டு, மலேசியா போன இவர், காளான் மருத்துவத்தில் சுமார் பத்தாண்டுகள் ஆராய்ச்சி செய்து, டாக்டர் ஆனார். இன்று இவரது நிறுவனம் தயாரிக்கும் கேனோடெர்மா காளான் அடிப்படையிலான மருந்துகளுக்கு உலகமெங்கும் நல்ல வரவேற்பு.

"காளான் தெரபி என்கிற காளான் மருத்துவம், பழங்கால இந்திய மருத்துவ முறைகளைப் போலத்தான் செயல்படுகிறது. எந்தவிதமான நோய் என்றாலும், அதன் மூல காரணம் என்ன என்று கண்டறிந்து அதற்கு மருத்துவம் செய்வதுதானே இந்திய மருத்துவ முறை. அதையேதான் இந்த கேனோடெர்மா காளானிலிருந்து தயாரிக்கப்படும் மாத்திரைகளும் செய்கின்றன.

நோய் என்னவாக இருந்தாலும் சரி, கேனோடெர்மா மாத்திரைகள் செயல்படுகிற முறை ஒன்றுதான். உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. ரத்தக் குழாய்களுக்கு அதிக அளவில் ஆக்சிஜன் கிடைக்கச் செய்கிறது. உடலில் ஏற்கெனவே சேர்ந்து, பிரச்னைகள் கொடுத்துக் கொண்டிருக்கிற நச்சுப் பொருட்களை அகற்றி, சுத்தப்படுத்துகிறது.

இதனால், என்ன நோய் என்றாலும், அதன் மூல காரணம் கண்டறியப்பட்டு, அது சரிசெய்யப்பட்டுவிடுகிறது. இதனால் பக்க விளைவுகள் ஏற்படாது என்பது



முக்கியமான இன்னொரு அனுகூலம்.

— கௌதம் ராம்



எழுபத்து ஒன்றாம் அத்தியாயம்

'திருவயிறு உதித்த தேவர்'

செம்பியன்மா தேவியைப் பார்க்க வேண்டுமென்று சுந்தர சோழர் பல முறை சொல்லி அனுப்பிய பின்னர், அம் மூதாட்டி சக்கரவர்த்தியைக் காண்பதற்கு வந்தார். சக்கரவர்த்தி அவர் வரும் செய்தி அறிந்து வாசற்படி வரையில் நடந்து சென்று காத்திருந்து வரவேற்று அழைத்துச் சென்றார். தம் பக்கத்தில் சிம்மாசனத்தில் வீற்றிருக்கும்படி கேட்டுக்கொண்டார்.

''அரசர்க்கரசே! அடுத்தடுத்துத் துயரமான செய்திகளே கேட்டு நொந்திருக்கும் என் உள்ளம் தாங்கள் உடல் நலம் பெற்றிருப்பதைப் பார்த்துத் திருப்தி அடைகிறது. இறைவன் அருளால் நெடுங்காலம் தாங்கள் சிரஞ்சீவியாக வாழ்ந்திருந்து இந்த உலகத்தைப் பரிபாலித்து வர வேண்டும்'' என்று முதிய பிராட்டியார் கூறினார்.

''அன்னையே! என் கால்கள் மீண்டும் நடக்கும் சக்தி பெற்றிருப்பதைக் குறிப்பிடுகிறீர்கள். அதைப் பற்றி எனக்கும் திருப்திதான்! இந்தச் சோழ நாடெல்லாம் போற்றி வணங்கும் தாங்கள் வரும்போதும் எழுந்து வரவேற்க முடியாதவனாயிருந்தேன். ஊமையும் செவிடுமான ஒரு தெய்வப் பெண்மணியின் அன்பின் சக்தியால் என் கால்கள் இழந்திருந்த இயல்பை மீண்டும் பெற்றன. எழுந்து நின்றும் நடந்து வந்தும் தங்களை வரவேற்கும் பாக்கியம் பெற்றவனானேன். ஆயினும், தேவி, நான் உயிர்

அமரர் கல்கி

வாழ்ந்திருப்பது பற்றித் திருப்தி அடையவும் இல்லை; இனி நெடுங்காலம் உயிர் வாழ விரும்பவும் இல்லை. தாங்கள் அத்தகைய ஆசி எனக்குக் கூற வேண்டாம். விரைவில் சிவ பதம் கிடைக்க வேண்டுமென்று வாழ்த்துங்கள்!" என்றார் சுந்தர சோழர்.

"சக்கரவர்த்தி! தங்கள் குலத்து மூதாதையர் எல்லாரும் வீர சொர்க்கத்தையோ, சிவ பதத்தையோ அடைந்தார்கள். தங்களுக்கும் பரலோகத்தில் அவர்கள் இடந் தேடி வைத்திருப்பார்கள். உரிய காலம் வரும்போது சிவ கணங்கள் வந்து தங்களை அழைத்துப் போவார்கள். ஆனால் அத்தகைய பதத்தை அடைவதற்குத் தாங்கள் அவசரப்படுதல் ஆகாது. இந்த உலகில் தங்களுக்கு இன்னும் கடமை எவ்வளவோ இருக்கிறது. நேர்மை நெறி பிறழாத தங்கள் ஆட்சியின் கீழ் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள். சிவாலய கைங்கரியங்கள் நாடெங்கும் நடைபெற்று வருகின்றன. சைவர்கள், வைஷ்ணவர்கள், புத்தர்கள், சமணர்கள் முதலான பல மதத்தினரும் தங்கள் ஆயுள் நீடிக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்து வருகிறார்கள்..."

"தாயே! அவர்கள் யாரும் இனி அத்தகைய பிரார்த்தனை செய்யலாகாது. என் ஆயுள் நீடிக்கப் பிரார்த்திப்பது என் மன வேதனையை நீடிக்கச் செய்யும் பிரார்த்தனையாகும். சோழ நாடு அளித்த வீரர்களுக்குள்ளே வீராதி வீரனான ஆதித்த கரிகாலனைப் பறி கொடுத்துவிட்டு, நான் இவ்வுலகில் நெடுங்காலம் உயிரோடு இருக்க வேண்டுமா? அவன் இறப்பதற்கு முன்னதாக என் உயிர் போயிருக்கக் கூடாதா...?"

"சக்கரவர்த்தி! புத்திர சோகம் மிகக் கொடியதுதான். ஆனாலும் விதியின் வலிமையைப் பற்றிப் பேதையாகிய நான் தங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. கிருஷ்ண பகவான் அர்ச்சுனனுடன் இணை பிரியாத் தோழராயிருந்தார். காக்கும் கடவுளாகிய திருமாலின் அவதாரம் கிருஷ்ண பரமாத்மா. அவராலே கூட அரவானையும் அபிமன்யுவையும் காப்பாற்றிக் கொடுக்க முடியவில்லை. அத்தகைய வீரப் புதல்வர்கள் இறந்த பிறகும் அர்ச்சுனன் உயிர் வாழ்ந்திருக்கவில்லையா? பெற்ற பிள்ளைகளின் மீது ஆசை இல்லாதவன் அல்லவே அர்ச்சுனன்? 'மன்னுயிரைக் காக்கும் பொருட்டு நீ உன் உயிரைக் காத்துக் கொள்ள வேண்டும்' என்று கிருஷ்ண பரமாத்மா போதித்ததை ஏற்றுக்கொண்டு அர்ச்சுனன் உயிர் வாழ்ந்தான். சக்கரவர்த்தி! கிருஷ்ண பகவான் அர்ச்சுனனுக்குச் செய்த போதனை தங்களுக்கும் பொருத்தமானது."

"தாயே! அபிமன்யு போர்க்களத்தில் வீரப் போர் புரிந்து மரணமடைந்தான்; வீர சொர்க்கம் எய்தினான்!"

"தங்கள் குமாரன் வீரத்தில் அபிமன்யுவுக்குக் குறைந்தவன் அல்லவே! பன்னிரண்டாம் வயதில் சேவூர்ப் போர்க்களத்திலும் பதினெட்டாம் பிராயத்தில் வீர பாண்டியன் இறுதிப் போரிலும் ஆதித்த கரிகாலன் புரிந்த வீரச் செயல்களை இந்த உலகம் என்றும் மறக்காதே! அபிமன்யுவைக் கடைசியில் பலர் சூழ்ந்துகொண்டு அவனை நிராயுதபாணியாக்கி அதர்ம யுத்தம் செய்து கொன்றார்கள். அது போலவே ஆதித்த கரிகாலனையும் தந்திரத்தால் தனிமைப் படுத்திச் சதிகாரர்கள் பலர் சூழ்ந்து நின்று திடீரென்று தாக்கிக் கொன்றார்கள்..."

"தாயே! அவன் இறந்தது எப்படி என்பதை மட்டும் நான் நிச்சயமாகத் தெரிந்து கொள்ள முடியுமானால் என் மனம் ஓரளவு நிம்மதி அடையும்."

"சென்று போனதைப் பற்றி எதற்காக மனத்தைப் புண்படுத்திக் கொள்ள வேண்டும்? கரிகாலனுடைய விதி முடிந்தது; வால் நட்சத்திரம் விழுந்தது; சோழ நாடு ஒரு மகா வீரனை இழந்தது. ஏன், எப்படி என்று விசாரித்து என்ன ஆகப் போகிறது?"

"உண்மை தெளிவாகாதபடியால், யார் யார் பேரிலோ சந்தேகம் உண்டாகிறது. தாயே! பூமியை ஆதிசேஷன் தாங்குவது போல் சோழ சாம்ராஜ்யத்தையே தாங்கி வந்தவரான பெரிய பழுவேட்டரையர் மேலேயே சிலர் சந்தேகத்தைக் கிளப்புகிறார்கள்; வீண் பழி சுமத்துகிறார்கள்."

"அவரையே கேட்டு உண்மையைத்

தெரிந்துகொள்ளலாம் அல்லவா?"

"பெரிய பழுவேட்டரையரைக் கேட்க யாருக்குத் தைரியம் உண்டு? எனக்கு இல்லை, தாயே! எப்படியோ அவர் இதில் சிக்கிக் கொண்டு மனம் நொந்து போயிருக்கிறார். என்ன நடந்தது என்று அவராகச் சொல்லாத வரையில், அவரை யார் கேட்க முடியும்? அம்மா! தக்கோலம் போர்க்களத்தில் என் பெரிய தந்தை இராஜாதித்தர் யானை மேல் துஞ்சி வீர சொர்க்கம் புகுந்த பின்னர், சோழ சைன்யம் சின்னாபின்னப்பட்டுச் சிதறி ஓடத் தொடங்கியது. ஓடிய வீரர்களை வழி மறித்து நிறுத்தி மறுபடியும் ஒரு சைன்யமாக்கிக் கன்னர தேவன் படைகளை விரட்டியடித்த மகா வீரர் பெரிய பழுவேட்டரையர். அன்று அவர் அவ்விதம் செய்திராவிட்டால், இன்றைக்குச் சோழ ராஜ்யமே இருந்திராது. தக்கோலத்துப் போரில் அவருடைய திருமேனியில் அறுபத்து நாலு காயங்கள் பட்டன. அப்படியும் அவர் சோர்ந்து விடாமல் போர்க்களத்தில் நின்று வெற்றி கண்டார். அதற்குப் பிறகு அவர் போர்க்களத்துக்கே போகக்கூடாதென்று கட்டுப்பாடு செய்து தனாதிகாரியாக்கினோம். அத்தகைய பெரியவரை, - என் தந்தைக்குச் சமமானவரை, - நான் என்ன கேட்க முடியும்?"

"உண்மை வெளியாவதற்கு வேறு வழி ஒன்றும் இல்லையா?"

"வாணர் குலத்து வந்தியத்தேவன் கரிகாலனுடைய உடலின் அருகில் இருந்தான் என்று சொல்கிறார்கள். அவனைக் கேட்டு உண்மை அறியலாம் என்று எண்ணினேன். அவனும் பாதாளச் சிறையிலிருந்து தப்பி ஓடி விட்டான். இதைப் பற்றிச் சின்னப் பழுவேட்டரையர் முதன்மந்திரி மேல் குறை சொல்லுவதற்கு நியாயம் இருக்கிறது."

இதுவரையில் மௌனமாக இருந்த குந்தவை இப்போது குறுக்கிட்டு, "தந்தையே! அந்த வீரரை எப்படியும் கொண்டு வந்து ஒப்புவிப்பதாக முதன்மந்திரி பொறுப்பு ஒப்புக் கொண்டிருக்கிறாரே?" என்றாள்.

"குழந்தாய்! இம்மாதிரி முதன்மந்திரி பல தடவை பொறுப்பு ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆனால் நிறைவேற்றுவது நிச்சயமில்லை. சம்புவரையர் மகன் கந்தமாறன் ஓடியவனைத் துரத்திக் கொண்டு போயிருப்பதாக அறிகிறேன். கந்தமாறன் அவ்வளவு முன்யோசனைக்காரன் அல்ல; அவசர புத்தி படைத்தவன். அதிலும் சம்புவரையர் குலத்துக்குக் களங்கம் உண்டாகக்கூடாது என்ற ஆத்திரமுள்ளவன். அவன் வந்தியத்தேவனைத் தொடர்ந்து போயிருப்பது என் கவலையை அதிகமாக்குகிறது."

"ஐயா! சென்று போனதை மறந்து விடுவதே நல்லது. இனி நடக்க வேண்டியதைப் பற்றி யோசியுங்கள்."

"அன்னையே! அதற்காகவே தங்களை அழைத்து வரச் சொன்னேன். ஆளுக்கு மேல் ஆள் அனுப்பிக் கொண்டிருந்தேன். மேலே நடக்க வேண்டியது பற்றி எனக்கு யோசனை கூறி உதவ வேண்டும்."

"சக்கரவர்த்தி! அறிவிற் சிறந்த அமைச்சர்கள் பலர் தங்களுக்கு யோசனை சொல்ல இருக்கிறார்கள். இந்தப் பேதை ஸ்திரீ என்ன யோசனை சொல்லப் போகிறேன்? என்னைக் கரம் பிடித்து என் ஜீவியத்தைப் புனிதப் படுத்திய மகா புருஷர் இவ்வுலகில் வாழ்ந்திருந்த காலத்திலும் நான் அரசாங்க காரியங்களில் கவனம் செலுத்தியதில்லை. அவர் தேவருலகம் சென்ற பிறகு சிவ கைங்கரியத்திலேயே ஈடுபட்டிருக்கிறேன். என்னால் என்ன யோசனை சொல்ல முடியும்?"

"தேவி! கோபித்துக் கொள்ளக்கூடாது. எங்கள் சோழ குலத்தில் தோன்றிய பெண்கள் எல்லாரும் பேதைகளாயிருக்கவில்லை. இதோ இருக்கிறாளே, என் அருமை மகள் குந்தவை, அவளுக்கு நிகரான அறிவு படைத்தவர்களை நான் கண்டதில்லை..."

"மன்னிக்க வேண்டும், சக்கரவர்த்தி! நான் சோழ குலத்தில் பிறந்தவள் அல்லவே? மழவரையர் குலத்தில் பிறந்தவள்தானே?" என்றார் முதிய பிராட்டியார்.

"எந்தக் குலத்தில் பிறந்தாலும்,

பெண்கள் அறிவுடையவர்களாக இருக்கலாம்; பிறந்த குலம், புகுந்த குலம் இரண்டுக்கும் நன்மை உண்டாக்கலாம். பெண்கள் வெறும் பிடிவாதம் பிடித்துப் பிறந்த குலமும் புகுந்த குலமும் அழிந்து போவதற்குக் காரணம் ஆவதும் உண்டு, தாயே! தாங்கள் அத்தகைய குல நாசத்துக்குக் காரணமாகப் போகிறீர்களா?''

இவ்விதம் சுந்தர சோழர் கேட்டதும், செம்பியன் மாதேவி நெருப்பை மிதித்தவர் போல் துடித்து, ''சக்கரவர்த்தி! இது என்ன வார்த்தை? என்னால் ஏன் சோழ குலம் நாசம் அடைய வேண்டும்? நான் அவ்வளவு சக்தி படைத்தவள் அல்லவே?'' என்று கண்களில் நீர் மல்க விம்மிக் கொண்டே கூறினார்.

''தேவி! சிறிது கடுமையாகப் பேசுவதற்காக என்னை மன்னிக்க வேண்டும். என் மூத்த குமாரன் இறந்து நான் உயிரோடிருக்கிறேன் என்னும் எண்ணம் என் நெஞ்சைப் பிளந்துகொண்டேயிருக்கிறது. ஆனால் இதைக் காட்டிலும் எனக்கு ஏற்படக் கூடிய துன்பம் ஒன்றும் உண்டு. என் மூதாதையர் காலத்திலிருந்து வலுப்பெற்றுப் பரவி வரும் இந்தச் சோழ ராஜ்யம் என் காலத்தில் சின்னா பின்னப்பட்டு அழிந்தது என்றால், அதைக் காட்டிலும் கொடிய தண்டனை எனக்கு வேறொன்றும் இல்லை. மூன்று வருஷங்களாக என் அருமைக் குமாரன் கரிகாலனை நான் பார்க்காமலே இருந்தேன். எனக்காகக் காஞ்சி நகரில் அவன் பொன்மாளிகை கட்டினான். அங்கு வந்து தங்கும்படி என்னை அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தான். நான் போகவில்லை. என் உடல்நிலையைக் காரணமாகச் சொல்லிக் கொண்டிருந்தேன். உண்மையான காரணம் அதுவல்ல. நான் காஞ்சிக்குப் புறப்பட்டுச் சென்றால், பழுவேட்டரையர்களின் சிநேகத்தில் அவநம்பிக்கை கொண்டு நான் போய் விட்டதாக அவர்களும் நினைக்கலாம்; மற்ற சிற்றரசர்களும் பெருந்தர அரசாங்க அதிகாரிகளும் கருதலாம். அதிலிருந்து என்ன சச்சரவு நேருமோ, என்ன விபரீதம் இந்தச் சோழ ராஜ்யத்துக்கு ஏற்படுமோ என்று எண்ணித்தான் நான் காஞ்சிக்குப் போகவில்லை. நான் போயிருந்தால் ஒருவேளை என் அருமைக்குமாரன் கரிகாலன் இன்று உயிரோடு இருந்திருப்பான்...''

''மன்னர் மன்னா! தாங்கள் எவ்வளவோ அறிவாளி; ஆற்றல் மிகப் படைத்தவர். ஆயினும் விதியை மாற்றி எழுதத் தங்களால்கூட முடியாது...!''

''ஆம், அன்னையே! விதியை என்னால் மாற்றியிருக்க முடியாது. ஆனால் என் குமாரனை அந்திம காலத்தில் பார்க்க முடியாமலே போய்விட்டதே, அவன் மனத்தில் குடிகொண்டிருந்த வேதனையை அறியாமல் போய்விட்டேனே என்று இன்றைக்கு நான் படும் பச்சாத்தாபம் இல்லாமற் போயிருக்கும். இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன்? விஜயாலய சோழரும் அவர் வழியில் வந்த வீராதி வீரர்களும் இரத்தம் சிந்தி உயிரைக் கொடுத்து ஸ்தாபித்த இந்தச் சோழ ராஜ்யத்தின் நலத்தைக் கருதி என் சொந்த ஆசாபாசங்களையெல்லாம் நான் வேரோடு களைந்து விட்டிருந்ததைத் தங்களுக்குத் தெரிவிப்பதற்காகத்தான். ஆதித்த கரிகாலனை என்ன காரணத்தினாலோ பழுவேட்டரையர்களுக்கும் அவர்களைச் சேர்ந்த சிற்றரசர்களுக்கும் பிடிக்காமல் போய்விட்டது. தங்கள் குமாரனும், என் சகோதரனுமான மதுராந்தகனை எனக்குப் பிறகு சோழ சிங்காதனத்தில் ஏற்றி வைக்க வேண்டும் என்று பிரயத்தனம் செய்தார்கள். அவர்கள் அப்படிப் பிரயத்தனம் செய்ததில் தவறு ஒன்றுமில்லை. மகா புருஷரும் சிவஞான சித்தருமான கண்டராதித்தருடைய புதல்வன் சோழ சிங்காதனத்தில் ஏற எல்லா விதத்திலும் தகுதி வாய்ந்தவன். உண்மையில் நான் முடி சூட்டிக்கொண்டதே தவறான காரியம். அப்போது பெரியவர்கள் எல்லாரும் சொன்னார்களே என்று, மறுத்துப் பேச முடியாமல், இசைந்துவிட்டேன். அதன் பலன்களை இன்று அநுபவிக்கிறேன். என் அருமைக் குமாரனைப் பறிகொடுத்து விட்டு நான் உயிரோடிருக்கிறேன்! இவ்வளவு துன்பமே எனக்குப் போதும். இனி



இந்தப் பெரிய இராஜ்யம் உள்நாட்டுச் சண்டையினால் அழிந்து போவதை என் கண்ணால் பார்க்க விரும்பவில்லை. தேவி! அத்தகைய அழிவு இந்தச் சோழ சாம்ராஜ்யத்துக்கு நேராமல் தடுப்பதற்குத் தாங்கள் உதவி செய்ய வேண்டும்!" என்றார் சுந்தர சோழர்.

செம்பியன் மாதேவி தம் கண்களில் துளித்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, "அரசர்க்கரசே! தாங்கள் கூறியது எதுவும் என் சிற்றறிவுக்குச் சரியென்று தோன்றவில்லை. என்னுடைய கணவருக்குப் பிறகு என் மைத்துனரும் தங்கள் தந்தையுமான அரிஞ்சய தேவர் சிங்காதனம் ஏறினார். என் கணவர் விருப்பத்தின்படியே அது நடந்தது. அரிஞ்சயருக்குப் பிறகு தாங்கள் சிங்காதனம் ஏற வேண்டும் என்பதும் என் கணவரின் விருப்பந்தான். மூன்று உலகையும் ஒரு குடையில் ஆண்ட தங்கள் பாட்டனார் பராந்தகத் தேவரும் அவ்வாறு ஏற்பாடு செய்து விட்டுச் சென்றார். ஆகையால், தாங்கள் சோழ சிங்காதனம் ஏறியதில் முறைத் தவறு எதுவும் இல்லை. என்னுடைய நாதர் சிவ பக்தியில் ஈடுபட்டு ஆத்மானுபூதிச் செல்வராக விளங்கினார். இராஜரீக காரியங்களில் அவருடைய மனம் ஈடுபடவில்லை. ஆகையால் அவருடைய காலத்தில் சோழ ராஜ்யம் சுருங்கிக் கொண்டு வந்தது. தாங்கள் பட்டத்துக்கு வந்த பிறகு மறுபடியும் இராஜ்யம் விஸ்தரித்தது. தெற்கேயும் வடக்கேயும் தோன்றியிருந்த பகைவர்கள் அழிக்கப்பட்டார்கள். இவ்விதம் இராஜ்யம் மேன்மையுறுவதற்கு முக்கிய காரணமாயிருந்தவன் தங்கள் அருமைச் செல்வன் ஆதித்த கரிகாலன். அவனுக்கு உலகம் அறிய இளவரசுப் பட்டம் கட்டப்பட்டது. அதை மாற்றி என் மகனுக்கு இராஜ்ய உரிமையை அளிக்க வேண்டும் என்பதற்கு நான் எப்படிச் சம்மதிக்க முடியும்? நான் சம்மதித்தாலும் உலகம் சம்மதிக்குமா? இராஜ்யத்தின் மக்கள் சம்மதிப்பார்களா? சக்கரவர்த்தி! உள்நாட்டுச் சண்டையினால் இராஜ்யம் அழிவதைத் தடுக்க விரும்புவதாகச் சற்று முன்னால் சொன்னீர்கள். ஆதித்த கரிகாலனைப் புறக்கணித்துவிட்டு என் புதல்வனுக்குப் பட்டம் கட்டியிருந்தால், அதே உள்நாட்டுச் சண்டை நேர்ந்திராதா? இராஜ்யம் அழிந்திராதா?" என்று கேட்டார்.

"ஆம், தாயே! அதனாலேதான் நானும் தயங்கிக் கொண்டிருந்தேன். எல்லாரையும் சமரசப் படுத்தி அனைவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஏற்பாடு செய்யப் பிரயத்தனப்பட்டேன். அது கைகூடுவதற்குள்ளே, விதி குறுக்கிட்டு விட்டது; கரிகாலனுடைய ஆயுள் முடிந்துவிட்டது. தாயே! அடுத்தாற் போல் நான் செய்ய வேண்டியது என்ன? தாங்களே சொல்லுங்கள்! இந்த இராஜ்யத்தின் பொறுப்பை என்னால் இனித் தாங்க முடியாது. யாரிடமாவது ஒப்புவித்து விட்டுக் கரிகாலனுடைய கடைசி விருப்பத்தை நிறைவேற்ற விரும்புகிறேன். காஞ்சியில் எனக்காக வென்று கரிகாலன் கட்டியுள்ள பொன் மாளிகையில் தங்கி என் அந்திய காலத்தைக் கழிக்க விரும்புகிறேன். இப்போது யாருக்குப் பட்டம் கட்டுவது என்று சொல்லுங்கள். அருள்மொழியைக் காட்டிலும் மதுராந்தகன் பிராயத்தில் மூத்தவன். என்னைவிட இளையவன் ஆனாலும், அவனுக்குச் சிறிய தந்தை முறையில் உள்ளவன். கொடும்பாளூர் வேளாரும் திருக்கோவலூர் மலையமானும் அருள்மொழிக்குப் பட்டம் கட்ட வேண்டும் என்கிறார்கள். தர்மத்துக்கும் நியாயத்துக்கும் குல முறைக்கும் விரோதமான இந்தக் காரியத்துக்கு நான் எப்படி உடன்பட முடியும்? அல்லது தாங்கள் தான் எப்படி உடன்பட முடியும்? அன்னையே! எனக்கு உதவி செய்யுங்கள்! மதுராந்தகனுக்கு முடி சூட்டத் தங்கள் சம்மதத்தைத் தெரிவியுங்கள். அதை வைத்துக்கொண்டு, நான் சேநாதிபதி பெரிய வேளாரையும் திருக்கோவலூர் மலையமானையும் சம்மதிக்கச் செய்வேன்! தங்கள் சம்மதத்தையும் அநுமதியையும் தெரிவித்து இந்தச் சோழ சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றிய புண்ணியத்தைக் கட்டிக் கொள்ளுங்கள்!" என்றார் சுந்தர சோழச் சக்கரவர்த்தி.

செம்பியன் மாதேவி, "ஐயா! என் சம்மதத்தைக் கேட்க வேண்டாம். சிவபதம் அடைந்த என் இறைவர் எனக்கு இட்ட

கட்டளைக்கு மாறாக நான் நடக்க முடியாது. ஆனால், இராஜ்ய விவகாரங்களில் நான் இனிக் குறுக்கிடுவதில்லை. மதுராந்தகனை அழைத்து அவன் சம்மதத்தைக் கேட்டு எப்படி உசிதமோ அப்படிச் செய்யுங்கள்!" என்றார்.

"ஆம், ஆம்! மதுராந்தகனை அழைத்து அவனுடைய சம்மதத்தைக் கேட்டுக் கொண்டுதான் எதுவும் தீர்மானிக்க வேண்டும். அதற்கும் தங்கள் உதவி வேண்டும். தேவி! மதுராந்தகன் எங்கே?" என்றார் சக்கரவர்த்தி.

செம்பியன் மாதேவி தம் தொண்டை அடைக்க, நாத் தழுதழுக்க, "மதுராந்தகன் எங்கே? சென்ற மூன்று தினங்களாக அந்தக் கேள்வியைத்தான் நானும் கேட்டுக்கொண்டிருக்கிறேன். யாரும் மறுமொழி சொல்லவில்லை. அரசே! என் புதல்வன் எங்கே? கோட்டைத் தளபதி சின்னப் பழுவேட்டரையரைக் கூப்பிட்டுக் கேளுங்கள்!" என்றார்.

"சின்னப் பழுவேட்டரையர் தங்களைக் கேட்க வேண்டும் என்கிறார். தாங்களும் முதன்மந்திரி அநிருத்தரும் ஏதோ சூழ்ச்சி செய்து மதுராந்தகனை மறைத்து வைத்திருப்பதாகக் குற்றம் சாட்டுகிறார். அன்னையே! இப்போது சின்னப் பழுவேட்டரையரையும் முதன்மந்திரியையும் அழைத்துவரச் செய்கிறேன். அநுமதி கொடுங்கள்!" என்றார் சக்கரவர்த்தி.

"அப்படியே அழைத்து வரச் செய்யுங்கள். நானும் அவர்களைக் கேட்கிறேன்!" என்றார் செம்பியன் மாதேவி.


குந்தவை உடனே வாசற் பக்கம் சென்று அங்கிருந்து காவலர்களிடம் சொல்லி அனுப்பினாள். சிறிது நேரத்துக்கெல்லாம் முதன் மந்திரியும் சின்னப் பழுவேட்டரையரும் வந்தார்கள்.

சக்கரவர்த்தி சின்னப் பழுவேட்டரையரை நோக்கி, "தளபதி! சோழ நாடு போற்றி வணங்கும் மூதாட்டியார், நீர் கேட்ட அதே கேள்வியைக் கேட்கிறார். 'மதுராந்தகன் எங்கே?' என்று வினாவுகிறார். மதுராந்தகத் தேவரைப் பற்றித் தாங்கள் அறிந்ததைச் சொல்லுங்கள். தங்கள் சந்தேகத்தையும் ஒளிவு மறைவின்றிக் கூறுங்கள்!" என்றார்.

சின்னப் பழுவேட்டரையர் கூறினார்:- "தேவியாரின் சிவ பக்தியும் சீலமும் உலகம் அறிந்தவை. சோழ நாட்டு மக்கள் அவரை நடமாடும் தெய்வமாகக் கருதிப் போற்றுகிறது போல் நானும் போற்றுகிறேன். நான் இப்போது தெரிவித்துக் கொள்வதைக் குற்றம் கூறுவதாக எண்ணக் கூடாது. எந்தக் காரணத்தாலோ தேவியார் தமது குமாரர் சோழ சிங்காதனம் ஏறுவதை விரும்பவில்லை. இதுவும் எல்லாரும் அறிந்தது. மூத்த பிராட்டியாரைக் காட்டிலும் எனக்காவது மற்றவர்களுக்காவது அவருடைய புதல்வர் விஷயத்தில் அதிக அன்பு இருக்க முடியாது. ஆயினும் மர்மமாயிருக்கும் சில விஷயங்களை விளக்குதல் அவசியமாயிருக்கிறது. அதிலும் சக்கரவர்த்தி 'மதுராந்தகரைக் கொண்டு வருக!' என்று அடியேனுக்குக் கட்டளையிட்டிருப்பதால், என்னுடைய சில சந்தேகங்களையும் வெளியிட வேண்டி வருகிறது. மூன்று நாளைக்கு முன்னால் மூத்த எம்பெருமாட்டியும் மதுராந்தகத் தேவரும் கோட்டைக்கு வெளியே சென்றார்கள். புஷ்பத் திருப்பணி செய்யும் சேந்தன் அமுதனுடைய குடிசைக்குச் சென்று க்ஷேமம் விசாரித்தார்கள். பின்னர் தேவியார் மட்டும் கோட்டைக்குக் திரும்பினார். சிறிது நேரத்துக்குப் பிறகு நானும் என் தமையனாரும் கோட்டை வாசலுக்குச் சற்றுத் தூரத்தில் நின்று கொடும்பாளூர் வேளாருடன் பேசிக் கொண்டிருந்தோம். மதுராந்தகத் தேவரைப் பற்றி நான் விசாரித்துக் கொண்டிருந்த சமயத்தில் யானை – பல்லக்கு பரிவாரத்துடன் சிலர் கோட்டைக்குள் நுழைந்தார்கள். 'மதுராந்தகத் தேவர் வாழ்க!'' என்ற கோஷமும் கேட்டது. முதன்மந்திரி அவர்கள்தான் அப்போது அதைச் சுட்டிக் காட்டினார். யானை மேலிருந்தவர் மதுராந்தகத் தேவர் என்று கூறினார். எனக்கு அதைப் பற்றிச் சிறிது சந்தேகம் ஏற்பட்டது. பின்னர், சக்கரவர்த்தியின் கட்டளைப்படி கோட்டைக் காவல் என் வசத்தில் வந்தது. என் அரண்மனையில்தான் மதுராந்தகர் தங்குவது வழக்கம். அன்றிரவு அதைப் பற்றி நான்

விசாரிக்கவில்லை. மறுநாள் விசாரித்தபோது என் அரண்மனைக்கு வரவில்லை என்று தெரிந்தது. பின்னர் கோட்டை முழுவதும் தேடிப் பார்த்தும் யார் யாரையோ விசாரித்துப் பார்த்தும் மதுராந்தகத் தேவரைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை! கோட்டைக்குள் பிரவேசித்தவர் எப்படி மாய மாய் மறைந்தார்? தேவியாரும் முதன் மந்திரியும் இப்பொழுது நான்





சொல்லப் போவதற்காக மன்னிக்க வேண்டும். அவர்கள் இருவரும் ஏதோ சூழ்ச்சி செய்து, மதுராந்தகர் பீதி கொள்ளும்படியான செய்தி எதையோ அவரிடம் சொல்லி, இந்த நகரை விட்டும் நாட்டை விட்டுமே ஓடிப் போகும்படி செய்து விட்டார்கள் என்று நான் ஐயுறுகிறேன். நான் சொல்லுவது தவறாயிருந்தால் மீண்டும் பெரிய பிராட்டியாரின் மன்னிப்பைக் கோருகிறேன்."

செம்பியன் மாதேவி தழுதழுத்த குரலில் "தளபதி! தாங்கள் இப்போது கூறியது முற்றும் தவறு. சிவ பெருமானுடைய பாத கமலங்கள் சாட்சியாகச் சொல்கிறேன். முதன்மந்திரி அநிருத்தரிடம் சமீபத்தில் என் குமாரனைப் பற்றிப் பேசியதுமில்லை; சூழ்ச்சி செய்ததும் இல்லை. அன்று மாலை நானும் மதுராந்தகனும் சேந்தன் அமுதன் குடிசைக்குப் போனது உண்மைதான். நான் அங்கிருந்து புறப்பட்டபோது மதுராந்தகன் சிறிது நேரம் கழித்து வருவதாகச் சொன்னான். அதற்குப் பிறகு நான் அவனைப் பார்க்கவில்லை. மூன்று நாட்களாக நானும் அவனைத் தேடிக் கொண்டு தானிருக்கிறேன்!" என்றார்.

"தேவியார் கூறுவதை ஒப்புக் கொள்கிறேன். அப்படியானால், முதன்மந்திரி தான் இந்த மர்மத்தை வெளியாக்க வேண்டும்!" என்றார் காலாந்தகர்.

"எந்த மர்மத்தை?" என்று முதன்மந்திரி அநிருத்தர் கேட்டார்.

"தேவியின் புதல்வர் காணாமற் போன மர்மத்தைப் பற்றித்தான்!"

"தளபதி! இந்தக் கோட்டை முழுவதும் தாங்கள் நன்றாகத் தேடிப் பார்த்ததாகக் கூறியது உண்மைதானா?"

"ஆம்; தங்கள் அரண்மனையைத் தவிர மற்ற எல்லா இடங்களையும் தேடித் துருவிப் பார்த்தாகிவிட்டது."

"என் அரண்மனையை மட்டும் விட்டு விட்ட காரணம் என்ன?"

"தாங்கள் சோழ சாம்ராஜ்யத்தின் முதன்மந்திரி என்கிற மரியாதை காரணமாகத்தான்!"

"ஆகா! அப்படியானால் தங்கள் கடமையைத் தாங்கள் சரியாகச் செய்யவில்லை என்று ஏற்படுகிறது. போனது போகட்டும். சக்கரவர்த்தி! தங்களுடைய பெரிய அன்னையும் சோழ நாடு போற்றும் சிவ பக்த சிரோமணியுமான மூத்த எம்பிராட்டியார் தமது புதல்வரைப் பற்றி என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை. நான் அவருடன் சூழ்ச்சி எதுவும் செய்யவில்லை. ஆனால் ஒன்று சொல்கிறேன். தேவியாரின் திருவயிற்றில் உதித்த தேவர் என்னுடைய மாளிகையிலேதான் மூன்று நாளாக இருந்தார். இப்போது இந்த அறையின் வாசலிலே வந்து தங்களையும் அன்னையையும் தரிசிப்பதற்காகக் காத்திருக்கிறார். அநுமதி கொடுத்தால், அழைத்து வருகிறேன்!"

இவ்வாறு முதன் மந்திரி கூறியதும் அங்கிருந்தவர்கள் ஒவ்வொருவரும் அடைந்த வியப்பைச் சொல்லி முடியாது.

சக்கரவர்த்தி, "முதன்மந்திரி! இது என்ன வேடிக்கை! தேவியின் புதல்வரை அழைத்து வருவதற்கு அநுமதி கேட்பானேன்! சீக்கிரமே வரவழையுங்கள்!" என்றார்.

அடுத்தகணம் சேந்தன் அமுதனை முன்னால் விட்டுக் கொண்டு ஆழ்வார்க்கடியான் நம்பி வந்தான்.

சின்னப் பழுவேட்டரையர் மிக்க ஆத்திரத்துடன் "முதன்மந்திரியின் பரிகாசத்துக்கு ஓர் எல்லை வேண்டாமா?" என்று கேட்டார்.

ஆனால் செம்பியன் மாதேவி இரு கரங்களையும் நீட்டித் தம் திரு முகத்தில் அன்பும் ஆர்வமும் ததும்ப "மகனே!" என்று அழைத்ததும், தளபதிக்கு மனக் குழப்பம் உண்டாகி விட்டது.

சேந்தன் அமுதன் "தாயே! என்னை அழைக்க இப்போதேனும் தங்களுக்கு உள்ளம் உவந்ததோ? அது நான் செய்த தவத்தின் பயன்தான்!" என்று கண்களில் நீர் ததும்பச் சொல்லிக் கொண்டு செம்பியன் மாதேவியை நெருங்கினான்.

மதுராந்தக உத்தமச் சோழன் என்று சரித்திரத்தில் புகழ் பெற்ற சிவபக்திச் செல்வனைத் திருவயிறு வாய்த்த தேவி அன்புடன் அணைத்துக்கொண்டு மெய் மறந்து ஆனந்தக் கண்ணீர் பொழிந்தார்.

(தொடரும்)

அதிசயங்கள் நிகழ்த்தும் அற்புத மருத்துவர்


அறுவை சிகிச்சை இல்லாமலேயே இதய நோய் குணமான அதிசயம்!



முக்திரியாபேகம், அந்தோனி பிள்ளை தெரு, கிழக்கு தாம்பரம், சென்னை – 59.

எனக்கு இதயத்தில் அடைப்பும் வலியும் அடிக்கடி வந்ததால் நான் சில ஆண்டுகளாக மயக்கம் மற்றும் உடல்பலவீனத்தால் அவதியுற்றேன். இதனால் சென்னையில் உள்ள ஒரு பிரபல மருத்துவ மனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன். ஆனால் அங்கு என்னை சோதனை செய்து என் இதயத்தில் ஒரு மேஜர் ஆ•்பரேசன் செய்ய வேண்டும் என்று கூறிவிட்டார்கள். இதனால் என் மனம் மிகவும் வேதனைப்பட்டு சில நண்பர்கள் மூலம் ரப்பானி **வைத்யசாலா** சென்றேன். இங்கு எனக்கு நல்ல சிகிச்சை கிடைத்ததின் மூலம் என் நோய் படிப்படியாக இப்போது குறைந்துவிட்டது. நான் இப்போது மகிழ்ச்சியாக இருக்கிறேன்.

மலட்டுத் தன்மை என்பதே இல்லாமல் போச்சு!



குழந்தை இல்லை என்று நாங்கள் ஏறாத ஆஸ்பத்திரி வாசல்கள் இல்லை. பிறகு பலரின் ஆலோசனையைக் கேட்டு ரப்பானி வைத்தியசாலாவிற்கு வந்து தொடர்ந்து மருந்து சாப்பிட்டதில் குழந்தை பெற்று தனது மன மகிழ்ச்சியை அனைவருக்கும் தெரிவிக்கின்றனர். சென்னை தேனாம்பேட்டையைச் சேர்ந்த ஜெயசங்கர்–மாரியம்மாள் தம்பதி.

மருந்தில்லை என்ற சோரியாஸிஸ் மாயமாய் மறைந்து போச்சு!



நான் கடந்த சில வருடங்களாக உடம்பில் அரிப்பு ஏற்பட்டு சோரியாசிஸ் என்ற நோயாலும், கடுமையான மூட்டு வலியாலும் பாதிக்கப்பட்டேன். பல சிகிச்சைகளும் எனக்கு பலன் தராமல் ரப்பானி வைத்தியசாலாவில் காண்பித்தேன். தொடர்ச்சியாக சில மாதங்கள் அங்கு பெற்ற சிகிச்சையின் பலனாக என் பிரச்சனைகள் அனைத்தும் தீர்ந்தது தெரிவிக்கிறார் திருமதி பத்மா ஸ்வாமிநாதன், ரெய்ன் சிட் அபார்ட்மெண்ட்ஸ், மௌனசாமி மடம் தெரு, வெங்கடபுரம், சென்னை – 53.

கர்ப்பப்பை ஆபரேஷன் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றாச்சு!



வயிற்று வலிக்காக சென்னையில் உள்ள ஒரு பெரிய ஆஸ்பத்திரியில் 3 ஆண்டு வைத்தியம் பார்த்தபின் கர்ப்பப்பையை எடுத்துவிடச் சொன்னார்கள். ரப்பானி வைத்தியசாலாவில் 3 மாதம் மருந்து சாப்பிட்டதில் சரியாப் போச்சு. கர்ப்பப்பையை எடுக்க தேவையில்லை என்று அதே ஆஸ்பத்திரியில் சொல்லிவிட்டார்கள் என்கிறார் போரூர், அண்ணாசாலையைச் சேர்ந்த கோவிந்தராஜின் மனைவி **G.** செல்வி.

பல ஆண்டுகளாக மூட்டுவலியால் அவதிப்பட்டவர் முகம் மலர்ந்த காட்சி!



கடந்த பத்து ஆண்டாக கை, கால், இடுப்பு, மூட்டுவலிகளில் கடுமையான வலியினால் பாதிக்கப்பட்ட நிலையில் பல மருத்துவர்களிடம் காண்பித்தும் ஆபரேஷன்தான் முடிவு என்று கூறினார்கள். என்ன செய்யலாம் என்று நான் நினைத்த வேளையில் ஏற்கெனவே பாதிக்கப்பட்டு குணமடைந்த ஒரு நண்பரின் ஆலோசனைப்படி ரப்பானி வைத்தியசாலை **டாக்டர் ஹக்கீம் S.A. சையத் சத்தார்** அவர்களிடம் சென்று மருந்து சாப்பிட்டதில் இன்று 10 ஆண்டுகளுக்கு முன் இருந்ததைவிட உடல் வலுவாகவும் மன நிம்மதியாகவும், எல்லா சங்கடங்களும் தீர்ந்து நிம்மதியாக வாழ்கிறேன் என்று தெரிவிக்கிறார். **D.** வசந்தா, 4–வது குறுக்குத் தெரு, சாலிகிராமம், சென்னை.

மேலும் கை கால் வாதம், மூளை வளர்ச்சி குறைவு, லிவர் பெயிலியர், மூலம், நரம்புத் தளர்ச்சி, ஆண்மைக் குறைவு, யானைக்கால் வியாதி, காக்காய் வலிப்பு போன்ற சகல வியாதிகளுக்கும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது.)

**மாதந்தோறும்
Dr. சையத் சத்தாரின்
யுனானி மருத்துவ மாத
இதழ் கடைகளில் கேட்டு
வாங்குங்கள்**

**டாக்டர் ஹக்கீம் S.A. சையத் சத்தார்
ரப்பானி வைத்ய சாலா**

**73/1, டாக்டர் பெசன்ட் ரோடு,
மீர்சாகிப்பேட்டை மார்க்கெட் அருகில்,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.
போன்: 8510969, 8410874**



சினிமாக்காரன் இலக்கியம் படைக்க முடியாதா?

கொதிக்கிறார் தங்கர்பச்சான்

நான்காண்டு இடைவெளிக்குப் பிறகு, தங்கர்பச்சானின் மூன்றாவது சிறுகதைத் தொகுப்பு வெளிவந்திருக்கிறது. 'குடிமுந்திரி' என்ற அந்நூலின் முன்னுரையில் எரிமலைக் குழம்பாக கொதித்திருக்கிறார் தங்கர்பச்சன். தீவிர இலக்கிய உலகின், கோஷ்டி அரசியல் மீது, பகிரங்கத் தாக்குதல் தொடுத்திருக்கும் அவரை 'பாண்டவர் பூமி' படப்பிடிப்பில் சந்தித்துப் பேசினோம்.



தீவிர இலக்கியவாதிகள் மீதான உங்கள் கோபத்திற்கு என்ன காரணம்? இந்தக் கோபம் உங்களது சிறுகதைகளில்கூட எதிரொலிக்கும் அளவிற்கு, அப்படியென்ன அநீதியை உங்களுக்கு இழைத்து விட்டார்கள்?

எனக்கு மட்டும்தான் என்று இல்லை. படைப்பளவில் நவீனத் தமிழ் இலக்கியத்திற்குப் பெரும் பங்களிப்பைச் செய்திருக்கும் பலரை, பரஸ்பரம் அங்கீகரிக்க தைரியமில்லாத கோழைகள், இவர்கள். தாங்கள் எழுதுவது மட்டுமே இலக்கியம் என்பது போல, சிறு பத்திரிகைகள் மூலம் கோஷ்டிகளைச் சேர்த்துக்கொண்டு, சொந்த விருப்பு, வெறுப்புகளோடு செயல்படுகிறார்கள்.

'நல்ல இலக்கியத்தைக் காலம் தீர்மானிக்கும்' என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். பிறகு இந்தக் கோபத்திற்கு என்ன அவசியம்?



அவசியம் மட்டுமல்ல. அவசரமும்கூட. இந்த இலக்கிய இருட்டடிப்பில் என்னைப் போன்றவர்கள் மட்டுமல்ல, வாசகனும் நேரடியாக பாதிக்கப்படுகிறான். ஏனென்றால், நான் குறிப்பிடும் குழுவினர் இவைதான் இலக்கியம் என்று பட்டியல் போட்டு வாசகனை வழி நடத்த முற்படுகிறார்கள்.

தமிழின் முதல் சிறுகதை என்று சொல்லப்படுகிற வா.வே.சு. ஐயரின் 'குளத்தங்கரை அரசமரம்' தொடங்கி ஒரு நூற்றாண்டு தமிழ்ச் சிறுகதையில், 'இதுதான் இலக்கியம், இதெல்லாம் கிடையாது' என்று ஒரு பம்மாத்துப் பட்டியல் போட்டுக் காட்டுகிறார்கள். எதை எடுத்துக் கொள்வது, எதை விடுவது என்பதில் வாசகனை ஏமாற்றும் போக்கை நீண்ட நாட்களாகக் கடைபிடித்து வருகிறார்கள். இதற்குச் சிறுகதை மட்டும்தான் என்

றில்லை. எல்லா இலக்கிய வடிவங்களும் பலியாகிக் கிடக்கின்றன.

சரி... உங்கள் படைப்புகளை எதன் அடிப்படையில் நிராகரிப்பதாகச் சொல்கிறீர்கள்?

நான் சினிமாவில் இயங்கிக் கொண்டு எழுதுகிறேன் என்பதற்காகவே நிராகரிக்கிறார்கள். சினிமாக்காரனுக்கு மூளை கிடையாது என்று அவர்களாகவே முடிவு செய்துவிட்டார்கள். நமது படங்களின் தரம் அப்படி இருப்பதால், பல நேரங்களில் 'அது உண்மை என்றாலும்கூட, சினிமாக்காரனுக்கு இதெல்லாம் தேவையில்லாத வேலை என்று எல்லை வைத்திருக்கிறார்கள். இவர்களுக்காக நான் குமாஸ்தா வேலையில் சேர முடியுமா?

வெங்கட் சாமிநாதனைத் தவிர, எனது 'ஒன்பது ரூபாய் நோட்டு' படைப்பைப் பற்றி யாரும் ஒரு வார்த்தைகூட குறிப்பிடவில்லை. அவ்வளவு ஏன்... 'வெள்ளை மாடு' தொகுப்பில் இடம் பெற்ற கதைகளெல்லாம் 'கணையாழி'யால் நிராகரிக்கப்பட்ட கதைகள். இந்த ரகசியத்தை முதல்முறையாக வெளியிடுகிறேன்!



'குடிமுந்திரி' முந்தைய இரு நூல்களைக் காட்டிலும் சிறப்புதான். அதை வாசகர்களும் உணர்ந்து கொள்ளக்கூடும். அப்படியிருக்கையில் 'நானே எனது வளர்ச்சியை உணர்கிறேன். எனது கதைகளைத் திரும்பப் படித்த போது பல இடங்களில் பரவசம் அடைந்தேன்' என்று முன்னுரையில் குறிப்பிட்டு இருக்கிறீர்களே. இது உங்கள் படைப்பை நீங்களே தூக்கிப் பிடிக்கும் சுயவிமர்சனம் ஆகாதா?

அந்த அர்த்தத்தோடு எழுதவில்லை.



''அவரும் த.மா.காவும் ஒண்ணா,.. எப்படி?''

''மேனேஜருக்கு அடுத்தபடியா இரண்டாவது இடம் கிடைக்கும்னு நினைச்சாரு...! புதுசா ஒருத்தர் ட்ரான்ஸ்ஃபர்லே வந்து அந்த இடத்தைப் பிடிச்சுட்டாரு...!''

— தஞ்சை தாமு




''யாரு யாரோட கூட்டணி சேருவாங்கன்னு சொல்லவே முடியலை...''

''அதுக்கென்ன இப்போ...?''

''திடீர்னு என் மனைவிக்கு எங்கம்மாவே சப்போர்ட் பண்ண ஆரம்பிச்சிட்டாங்க!''

— எஸ். தமிழ்மணி



''நேத்து எங்க கட்சியோட மாநாடு ஊர்வலம் எல்லாம் நடந்துச்சு...!''

''அடடே, அதான் நேத்து மதியம் கும்பலா நாலு பேர் பேசிக்கிட்டுப் போனாங்களா... சரி, சரி...''

— வந்தவாசி பா. ஜெயக்குமார்

வெவ்வேறு சிறு பத்திரிகைகளுக்கு எழுதிய இந்தக் கதைகள் ஒவ்வொன்றுமே எனக்கு வேள்வி. சினிமாப் பணிகளில் சிக்குண்டு, கிடைக்கும் தருணங்களில் மெல்ல மூச்சு விட்டுக் கொள்ளுகிறபோது, ஒரு வாசகனாக எனது கதைகளை நானே படித்தேன். வாசகன் எந்தெந்த இடங்களில் பரவசங்களை உணர்வானோ அதை உணர்ந்தேன். எழுதினேன்.

'குடிமுந்திரி' தொகுப்பில் இடம் பெற்றிருக்கும் 'பசு' கதையில், அதிர்ச்சியூட்டக் கூடிய 'பாலியல் வக்கிரத்தை' கருவாகக் கையாண்டிருக்கிறீர்கள். இது போன்ற கதைகளை நீங்கள் எழுத வேண்டுமா?

அந்தக் கதையின் முக்கிய பாத்திரங்கள் ஜாதி ரீதியாக வேறுபட்டாலும், அவர்களுக்குள் இருக்கிற மனிதத்துவம் மிகுந்த உறவுதான் கதையின் ஆன்மா. அவர்களின் மனப்போராட்டம்தான் கதையின் உயிர்நாடி. அதுதான் கதையே தவிர, வக்கிரம் அல்ல. அக் கதையைப் படித்ததும் பாத்திரங்கள் மீது பரிதாபம்தான் ஏற்படும்.

முதல் இரண்டு தொகுப்புகளில் இருந்த மண்வாசனை இதில் குறைந்து, நகரம் அதிகமாய் ஆக்கிரமித்திருக்கிறது. பணம், புகழ் வந்தபிறகு நகர வாழ்க்கையின் தாக்கம் தவிர்க்க முடியாததாகி விட்டதா?

உண்மைதான், எனது மண்ணிலிருந்து நான் பிரிந்து வந்து இருபத்து நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. இங்கே தாராளமயம், உலக மயமாதல் ஆகியவற்றின் பாதிப்பு எனக்கும் வந்துவிட்டதோ என்று பயப்படுகிறேன். ஆனால் எனது வேர்களை அறுத்துக்கொண்டு ஒருபோதும் என்னால் எழுத முடியாது. இதற்காகவே நேரம் கிடைக்கிறபோதெல்லாம் ஒரு சாமான்யனாக கிராமத்திற்கு ஓடி விடுகிறேன். 'பாண்டவர் பூமி' படத்தில் நான் இப்போது ஈடுபாட்டுடன் பணியாற்றுவதுகூட கிராமத்தைத் தரிசிக்க முடிகிறதே என்பதற்காகத்தான். அதே நேரம், தான் உணர்ந்த நகரத்தை எழுதாமல் விட்டு விடுவது படைப்பாளனுக்கு நெறியல்ல.

சந்திப்பு : **ஆர்.சி. ஜெயந்தன்**

படங்கள் : **ராஜன்**

மல்லிகைப் பூ

காலம் இது

மல்லிகைப் பூ புனிதத் தனமை தந்து சமநிலையும் அளிக்கும் நறுமணத்தை முகர்வது அவசியம். இதனால் பூமியில் மறைந்து உள்ள அதன் சாரம் இரகசிய உண்மை நாம் கிரகித்துக் கொள்ள முடிகிறது.

—சிவமஹா புராணம்

மல்லிகைப் பூவினால் அர்ச்சனை செய்தால் எல்லா பாவங்களிலிருந்தும் விடுபடுவான்.

மலர்களை மாலைகளாக தொடுத்து பகவானுக்கு அர்ப்பணம் செய்வது மலர்களால் அர்ச்சிப்பதைவிட எண்ணற்ற மடங்கு பலன் தரும். ஒருவன் தன் சொந்த தோட்டத்திலிருந்து மலர்களை வந்து பகவானுக்கு அர்ப்பணித்தால் அடையும் பலன்களைவிட காட்டிலிருந்து சேகரித்த பூக்களால் அர்ச்சிப்பது மும்மடங்கு பலனைக் காட்டும்.

அக்னிப் புராணம்

அத்துடன் கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி நல்லோருக்கு விநியோகம் செய்யவும்.



திருமண வைபவங்களுக்கு : சீர் முறுக்கு, சீர்முள்ளுத் தேன்குழல், தேன்குழல், சீர் அதிரசம், அப்பம், திரட்டுப்பால், பருப்புத்தேங்காய் வகைகள் முதலியவை செய்துத் தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு,
சென்னை – 20.
போன்: 4915662 / 4914213

"வெங்கடேசா... மெட்ராஸ்லேர்ந்து ஒனக்கு போன்..." தெற்கு வீட்டு கண்ணாம்மாக்கா குரல் கொடுத்தாள். பந்தல் வாசலில் குலைவாழை கட்டிக் கொண்டிருந்த வெங்கடேசன் ஓடினான். கூடவே மூர்த்தியும்.

பேசியது ஜெயபாலன். வெங்கடேசனைப் போல அசிஸ்டெண்ட் டைரக்டர்.

'உன்னோட பேரும் டைட்டில்ல வருது; எனக்கப்புறம் நாலாவதா...' என்ற அவனது வார்த்தைகள் பரவசப்படுத்தின. மூர்த்தி பின்னால் கைகட்டி, புருவத்தை நெரித்தபடி பேசுவதைக் காதுவழி விழுங்கிக்கொண்டிருந்தான்.

"நாளைக்குத் தங்கச்சி கல்யாணம். நாளை கழிச்சு படம் ரிலீசாகுது. இந்நேரத்துல மெட்ராசல இல்லாம இங்க மாட்டிக் கிட்டேன். ஹூம்..." அவன் பேசி முடிப்பதற்குள் மூர்த்தியின் கைங்கர்யத்தில் கல்யாண வீட்டில் ஆனந்தமும், ஆச்சரியமும் பற்றிக் கொண்டன. இதுவரைப் பார்க்காத புதிய கண்ணால் வெங்கடேசனைப் பார்த்தார்கள்.

'ஆனாலும் கெட்டிக்காரன், சினிமால பேரு வர வச்சுட்டானே.' மொத்த ஜனம் பாராட்டியது.

"நம்ம நடராஜாலதான் படம் ரிலீசாகுது. அம்பது டிக்கட் மொத ஷோவுக்கே வாங்கிடணும்..." கூட்டாளிகள் வட்டம் கூடிப் பேசினார்கள்.

கேசவன் பிள்ளையின் கை, மீசையை வருடிவிட்டுக் கொண்டது. 'டைரக்



'இதற்காக...
இந்த நிமிஷத்திற்காக
எத்தனை
கஷ்டத்தையும்
தாங்கலாமே'

சிறுகதை:- ஜான்பாபுராஜ்

ஓவியம் :- ஸ்யாம்

டராகணும்னு மெட்ராகக்குப் போன உங்க மகன் ஓட்டல்ல சப்ளையரா இருக்கானாமே..' என்பதைக் கேட்கையில் எத்தனை முறை இதே மீசை தொங்கிப் போயிருக்கிறது!



சினிமாதான் மூச்சு என்று வெங்கடேசன் கிளம்பியபோது, பண்டு பட்டாளத்துக்குப் போகிறவனை வழியனுப்புவது போல் வீடே துக்கம் அனுஷ்டித்தது.

சினிமா என்பது, ஒரே பாடலில் பணக்காரனாகும் வித்தையல்ல என்பது மெட்ராகக்கு வந்த பிறகுதான் அவனுக்குப் புரிந்தது. கலெக்டராகவோ, டாக்டராகவோ விரும்பினால் அதற்கான வரையறுக்கப்பட்ட பாதை உண்டு. சினிமாவில் அது கிடையாது. நிறைய படித்தால் கலெக்டராகலாம், டாக்டராகலாம்; கொஞ்சமாகப் படித்தால் கிளார்க்காகலாம், கம்பவுண்டராகலாம். நிறைய, கொஞ்சம் என்பதெல்லாம் சினிமாவில் செல்லுபடியாகாத விஷயம். தாண்டினால் கிணறு சொந்தம். தாண்டாவிட்டால் கிணற்றுக்குச் சொந்தம்.

வயிற்றுக்கும், வசிப்பதற்கும் பிரச்னை வந்தபோது ஆனந்தா மிலிட்டெரி ஓட்டல் அவனை சுவீகரித்துக் கொண்டது. ஓட்டல் மாடியில் உள்ள இடுக்கு சந்தில் எட்டாவது ஆளாக ஒட்டிக்கொண்டான். முதலாளிக்கு உழைக்கும் நாளே உன்னதமான நாள். யாருக்கும் அதனால் விடுமுறை கிடையாது. பாரம்பரியமிக்க இந்தச் சம்பிரதாயத்தை வெங்கடேசன் மீறியபோது, ஓட்டலுக்கும் அவனுக்கும் உள்ள பந்தம் முறிந்து போனது.

இருப்பவனுக்கு ஒருவேலை. இல்லாதவனுக்கு பல வேலை. பல இடங்களில் முட்டி மோதியதில் கால்வாசி, அரைவாசியோடு நின்று போன இரண்டு படங்களில் உதவி இயக்குநராக வேலை செய்ய முடிந்தது.

பட்டினிக்குக் கலங்காதவனை, ராத்திரி, பகல் உழைக்க கலங்காதவனை வீட்டிலிருந்து வரும் கடிதம் கலக்கிவிடும்.

'உன்னோட படிச்ச குமரேசனுக்கு வேலை கிடைச்சிருச்சு; பிரபாகர் வீடு கட்டிட்டான்..' போன்ற செய்திகள் அடங்கியதாக இருக்கும் கடிதம். 'எல்லோரும் நல்ல நிலமைக்கு வந்தாச்சு, ஆனால் நீ..?' அதில் தொக்கி நிற்கும் தொனி அவனை விட்டத்தை வெறித்தபடி படுக்க வைத்துவிடும்.

ஐந்து வருட நீண்ட ஓட்டத்திற்குப் பிறகு சில்வர் ஜுப்லி டைரக்டர் நந்தகுமாரனின் அசிஸ்டெண்ட் என்னும் கௌரவ முகவரியை எட்டிப் பிடித்தான். அசிஸ்டெண்டாகி முதல் படம்

பெயர் போனவன்



"எம்.எல்.ஏ ஆகிப் போன நீங்க அஞ்சு வருஷத்துக்குப் பிறகு இப்பத்தானே எங்கள பார்க்க வர்றீங்க?"

"என்ன பண்றது... அஞ்சு வருஷத்துக்கு ஒரு தடவை எம்.எல்.ஏ எலக்ஷன் வந்து தொலையுதே!"

— கு. அருணாசலம்

● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ●

முடியும் நிலையில் சுமதியின் கல்யாணச் செய்தி வந்து அவனைக் குழப்பியது. பட ரிலீசுக்கு முன் ஊருக்குப் போவதா.... வேண்டாமா... என்ற குழப்பம்.

'வெங்கடேசனா...? அவன் அவ்வளவு தான்'– எல்லோரும் பழித்தபோது, 'அண்ணன் பெரிய ஆளா வருவான், பார்த்திட்டே இருங்க.' என்று நம்பியவள் சுமதி மட்டும்தான். அந்த அதீத நம்பிக்கை, கடைசியில் அவனை ஊருக்கு இழுத்து வந்து விட்டது.

ஃபோன் வந்த நிமிடம் முதல் அவனது பெயர் கல்யாண வீட்டில் உச்சத்தில் பறந்தது. கேசவன் பிள்ளையின் கையும் மீசையை விட்டு இறங்கவில்லை.

கல்யாணத்திற்கு மறுநாள்.

வெங்கடேசன், அப்பா, அம்மா, சுமதி, மாப்பிள்ளை என குடும்பமே காரில் சினிமாவுக்குக் கிளம்ப, பக்கத்து வீடுகளில் தலைகள் எட்டிப் பார்த்தன. முப்பது வருடமாக தியேட்டர் பக்கம் போகாததும், புது மருமகனுடன் சினிமாவுக்குப் போவதும் சேர்ந்து ஒரு வித நாணத்துடன் அம்மா உட்கார்ந்திருந்தாள்.

தியேட்டர் வாசலில் நண்பர்கள் குழாம் டிக்கட்டுடன் காத்திருந்தது.

"எங்களுக்கு பால்கனி டிக்கட் எடுத்திட்டு உங்களுக்கு ஏண்டா குறைஞ்ச டிக்கெட் எடுத்தீங்க...?"

மூர்த்தி பூடகச் சிரிப்புடன் உப்பியிருந்த பேண்ட் பாக்கெட்டிலிருந்து கத்தையாக லாட்டரி டிக்கெட்டுகளை வெளியில் எடுத்தான்.

"உம் பேரு வர்றப்ப வீசுறதுக்கு. முன்னாடி இருந்தாதான் வீச முடியும்."

வெங்கடேசனுக்குச் சிலிர்த்தது. இதற்காக... இந்த நிமிஷத்திற்காக எத்தனை கஷ்டத்தையும் தாங்கலாமே!

பெருத்த விசில் சப்தத்திற்கிடையில் கதா நாயகனின் பெயர் திரையில் ஓடியது. நாயகி, இசையமைப்பாளர், இயக்குநர் என்று முக்கிய மானவர்களின் பெயருடன் டைட்டில் முடிந்து படம் தொடங்க... அவர்களிடம் எதிர்பார்ப்பு மறைந்து ஏமாற்றம் கவிந்தது. இருட்டில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். வெங்கடேசனுக்கு கை, கால் எல்லாம் வியர்த்து விட்டது.

"என்னடா உம்பேரு வரல...?"

"அது...இப்ப எல்லாம் இங்கிலீஷ் படத்துல வர்ற மாதிரி கடைசியில் தான் போடுவாங்க..."

"என்னவோ போ..." கேசவன் பிள்ளை சலிப்புடன் சீட்டில் சாய்ந்து கொண்டார்.

இடைவேளையின் போது, நண்பர்களிடமும் இங்கிலீஷ் படக் கதை விஷயத்தைச் சொன்னான். எல்லோரும் சினிமாவில் லயித்திருக்க, அவர்கள் மட்டும் எப்போது படம் முடியும் என்று காத்துக் கொண்டிருந்தார்கள்.

படம் முடிந்ததும் நடிகர்களின் பெயர்கள் கீழிருந்து மேலாக ஓடத் தொடங்கின. அதற்கும் தங்களுக்கும் சம்பந்தம் இல்லாதது போல கூட்டம் கலைய ஆரம்பிக்க... அவர்கள் எழுந்து நிற்க வேண்டியதாயிற்று.

பின்னணி பாடியவர்கள் பெயர்கள் வந்தபோது முக்கால்வாசி தியேட்டர் காலியாகிவிட்டது. 'உதவி இயக்குநர்கள்' என்று டைட்டில் வந்ததும் அவர்களிடம் மீண்டும் பரபரப்பு தொற்றிக் கொண்டது. மூர்த்தியும் நண்பர்களும் லாட்டரி டிக்கெட்டுடன் தயாரானார்கள்.

முதலாவது பெயர்...

வெங்கடேசன் முன் இருக்கையை இறுகப் பிடித்துக் கொண்டான்.

இரண்டாவது பெயர்... தியேட்டர் இப்போது சுத்தமாக காலியாகி விட்டது.

மூன்றாவது பெயர்... வெங்கடேசனின் பெயருக்காக அவர்கள் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருக்கையில் படம் நிறுத்தப்பட்டது.

"யாருப்பா அது... படம் முடிஞ்ச பிறகும் வீட்டுக்குப் போகாம வேடிக்கைப் பார்க்கிறது?" டிக்கட் கிழிப்பவன் வாசலில் நின்று சத்தம் போட்டான்.

மொத்த குடும்பமும் மௌனமாய் வெளியேறியது. ○

நிறைவேறிய இரு கனவுகள்!

இரு பெரும் தமிழ்த் தொண்டர்களுக்குத் தென் தமிழ்நாட்டில் இரு வேறு விதமான ஆலயங்கள் சமீபத்தில் எழுப்பப்பட்டுள்ளன.

ஒன்று – பாரதி ஆவணக் காப்பகம்.

மற்றொன்று – குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம்.

முதலாவது, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் வஸந்தி தேவியுடைய கனவு; இரண்டாவது, தமிழக அரசின் முயற்சியில் எழுந்துள்ள நினைவுச் சின்னம்!

'எட்டயபுரம், எங்கள் பல்கலைக்கழக ஆட்சி எல்லைக்குள் இருக்கிறது; அதனால் பாரதியின் நினைவைப் போற்றி, எங்கள் பல்கலைக்கழகம், நிலையாக ஏதாவது செய்ய வேண்டும்' என்று வஸந்தி தேவி விருப்பப்பட, தற்போதைய துணைவேந்தர் க.பா.அறவாணனும் அந்தக் கனவைப் பகிர்ந்து கொள்ள, எட்டயபுரத்தில் பாரதி ஆவணக் காப்பகமும், பல்கலைக் கழகத்தில், கவிதை – புதுக்கவிதை துறையும் நிறுவப்பட்டிருக்கின்றன.

ஆவணக் காப்பகத்தில், பாரதி நூல்கள் தவிர, கையெழுத்துப் பிரதிகள், அவரைப் பற்றிய நூல்கள், புகைப் படங்கள் அனைத்தும் மைக்ரோ ஃபிலிம் செய்து பாதுகாக்கப்படும். கவிதையியல் துறை, கவிதை பற்றிய ஆராய்ச்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கும். அரசு உதவி பெறாமல், நன்கொடைகளால் மட்டுமே இப் பணிகள் தொடர நிதியாதாரம் சேகரிக்கப்பட்டிருக்கிறது. நல்லி குப்புசாமி செட்டியார், எ.பி.வி.சி. சொக்கலிங்கம் (தூத்துக்குடி) உள்பட பலர் பெருந்தொகைகள் தந்து உதவியுள்ளனர்.

'பாரதிக்கு' என்றதும் பறந்து வருகிறது உதவி என மகிழ்கிறார் அறவாணன்.

ஆவணக் காப்பக துவக்க விழாவில் அர்த்தமுள்ள உரையாற்றியவர் வைரமுத்து:

"முப்பது கோடி ஜனங்களுக்கு ஒரு சமுதாயம் கேட்டான் பாரதி. தமிழகத்தின் ஆறு கோடி மக்கள் ஏன் சாதியால் பிரிக்கப்பட வேண்டும்? மொழி என்கிற நிரந்தர அடையாளம் இருக்கையில், சாதி என்கிற தற்காலிக அடையாளம் எதற்கு? சாதிகளைத் தூக்கி எறியாமல் பாரதிக்கு விழா எடுப்பதில் அர்த்தமில்லை!"

– இந்தத் தேர்தல் நேரத்தில் தினமும் நினைவு கூரத்தக்க வாசகம்தான்!

குன்றக்குடி அடிகளார் நினைவு மண்டபத் திறப்பு விழாவை அரசியலாக்காமல் ஆத்மார்த்தமாகப் பேசியவர் முதல்வர்தான்! (மற்றவர்கள் அடிகளாரைக் காட்டிலும் முதல்வரையே அதிகம் பாராட்டினார்கள்.)



• குன்றக்குடியின் உருவம் பெரிது...


"மறைந்தும் மறையாத குன்றக்குடி அடிகளாருக்கு என்னால் இயன்ற சிறு கைமாறு இந்த மண்டபம்தான். அடிகளாரின் பெரிய உருவம், அகன்ற ஞானம், கடலைப் போன்ற அவரது சிந்தனை – இத்தனைக்கும் இந்த மணி மண்டபம் ஈடாகுமா? என்றால் ஆகாது! ஆனால் இந்த மணிமண்டபத்தை உருவாக்க வேண்டும் என்ற எனது எண்ணம் பெரிது... அதனால்தான் அது ஈடேறியிருக்கிறது."

– நெகிழ்ந்தார் கலைஞர்.

தமது கரங்களாலேயே அடிகளார் சிலைக்கு மாலையிட மிகவும் முயன்று, கூட்டத்தில் அது முடியாமல் போக, மலர் தூவி முதல்வர் வழிபட்டபோது – நெகிழ்ந்தது கூட்டம்–

கூட்டம் என்றால் சாமானியக் கூட்டம் அல்ல, கொளுத்தும் வெயிலில் சாலையை அரை கிலோமீட்டர் அளவுக்கு ஆக்கிரமித்த, சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழன்பர்கள்!

— நிருபர்



இந்தக் கவிதைக்குப் பொருத்தமான தலைப்பை வைக்கும் வாய்ப்பு வாசகர்களுக்குத் தரப்படுகிறது.

திடீர்ப் பரிசுப் போட்டி - 1

என்று மறக்காமல் குறிப்பிட்டு அஞ்சல் அட்டையில் மட்டுமே எழுதி அனுப்பவும்.

ஓர் அஞ்சல் அட்டையில் ஒரு தலைப்புக்கு மேல்

மாந்தோப்பு மாங்காய
மடிநெறயா பறிச்சாந்து;
வெல்லப்பாவு கொப்பரயில
விருவிருன்னு உள்ளபோட்டு;
கொதிச்சி, நொதிச்சாப்பொற
குதிச்சிக்கிட்டே எடுத்துவச்சி;
சுடச்சுடத்தான் தின்ன அந்த
சு(த)ந்தர நாள் இனி வருமா...

நத்தக் கொல்ல மோட்டவுட்டு
நடந்துஓடு திரும்பயிலே;
ஊராக்களி மாட்டவுட்டு
ஒத்தயிலே பிந்திப்போன;
கத்திக்கொம்பு எருமாட்டுக்
கழுத்தக்கட்டிப் புடிச்சிக்கிட்டு;
முதுவுமேல படுத்துப்போன
மொதசவாரி இனி வருமா...

தொலக்கல்லு ஒசர ஏறி
தொபுக்கடீ...ன்னு தண்ணீல குதிச்சி;
உப்புபாரி அடிச்சடிச்சி
உச்சி, உறும வேளவர
உப்பெடுத்து, ஓடுவந்து
ஒருத்தருக்கும் தெரியாம;
கூழக்கரச்சி வச்சிக்
குடிச்ச சொகம் இனி வருமா...

நாவமரம் ஏறி, ஏறி
நாளு பூரா பழம் உலுக்கி;
கிடு கிடுன்னு எறங்கி வந்து
கெடச்சதத்தான் எடுத்தெடுத்து
மண்ணு ஊதி, மண்ணு ஊதித்
தின்னு, நாக்கு ருசி(ெ)க(ா)ண்ட
அந்த நாளும் இனி வருமா...
அடடாடா... இனி வருமா...!

- அரி. இல. தமிழடியான்

எழுத வேண்டாம். ஒன்றுக்கு மேற்பட்ட தலைப்புகள் எழுதப்பட்டிருந்தால், போட்டிக்குத் தகுதியில்லாததாகக் கருதப்படும்.

சிறந்த தலைப்புக்கு **ரூ.100/-** பரிசு.

முடிவு தேதி 16.4.2001

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

ஏவி.எம். சரவணன் எழுதிய 'மனதில் நிற்கும் மனிதர்கள்' புத்தகத்திலிருந்து சில பகுதிகள்...

சிங்கம் இலேசாய் ஒரு தட்டு தட்டியது...

'நாடோடி மன்னன்' படத்தை எடுத்துக் கொண்டிருந்தபோது ஒரு கட்டத்தில் இருபத்தையாயிரம் ரூபாய் தேவைப்பட்டது. எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் மானேஜர் ஆர்.எம். வீரப்பன் 'அந்தத் தொகையைக் கடனாகக் கொடுத்து உதவ முடியுமா?' என்று என் தந்தையாரிடம் கேட்டார்.

அந்தக் காலத்தில் இருபத்து ஐயாயிரம் என்பது பெரிய தொகை. அந்தத் தொகையை ஆர்.எம்.வீ. கேட்டபோது, என் தந்தையார் 'எம்.ஜி.ஆரிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டு வந்தால் பணம் தருகிறேன்' என்று கூறினார்.

அவரைக் கடனாளியாக்க நான் விரும்பவில்லை. எம்.ஜி.ஆர். பிக்சர்ஸின் மானேஜர் நான். அந்த முறையில் வேண்டுமானால் கையெழுத்துப் போட்டுத் தருகிறேன். எம்.ஜி.ஆர். தான் பத்திரத்தில் கையெழுத்துப் போட வேண்டும் என்றால் எனக்கு நீங்கள் பணம் தரவே வேண்டாம்'' என்று கூறிவிட்டார் ஆர்.எம்.வீ. ஆர்.எம்.வீ.யின் வாதத்தை ஏற்று அவர் கேட்ட தொகையைக் கொடுத்து உதவினார் என் தந்தை.

இன்னொரு சமயம் அவருக்கு எம்.ஜி.ஆர். கால்ஷீட் கொடுத்திருக்கிறார். ஆனால் படம் எடுக்க அவருக்கு ஃபைனான்ஸ் செய்ய சரியான படி ஆள் கிடைக்கவில்லை. அதை அறிந்த என் தந்தையார், ஆர்.எம்.வீயைக் கூப்பிட்டு அனுப்பி, 'உங்களுக்குத் தேவையான பணத்தை நானே கொடுக்கிறேன். நீங்கள் பணத்தைப் பற்றிக் கவலைப் படாமல் படம் எடுங்கள்' என்று கூறி ஃபைனான்ஸ் செய்தார். அவரும் வெற்றிகரமாய்ப் படத்தை எடுத்து முடித்து, வட்டியும் முதலுமாய்ப் பணத்தைத் திருப்பிக் கொடுத்தார். அந்தப் படம்தான் 'தெய்வத்தாய்'.







'நெஞ்சில் ஓர் ஆலயம்' போன்ற படங்களில் நாகேஷின் பிரமாதமான நடிப்பைப் பார்த்துவிட்டு 'நானும் ஒரு பெண்' படத்தில் நடிக்க அவரை அழைத்தோம்.

அவரிடம் ஐயாயிரம் ரூபாய் தருவதாகச் சொன்னேன். இருவரும் பேசி, கடைசியில் அவர் ஏழாயிரம் ரூபாய் கேட்டார். நான் ஆறாயிரம் ரூபாய்க்கு ஒப்புக் கொள்ள வைத்தேன். அவர் விடைபெறும் போது, "நான் எனது ஊதியம் சம்பந்தமாக இன்று உங்களிடம் அரை மணி நேரம் பேச

வேண்டியிருந்தது. நான் கேட்ட ரேட்டை மறு பேச்சு பேசாமல் நீங்கள் கொடுக்க முன் வருகிற நாள் வெகு தூரத்தில் இல்லை. இதை நான் திமிராகச் சொல்லவில்லை. என் தன்னம்பிக்கையால் சொல்கிறேன்'' என்று கூறினார். 'அப்படி நீங்கள் வளர்ந்தால் எனக்கு ரொம்ப சந்தோஷம்' என்று பதில் சொன்னேன்.' நாகேஷ்



• தந்தையுடன் ஏவி.எம். சரவணன்...

அன்று கூறியது நூறு சதவிகிதம் சரி என்று சீக்கிரமே நிரூபித்து விட்டார்.

ஒருமுறை தேவர் படத்தின் ஷூட்டிங் நடந்து கொண்டிருந்தது. வாயைத் தைத்து மயக்க ஊசிபோட்டு அரை மயக்கத்தில் ஆழ்த்தப்பட்ட ஒரு சிங்கமும் அதில் நடித்தது. ஷூட்டிங் முடிந்ததும், தேவர் அந்த சிங்கத்தின் பக்கத்தில் நின்று போட்டோ எடுத்துக் கொள்ள விரும்பினார். தாம் சிங்கத்தின் ஒரு புறம் நின்று கொண்டு இன்னொரு புறம் நடிகர் அசோகனை அழைத்து நிற்கச் சொன்னார்.

ஷூட்டிங் லைட்ஸ், வெப்பம், வாயில் போடப்பட்ட தையலால் ஏற்பட்ட வலி, இவற்றால் பாதிக்கப்பட்ட சிங்கம், இலேசாய் ஒரு காலால் தேவரை ஒரு தட்டு தட்டி விட்டது. தேவர் அலறியபடி எட்டப் போய் விழுந்தார்.

மறுவிநாடியே சுதாரித்துக் கொண்டு எழுந்தவர், முதலில் 'அசோகன் எங்கே?' என்றுதான் கேட்டார். சுற்றுமுற்றும் பார்த்தால் அசோகனைக் காணோம். 'இதோ இங்கே' என்று குரல் வந்த திக்கில் பார்த்தால், ஷூட்டிங்கின்போது பயன்படுத்துகிற ஓர் ஏணியின் உச்சியில் இருந்தார்!

'பயத்தில் ஓடி வந்திருக்கிறேன். எப்படி இங்கே வந்தேன்னு எனக்குத் தெரியலை' என்றார் அசோகன்.

எங்கள் தந்தையார் திரு. ஏவி.எம். ஒரு பர்பெக்ஷனிஸ்ட்.

டைம் மேனேஜ்மெண்ட் என்று சொல்லுவார்களே, அதை அவர் பிராக்டிகலாகக் கடைப்பிடித்தார். எந்த வேலையானாலும், இத்தனை நாளில், இத்தனை மணிநேரத்தில் முடிக்க வேண்டும் என்று கெடு வைத்துத்தான் சொல்லுவார். வேலை முடிக்காமல் ஒருவரும் தப்பிக்கவே முடியாது.

'ருசி பார்த்துச் சாப்பிடத் தெரிந்த சமையல்காரன்தான் நல்ல சமையல்காரனாக இருக்க முடியும். அதுபோலவே நாம் எடுக்கிற படங்கள் முதலில் நமக்குத் திருப்தியாக இருக்க வேண்டும்' என்று எப்போதும் கூறுவார். 'நாம் எடுக்கிற சினிமா, ஜனங்களுக்குப் பிடிக்கலாம், இல்லை பிடிக்காமல் போகலாம். ஆனால் நமக்கே திருப்தி இல்லாமல் நம் படம், நம் காம்பவுண்டை விட்டு வெளியில் போகக் கூடாது' என்பது அவரது கொள்கை. அதற்காகக் காட்சிகளை ரீ-டேக் பண்ணவோ, படத்தின் பல காட்சிகளை மறுபடி ஷூட் பண்ணவோ, அவர் தயங்கவே மாட்டார். நடிகையின் உடை வியர்வையால் நனைந்திருந்தால் ரீடேக் எடுக்கச் சொல்வார். 'அதையெல்லாம் ஜனங்க கவனிக்க மாட்டார்கள்' என்றால் 'மக்கள் கவனிக்கிறார்களா இல்லையா என்பது இல்லை. எனக்குப் பிடிக்கவில்லை. இன்னொரு டேக் எடுத்து விடுங்கள்' என்பார். அதற்கான எக்ஸ்டிரா செலவு பற்றிக் கவலைப்பட மாட்டார்.

வெளியீடு : மணிமேகலைப் பிரசுரம்,
விலை ரூ. 40.00.
தொகுப்பாசிரியர் : எஸ். சந்திரமௌலி

அழைக்கிறது அமெரிக்கா!

கல்கி - டயானா வொர்ல்ட் டிராவல் இணைந்து வழங்கும்



குவிஸ் போட்டி—22

இந்த வார 'க்விஸ்' வித்தியாசமான பாணியில் உள்ளது. கீழே உள்ள வாக்கியங்கள் சரியா அல்லது தவறா என்பதை மட்டும் நீங்கள் அவற்றிற்கெதிரே எழுதினால் போதும். சிந்தித்து கூப்பனில் பூர்த்தி செய்து முந்தைய வாரங்களில் செய்ததைப் போலவே மற்ற கூப்பன்களோடு பூட்டி வையுங்கள். இருபத்தி ஆறு வார இறுதியில் எல்லா கூப்பன்களையும் எங்களுக்கு அனுப்புங்கள். இதில் மிக அதிகமான கேள்விகளுக்குச் சரியான பதில் எழுதும் ஒரு நபருக்கு

அமெரிக்கப் பயணம் பரிசு!

ஐரோப்பா பயணம் இரண்டாவது பரிசு!

மலேஷியா—சிங்கப்பூர் பயணம் மூன்றாவது பரிசு!

இந்த மூன்று நிலைகளிலும் ஒருவருக்கு மேல் சரியான பதிலை எழுதியிருந்தால் இருக்கவே இருக்கிறது குலுக்கல் முறை! பயணப் பரிசு பெறாதவர்களுக்கு அமரர் கல்கியின் நூல்கள் உண்டு.

ஆசிரியர் தீர்ப்புதான் இறுதி!

குவிஸ் கூப்பன்—22

1) பெரியபுராணம் என்பதும் திருவிளையாடற் புராணம் என்பதும் ஒரே நூலைத்தான் குறிக்கின்றன. ....

2) புன்னகை, புன்னகை மன்னன் ஆகிய இரு திரைப்படங்களையும் இயக்கியவர் ஒருவரே..........................


3) ஸ்டீபன் ஃப்ளெமிங் (நியூசிலாந்து) மற்றும் ஸ்டீவ் வாக் (ஆஸ்திரேலியா) ஆகிய இருவருமே வலக்கை பேட்ஸ்மேன்கள்..........................

4) யுனைடெட் கிங்டம் என்பதும் இங்கிலாந்து என்பதும் ஒன்றே..........................

5) பிரபல ஹாலிவுட் நடிகைகளான எலிசபெத் டெய்லர் மற்றும் சோபியா லாரன் ஆகிய இருவரும் அமெரிக்கர்கள்..........................

6. 'உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி' என்ற வரியும், 'சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா' என்ற வரியும் பாரதியின் ஒரே பாடலில் இடம் பெறுபவை தான்..........................





கௌரவம் காத்த கம்ப்யூட்டர்!

நாற்பத்தெட்டு மணி நேரத்துக்கு முன்பே கவுன்ட் டவுன் தொடங்கிவிட்டிருந்தது. மார்ச் 28 அன்று பத்திரிகையாளர்கள் ஸ்ரீஹரிகோட்டாவில் இஸ்ரோ நிர்வாக அலுவலக மொட்டை மாடியில் நின்றபடி கிழக்கு திசையில் வைத்த கண் வாங்காமல் பார்த்திருக்க, பைவ், போர், த்ரீ, டூ... கடைசி நொடிகளின் த்ரில் அனைவரையும் ஒரு புள்ளியில் இணைத்திருக்க,

"ஒன்..." என்றதும் 'பூம்!' என்று பெரும் சப்தம்!

கவுன்ட் டவுன் ஜீரோவைத் தொடவில்லை. ஒரு புள்ளியில் இணைந்திருந்த உற்சாகமும் பெருமையும் உதிர்ந்து ஏமாற்றத் துகள்களாகச் சிதறிப் பரவின.

அடுத்த அரை மணி நேரத்துக்குள் ஏவு தளத்திலிருந்த சக விஞ்ஞானிகளோடு அலுவலகம் திரும்பிய இஸ்ரோ தலைவர் கஸ்தூரிரங்கனின் முகத்தில் ஏமாற்றத்திற்கு இடையேயும் உறுதி - இந்தத் தோல்வி தற்காலிகம்தான்; ஜெயித்துக் காட்டுவோம் என்கிற வைராக்கியம்.

இந்தியாவின் முதல் 'ஜியோ சிங்க்ரோனஸ்' செயற்கைக்கோள் ஜி.எஸ்.ஏ.டி - 1 ஐ விண்ணில் செலுத்த உருவாக்கப்பட்ட ஜி.எஸ்.எல்.வி ராக்கெட் ஒரு சுதேசி வீரன். கடந்த பதினோரு ஆண்டுகளாக அரிசி மணி சேர்ப்பதுபோல் உள்நாட்டு உதிரிபாகங்களை ஒன்று சேர்த்து உள்நாட்டுத் தொழில் நுட்பத்தில் உருவாக்கப்பட்டது.

ராக்கெட்டின் நான்கு ஸ்ட்ராப் ஆன் மோட்டர் பகுதிகளும் ஒரே நேரத்தில் எரியூட்டப்பட, அந்த உந்து சக்தியில் அது ஜிவ் வென்று விண் நோக்கிப் புறப்பட வேண்டும். ஆனால் ஒரு ஸ்ட்ராப் ஆன் மோட்டர் எரியூட்டப்படவில்லை - தொழில்நுட்பக் கோளாறு. உடனடியாக ராக்கெட்டின் மொத்த செயல்பாட்டையும் நிறுத்திவிட்டது கம்ப்யூட்டர் சூரன்! இதனால் காப்பாற்றப்பட்டது 1400 கோடி ரூபாய் மதிப்புள்ள ராக்கெட் + இந்திய கௌரவம்.

ராக்கெட்டின் மூக்கில் பொருத்தப்பட்டிருக்கும் இந்தக் கம்ப்யூட்டர் வாட்ச்மேன்கூட முழுக்க முழுக்க இந்திய சாஃப்ட்வேர் கொண்டு இயக்கப்படுவது என்பதால் தோல்வியிலும் ஒரு வெற்றி என்று ஆறுதல்.

பழுதுபார்க்கப்பட்டு ஜி.எஸ். ஏ.டி - 1 ஏவப்பட இன்னும் ஓராண்டு பிடிக்கலாம். அந்த செயற்கைக்கோள் செயல்பட ஆரம்பித்தால், பால்வெளி குடும்பத்தை ஆராயலாம், கடலோரத்தைக் கண்காணிக்கலாம், இன்டர்நெட் சேவை, டிஜிடல் ஆடியோ வீடியோ ஒலி/ஒளிபரப்பு போன்றவற்றுக்குப் பேருதவியாய் இருக்கும். அடுத்தமுறை வெற்றி நிச்சயம் என்கிறது இஸ்ரோ.

- சக்கரத்தாழ்வார்

● இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி

? பம்பர் பரிசு கிடைத்திருப்பது தி.மு.க. கூட்டணியிலுள்ள உதிரிக்கட்சிகளுக்கா அல்லது அ.தி.மு.க. கூட்டணியிலுள்ள உதிரிக் கட்சிகளுக்கா...?

! த.மா.கா.வும், பா.ம.க.வும் இங்கிருந்து அந்தப் பக்கம் தாவியதால் உதிரிகளுக்கு அங்கே 'டைட்' பொஸிஷன். அதே காரணத்தால், தி.மு.க. கூட்டணியில் சற்று அழுந்தக் கேட்டால் இரா. வளையாபதிக்குக் கூட சீட் உண்டு!

நீங்கள் கேட்டவை

— தராசு

சேஷனுக்கே அட்வை



• நூற்றுக்கு நூறு!



• இக்காக் யோசனை!

● ஆர். அப்துல் சலாம்,
திருச்சி - 20

? வாஜ்பாய் ராஜினாமா செய்ய வேண்டும் என்கிறாரே சோனியா காந்தி?

! தவறுகளே நடக்காமல் யாராலும் ஆட்சி நடத்த முடியாது. இங்கே கவனிக்கப்பட வேண்டிய விஷயங்கள் 1. வாஜ்பாயோ அல்லது அவரது அமைச்சரவையில் யாரேனுமோ லஞ்சம் பெற்றார்களா? - இல்லை. 2. லஞ்சம் பெற்றதாகக் குற்றம் சுமத்தப் பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா? - ஆம், உடனடியாக 3. சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளையொட்டி நீதி விசாரணை நடக்கிறதா? - ஒன்றுக்கு இரண்டாக நடக்கிறது. அப்புறமென்ன ராஜினாமா கூக்குரல்? சோனியா முதலில் Qவை வரவழைத்து வழக்கைச் சந்திக்கச் செய்யட்டும்.

● எல். மீனாட்சி சுந்தரம்,
திருவண்ணாமலை. ●

? எஸ்.எஸ்.சந்திரன், ராதா ரவி போன்றவர்கள் அ.தி.மு.க. மேடைகளில் எதிர்க்கட்சியினரைப் பற்றிக் கொச்சையாகப் பேசி வருவது 'ஜெ'க்கு பலமா? பலவீனமா?

! தேர்தல் கமிஷனின் பலவீனம்; தேர்தலில் வேறு பல விஷயங்களை வலியுறுத்துவதுபோல் அரசியல் நாகரிகத்தையும் கட்டாயமாக்க வேண்டும்.



• தேர்தல் தோறும்...



•... மோதல்!

● வி.கவிதா ராஜேஸ்வரி,
எசனை (பெரம்பலூர்)

? சிதம்பரத்தின் முடிவை நீங்கள் ஆதரிக்கிறீர்களா...?

! நூற்றுக்கு நூறு சதவிகிதம்

● வி.சிவா, அரசரடி

? ஜெ - தாமரைக்கனி சண்டையும் சமாதானமும் தேர்தலுக்குத் தேர்தல் தொடர்கிறதே...?

! ஸ்ரீவில்லிபுத்தூரைப் பொருத்தவரை, வெளியூர்க்காரர்களுக்குப் பால்கோவா எப்படியோ, அப்படி உள்ளூர்க்காரர்களுக்குத் தாமரைக்கனி. அவருடைய தொகுதியைக் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தூக்கிக் கொடுத்து விட்டு, 'உமக்கு உடல்நிலை அவ்வளவாக சரியில்லை; ரிடையர் ஆகிவிடும் அய்யா!' என்று உபதேசம் செய்வது லொள்ளுதானே! போதாததற்கு அப்பா - மகனிடையே சிண்டு முடிதல் வேறு!

● எஸ். நாகராஜன், மேலப்பாதி

? இளம் சுழல்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங்கின் கிரிக்கெட் எதிர்காலம் எப்படி இருக்கும்?

! வெற்றியைத் தாக்குப்பிடிக்கத் தெரியாமல் பல ஹர்பஜன்கள் காணாமல் போய்விட்டார்கள். அந்த நிலைமை இவருக்கும் வந்துவிடாமலிருக்க ஹரியை பஜனை செய்வோமாக!



• மேடை ...



• ... அநாகரிகம்!

கிடைக்கல்லையே..?

● பி. லக்ஷ்மி நரசிம்மன், கோவை -1

? கல்கி தி.மு.க.வைத் தீவிரமாக ஆதரிப்பதைப் பார்த்தால், தி.மு.க.வின் பிரசார பீரங்கியாக மாறிவிட்டதோ என்று தோன்றுகிறது?

! இது பீரங்கிதான்; ஆனால் எந்தக் கட்சிக்கும் பிரசார பீரங்கி அல்ல. அதர்ம அரசியலுக்குத் தீவிர எதிர்ப்பு பீரங்கி. நீங்கள் பீரங்கிக்கு எந்தப் பக்கம் இருக்கிறீர்கள் என்பதைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள். அப்போதுதான் குண்டு எதைத் தாக்குகிறது என்று சரியாகக் கணிக்க முடியும்.

● எம்.சிவகுருநாதன், சென்னை - 42

? 'ஆயுதபேரம் தொடர்பாக டெஹல்கா டாட் காம் நிறுவனம் வெளியிட்ட ஒளி நாடா உண்மையானது. ஆனால் அதில் கூறப்பட்டுள்ள புகார்கள் உறுதி செய்யப்படாதவை...' என முன்னாள் சட்ட அமைச்சர் ராம் ஜெத்மலானி சொல்வது எப்படியிருக்கு..?

! மழையில் தொப்பலாக நனைந்துவிட்டு வரும் ஒருவர், 'சட்டை ஈரமாகியிருக்கிறதா என்று பிழிந்து பார்த்தால்தான் தெரியும்' எனச் சொல்வது போலிருக்கிறது.

● ப. இராம் முருகன், சென்னை - 68 ❐

? சேஷனுக்கே அட்டை வழங்கப்பட வில்லையாமே..?

! வீடியோகிராஃபி என்ற பெயரில் மும்முறை வாக்காளரை வதைத்த பிறகு, இப்போது வாக்காளர் அடையாள அட்டை கட்டாயமில்லை என்கிறது தேர்தல் கமிஷன். இந்த துக்கக் காரியத்தை ஆரம்பித்து வைத்தவருக்கே அடையாள அட்டை கிடைக்காததில் ஆச்சர்யமில்லை! ரேஷன் கார்டில் போலிகள் இருக்குமானால் அடையாள அட்டையில் போலிகள் உருவாகாதா? போகாத ஊருக்குச் சுற்றி வளைத்து வழிகாட்டுகிற கதைதான்!

● செ. ஆசைத் தம்பி, தாரமங்கலம்

? மூப்பனார் தன்னிச்சையாக இந்தக் கூட்டணி முடிவை எடுத்திருப்பார் என்று நினைக்கிறீர்களா..?

! தொண்டர்களை நல்வழிப்படுத்தி அழைத்துச் செல்லும் ஆற்றல் உள்ளவன்தான் தலைவன் - இதை மறந்துவிட்டு, 'இது தொண்டர்களுக்காக எடுத்த முடிவு; தொண்டர்களுக்காக எடுத்த முடிவு' என்று மூச்சுக்கு முந்நூறு தடவை அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார் மூப்பனார். 'பாவம்! அவர் தன்னிச்சையாக எடுத்த முடிவா?' என்று அவ்வளவு அலாவட்டாகக் கேட்கிறீரே?


• கியூவைக் கூப்பிட...



● ஜி.ஜி. கிருஷ்ணன், விசலூர் - 1

? ஐந்நூறு விக்கெட்கள் வீழ்த்தி உலக சாதனை புரிந்திருக்கும் வெஸ்ட் இன்டீஸின் கோர்ட்னி வால்ஷ் குறித்து..?

• ஹரி பஜனை!



! நாலைந்து வருடங்களாகவே மார்க்கெட் இழந்த நடிகையாக உப்புசப்பின்றி ஆடிக் கொண்டிருந்த வெஸ்ட் இன்டீஸ் மமுக்கு ஒரு ஃபேஸ்லிஃப்ட்! ஆனால், ஒரு விஷயம் மட்டும் புரியவில்லை. ஒரே இன்னிங்ஸில் ஆறு விக்கெட் எடுக்கும் அளவுக்கு 'தம்' இருக்கும்போது 'ஓய்வு பெறப் போகிறேன், ஓய்வு பெறப் போகிறேன்' என்று ஏன் புலம்பிக் கொண்டேயிருக்கிறார் மனிதர்?

❐ ரூ.50 பரிசு பெறுபவர் :
ப. இராம் முருகன்
மே/பா டாக்டர் அமுதமொழி,
28, பாரதியார் தெரு, மணலி,
சென்னை - 68

* ரூ. 25 பரிசு பெறுபவர் :
எல். மீனாட்சி சுந்தரம்,
56A, அய்யங்குள வீதி,
திருவண்ணாமலை
- 606 601

கழுத்து முதுகு மூட்டு


வலியா, ஓடச்!

சென்ற இதழ் தொடர்ச்சி...

என்ன வாசகர்களே,

சென்ற வாரம் கற்றுக் கொடுத்த உடற்பயிற்சிகளைச் செய்து பார்த்தீர்களா? செய்வதற்கு எளிமையாக இருக்கின்றன, அல்லவா? இவ்வளவு எளிதான உடற்பயிற்சிகள் அபாரமான பலன்களைத் தருவதுதான் ஸ்ட்ரெச்சிங் உடற்பயிற்சிகளின் விசேஷம்!

அடுத்த ஐந்து உடற்பயிற்சிகளை இப்போது பார்ப்போம்...



உள்ளங்கைகளைத் தரையில் நன்றாக ஊன்றிக் கொண்டு 10 எண்ணுங்கள் போதும், அழுத்தம் கொடுக்க அவசியமில்லை. ஆனால் முழங்கைகள் மடங்கக்கூடாது என்பது முக்கியம்.



படத்தில் உள்ளது போல் வலது கையை மடக்கிக் கொள்ளுங்கள். வலது கை விரல்கள் பிடரியைத் தொட வேண்டும். தொய்வாகத் தொட்டால் போதுமானது. அழுத்தம் வேண்டாம். இப்போது 10 எண்ணிக்கொண்டே இடது கையினால் வலது கையை உள்பக்கமாக

இழுங்கள். நீங்கள் இழுக்க, இழுக்க குறியிட்டிருக்கும் இடத்தில் அழுத்தம் அதிகரித்தால், நீங்கள் உடற்பயிற்சியைச் சரியாக செய்வதாகப் பொருள்.



படத்தில் உள்ளது போல், வலது காலைக் கைகளால் ஏந்தி, 10 எண்ணிக் கொண்டே, காலை உட்புறமாக, உடம்பை நோக்கி கொண்டு செல்ல வேண்டும். பிறகு, இதே போல், இடது காலைத் தூக்கிக் கொண்டு செய்ய வேண்டும்.

எடுத்த உடனேயே, காலை இவ்வளவு தூரம் தூக்குவது என்பது இயலாத காரியம். எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூக்குங்கள். ஸ்ட்ரெச்சிங் பயிற்சிகளைச் செய்ய செய்ய, தசைகளில் உள்ள இறுக்கம் குறைந்து, கால்களை இன்னும் எளிதாகவும் உயரமாகவும் தூக்க இயல்வதை நீங்களே உணர்வீர்கள்.

தொடையில் உள்ள தசைகளுக்கு 'ஹாம்ஸ்ட்ரிங்' என்று பெயர். இந்தத் தசைகளில் இறுக்கம் ஏற்படும் பொழுதுதான் முதுகுவலி வருகிறது. கேட்பதற்கு இது வேடிக்கையாக இருந்தாலும், இதுதான் உண்மை. இந்த ஹாம்ஸ்ட்ரிங் தசைகளில் உள்ள இறுக்கத்தைக் குறைப்பதற்கான பிரத்யேக உடற்பயிற்சி இது.





முழங்கை மடங்காமல் நாற்காலியைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள். படத்தில் உள்ளது போல் கால்களை நன்றாக நீட்டி, நிமிர்ந்து பார்த்தபடியே 10 எண்ணுங்கள். கால்களை ஊன்றும் பொழுது, கால்விரல்கள் மட்டுமே தரையில் பட வேண்டும். குதிகால்கள் தரையில் படாமல் தூக்கியபடி இருக்க வேண்டும். அப்பொழுதுதான் 'ஸ்ட்ரெச்' முழுமையாக இருக்கும். பிறகு, இடத்தை விட்டு நகராமல், படத்தில் உள்ளதுபோல், கால்களை நேராக்கிக்

கொண்டு தலையைக் கவிழ்த்து 10 எண்ணுங்கள். இந்த நிலையிலும் முழங்கால்கள் மடங்கக் கூடாது என்பது முக்கியம்.



↑ இசைக் கச்சேரியில் மங்களம் பாடுவதுபோல கடைசியாகச் செய்ய வேண்டிய உடற்பயிற்சி இது. இதற்கு 'கூல் டவுன்' என்று பெயர். அதாவது இதுவரை செய்த உடற்பயிற்சிகள் இரத்த ஓட்டத்தின் வேகத்தை அதிகரித்து இருக்கும். இந்த உடற்பயிற்சியைச் செய்வதன்மூலம் இரத்த ஓட்டத்தை சராசரி வேகத்துக்குக் கொண்டு வருகிறோம்.

முகவாயை மேஜையில் அழுத்தி, இரண்டு கைகளையும் நன்றாக நீட்டி, கைவிரல்களில் அழுத்தம் கொடுங்கள். 10 எண்ணிக் கொண்டே அழுத்தத்தை அதிகரியுங்கள். முழங்கைகள் மடங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நாற்காலியின் உயரம் காரணமாக, உட்கார்ந்தவாறே இதைச் செய்ய இயலவில்லை என்றால் நாற்காலியைவிட்டு சற்று எழுந்தவாறே செய்யலாம், தவறில்லை. 30 எண்ணும் வரை இதே நிலையில் இருக்க வேண்டும்.

இந்த உடற்பயிற்சிகளை, ஒரு வாரம் அல்லது 10 நாட்கள் செய்துவிட்டு, தயவு செய்து பலனை எதிர்பார்க்காதீர்கள். தொடர்ந்து 45 நாட்கள் செய்ய வேண்டும். 46ஆவது நாளே பலன் தெரிந்துவிடும், இது உறுதி. பலன் தெரிய ஆரம்பித்தால் உற்சாக மாகிவிடுவீர்கள். பிறகு தலையே போனாலும் உடற்பயிற்சியை நிறுத்த மாட்டீர்கள். இது என்னுடைய 20 வருட அனுபவத்தில் நான் கண்ட உண்மை.

ஒரு முக்கியமான விஷயம். நீங்கள் ஏற் கெனவே கழுத்து, முதுகு, மூட்டு வலியினால் அவதிப்படுபவராக இருந்தால், உங்களுடைய மருத்துவரிடம் ஆலோசித்துவிட்டு, பிறகு, உடற்பயிற்சிகளை ஆரம்பிப்பது நல்லது.

அடுத்து sitting posture. அதாவது, உட்காரும் பாங்கு.

நீங்கள் கவனித்துப் பார்த்தீர்கள் என்றால் தொடர்ந்து 7- 8 மணி நேரம் ஒரே நிலையில் உட்கார்ந்து வேலை செய்பவர்களுக்குத்தான் கழுத்துவலி, முதுகுவலி அதிகமாக வருகிறது.

உதாரணம், எழுத்தாளர்கள், ஓவியர்கள், கம்ப்யூட்டர் வேலை செய்பவர்கள். வலிக் குக் காரணம், இவர்கள் நீண்ட நேரம் ஒரே


நிலையில் உட்கார்ந்து கொண்டு வேலை செய்வது அல்ல. தவறான நிலையில் நீண்ட நேரம் உட்கார்ந்து கொண்டு வேலை செய்வது தான் காரணம்.

Sitting Posture-ஐப் பொருத்தவரை இரண்டு விஷயங்களை மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் :

1. முதுகு எப்பொழுதும் நாற்காலியில் நன்கு சாய்ந்திருக்கும்படி அமர்ந்து கொள்ள வேண்டும். இருக்கையின் முன்பகுதியில் அமர்ந்தே ஆக வேண்டும் என்றால் கூன் போடாமல், முதுகுத் தண்டு நேராக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.


2. கழுத்தை, குறிப்பாக முகவாயை கீழே தொங்கப் போடவே கூடாது. கழுத்து வலியின் அஸ்திவாரம் இங்குதான் போடப்படுகின்றது. முகத்தை நேராக நிமிர்த்தி, அதற்கேற்றபடிதான் புத்தகத்தையோ, பேப்பரையோ அட்ஜஸ்ட் செய்ய வேண்டுமே தவிர, புத்தகத்தை ஒரு குறிப்பிட்ட நிலையில் வைத்துவிட்டு அதற்கேற்றபடி தலையை அட்ஜஸ்ட் செய்யக்கூடாது. புத்தகத்தை நகர்த்த முடியாத பட்சத்தில், கூர்ந்து பார்க்க வேண்டும் என்கிறபோது, நெஞ்சை முன்னே கொண்டு போய் தான் உற்றுப் பார்க்க வேண்டுமே தவிர, தலையை மட்டும் கவிழ்த்துப் பார்க்கக்கூடாது.

கீழே உள்ள புகைப்படங்களைக் கவனித்துப் பாருங்கள். சரியான நிலைகளை மனத்தில் பதிய வைத்துக் கொள்ளுங்கள்.









இரண்டு சக்கர வாகனங்கள் ஓட்டுபவர்களும் நேரே நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு தான் வண்டியைச் செலுத்த வேண்டும். ஸ்கூட்டராக இருக்கும் பட்சத்தில் லைனரிடம் சொல்லி இருக்கையை அட்ஜஸ்ட் செய்யச் சொல்லுங்கள். இருக்கை உயரமாக இருந்தால் கூன் போடத் தோன்றும். தாழ்வாக இருந்தால், தேவைக்கதிகமாக நிமிரத் தோன்றும்.

படத்தைப் பாருங்கள். தலை, கழுத்து, இடுப்பு மூன்றையும் இணைத்து ஒரு கோடு வரைந்தால், கோடு நேராக இருக்க வேண்டும். அதுதான் சரியான நிலை.



நான் சொன்னவற்றை மனத்தில் வைத்துக் கொண்டு உடற்பயிற்சிகளை நம்பிக்கையுடன் ஆரம்பியுங்கள். கழுத்து வலி, முதுகுவலி, மூட்டு வலி எல்லாம் எப்படி இருக்கும் என்பதே உங்களுக்குத் தெரியாமல் போய்விடும்.

— கே.எஸ். சித்தார்த்தன்

உடற்பயிற்சிகளைச் செய்து காண்பித்திருப்பவர் : **திவ்யதர்ஷினி**

தொகுப்பு : **கிருஷ்ணா சிதம்பரம்**

படங்கள் : **ஸ்ரீ ஹரி**



பெரிய புள்ளி!

"விஷயத்தைக் கேள்விப் பட்டவுடன், எனக்கு சந்தோஷம் தாங்கவில்லை. அழுகை, அழுகையாய் வந்துவிட்டது" என்கிறான் உதயராஜ். 'நிலாக் காலம்' படத்தில் புள்ளி என்ற சுட்டிப் பையன் கேரக்டரில் நடித்து அசத்தியவன்.

சென்ற ஆண்டின் சிறந்த குழந்தை நட்சத்திரத்துக்கான தேசிய விருது கிடைத்த அறிவிப்பு வந்த தினத்தில் 'சிட்டிசன்' படத்தின் படப் பிடிப்பில், ஹைதராபாதில் இருந்தான் உதயராஜ். அன்று இரவு சென்னை புறப்பட்டு வந்தான். அவனது வீடே சந்தோஷத்தில் மூழ்கி இருந்தது. ஏகப்பட்ட வாழ்த்துக்கள். டைரக்டர் ஷங்கர், பார்த்திபன் என நிறைய வி.ஐ.பி.களிடமிருந்து பூங்கொத்து, பரிசுகள். ஆனால், தன் அண்ணன், தங்கை மற்றும் பெற்றோருடன் சந்தோஷமாய்க் கொண்டாட, உதயராஜுக்கு நேரமில்லை. ஹைதராபாதிலிருந்து வந்த கையோடு, படப்பிடிப்புக்குப் போய்விட்டான்.

ஜோதிகாவோடு '12B' பிரசாந்துடன் 'சாக்லேட், மாதவனுடன் 'பார்த்தாலே பரவசம்', அஜித்துடன் 'சிட்டிசன்' என்று கையில் ஏகப்பட்ட படங்கள்.

"பள்ளிக்கூடத்துக்குப் போகவே முடியலை; தனியே டியூஷன் வைத்திருக்கிறோம். என்னதான் சினிமா என்றாலும், இந்தக் காலத்தில் படிப்பும்தானே முக்கியம்?" என்று கேட்கிறார் உதயராஜின் அம்மா உமா.

"இவனுக்கு இரட்டைச் சுழி சார்! எப்பப்பாரு, துருதுருன்னு எதையாவது நோண்டிக்கிட்டே இருப்பான். நாய்க்குட்டியோட விளையாடுவான் (நாய்க்குட்டியின் பெயர் ஜானி) இல்லைன்னா தங்கச்சியைச் சீண்டிக் கொண்டிருப்பான்" என்று சர்டிபிகேட் கொடுத்திருக்கிறார் உதயராஜின் அப்பா தனராஜ்.

"இப்போதான் எனக்குப் பெரிய ஹீரோக்களுடன் சேர்ந்து நடிக்க சின்கள் வருது சார்! இதற்கு முன் சுமார் பதினைந்து படங்களில் நடித்திருக்கிறேன். ஆனால், ஹீரோவோடு சேர்ந்து எந்தக் காட்சியிலும் வந்தது இல்லை. எல்லாம் சின்ன வயசு ஹீரோ ரோல்தான். என் காலைக் காட்டுவாங்க. அடுத்து நான் வளர்ந்துட்டதா அஜித், விஜய் இல்லைன்னா முரளியைக் காட்டிடுவாங்க." நமுட்டுச் சிரிப்புடன் சொல்கிறான் உதயராஜ்.

"'நிலாக்காலம்' படம் பார்த்துவிட்டு வந்தவங்க பேர் 'டேய் உதயராஜ்! நீ தூள் கிளப்பிட்டே. உனக்கு நேஷனல் அவார்டு நிச்சயம் கிடைக்கும்டா'ன்னு சொன்னாங்க. அதுமாதிரியே எனக்கு அவார்டு கிடைச்சிருக்கு! அவார்டுன்னு என்னா சார் கொடுப்பாங்க? அதை வாங்க டெல்லிக்குப் போகணுமாமே! வாஜ்பாயா சார் எனக்கு அவார்டு குடுப்பாரு?" என்று ஆர்வம் பொங்கக் கேட்கிறான் உதயராஜ்.

— பாரதி

'அப்பாவை அடியொற்றி அரசியலுக்கு வருவீர்களா?' என்று கேட்டோம் சில வாரிசுகளிடம்...



• சிலம்பரசன்

சிலம்பரசன்:–

இரண்டு வயசு குழந்தையா இருக்கும்போதே நான் 'மைக்' பிடித்துப் பேச ஆரம்பிச்சுட்டதா அம்மா சொல்றாங்க. அதுக்காக அரசியல்வாதியாயிட முடியுமா?

அரசியலுக்கு வர்றதுன்னா அதற்கு நிறைய மெச்சூரிட்டி வேணும். கடும் உழைப்பு வேணும். தீர்க்கதரிசனத்தோட திட்டங்களை வகுக்கத் தெரியணும். பொறுப்பா செயல்படணும்.

நான் இப்ப சினிமாவுக்கே அறிமுக மாணவன்தான். அதனால முதல்ல நடிகனாகி, மக்களிடையே நல்ல பேரும் புகழும் வாங்கணும்.

கீதன்:

அப்பா அபூர்வமான மனிதர். எங்களுடைய படிப்பு, தொழில், எதிர்காலம் போன்றவற்றைத் தீர்மானிக்கும் சுதந்திரத்தை எங்களுக்குத் தந்திருக்கிறார்.

எனக்கு அச்சுத் தொழிலில் விருப்பம். சொந்தமாக பிரஸ் வைத்திருக்கிறேன். அது தவிர, கம்ப்யூட்டர் மையமும், பர்சனாலிட்டி டெவலப்மெண்ட் வகுப்புகளும் நடத்தி வருகிறேன்.



• முக்தா சீனிவாசன் - சுந்தர்

நான் பல விஷயங்களில் அப்பா பிள்ளை. தன்னம்பிக்கை, அயராத உழைப்பு, துவண்டு போகாத உறுதி, இதெல்லாம் அவரிடமிருந்து நான் கற்றுக் கொண்டவை. இவற்றை என் வியாபாரத்தில் பயன்படுத்தி, ஏற்றம் கண்டு வருகிறேன்.

எங்கள் குடும்பத்தில் என் சகோதரி டாக்டர் தமிழி

அப்பா த.மா.க; மகன் பா.ஜ.க!

வாக்கலாம். ஆனால் அரசியலில் சாத்தியமில்லை. மக்களின் பேராதரவு தேவை.

என்னுடைய தந்தை த.மா.கா பிரமுகர் என்றாலும் எனக்கு பா.ஜ.கட்சியில்தான் ஈடுபாடு அதிகம். மக்களின் பிரச்னைகளைப் புரிந்து கொண்டிருக்கும் நல்ல தலைவர்கள் உள்ள கட்சி என்ற அளவில் நான் பா.ஜ.க அபிமானி.

இப்போது டீவி தொடர்கள் தயாரிப்பில் முழு மூச்சாக இறங்கியிருக்கிறேன். தரமான நிகழ்ச்சிகளைத் தயாரிக்க வேண்டும் என்பதில்தான் என் முழு கவனமும் உள்ளது. அரசியலில் நாட்டமில்லை.

என் அப்பாவின் கொள்கைகள், எளிமை, எழுத்தாற்றல், நேர்மையான பேச்சு எல்லாமே என்னைக் கவர்ந்தவை. ஆனால் அவரது அரசியல் வாரிசாக எனக்கு விருப்பமில்லை.



• டி.ராஜேந்தர்



• படம் : ராஜன்

• வெற்றிவேல்-பாரத்



• குமரி அனந்தன் - கீதன்

லைசக்கு அரசியல் ஆர்வம் உண்டு. அவர் பா.ஜ.கட்சியில் மாநில செயற்குழு உறுப்பினராக இருக்கிறார்.

முக்தா வி. சுந்தர்:

கலை, வியாபாரம் போன்றவற்றில் வேண்டுமானால் வாரிசுகளை உரு

வெ. பாரத்:

லயோலா கல்லூரியில் பி.சி.ஏ படிக்கிறேன். ஐ.ஏ.எஸ் படிக்கத் தயார்ப் பண்ணிக்கிட்டிருக்கேன். "மாணவர் பருவம் மிக முக்கியமானது. அதை நல்லபடியா பயன்படுத்திக்கணும்"னு தாத்தா அடிக்கடி சொல்வார். அதனால இப்ப படிப்பு, விளையாட்டுன்னு இருக்கேன். மாநில அளவுல கூடைப்பந்து போட்டிகளில் கலந்துக்கிட்டு ஆடியிருக்கேன். கார் பந்தயங்களில் ஆர்வம் உண்டு. அதற்காகவும் தயார்ப்படுத்திக்கிட்டு இருக்கேன். அப்பா (சென்னை மாநகராட்சி துணைத் தலைவர் வெற்றிவேல்) மாதிரி அரசியலுக்கு வருவேனான்னு சொல்லத் தெரியலை.

- லக்ஷ்மி ஸ்ரீனிவாசன்

இனிமேல்

அனுராதா ரமணன்



இருபது வருடங்களுக்கு முந்தைய கதையைச் சொல்லச் சொல்ல, அவள் பரபரப்பானாள்.

"அப்பா, அவரை நாம உடனே பார்த்தாகணும்."

"எதுக்கு? அவனை விட நான் நல்லாவே ஜோசியம் பார்ப்பேன்மா. இன்னிக்குக் காலையிலே கேசவ்வோட ஜாதகத்தைப் பார்த்தேன். அஷ்டமத்துலே சனி. கேது தசை வேற. சும்மா புரட்டி எடுத்துடும்..."

அவர் மேற்கொண்டு ஏதோ சொல்ல வர, பரீத்தி தடுத்து நிறுத்துகிறாள்.

"இப்பவே அந்த ஆளைப் போய்ப் பார்த்தாகணும். இப்ப அவரை வைத்துத் தான் காயை நகர்த்தணும்."

கேதாரிக்கு மகளின் திட்டம் புரிய



"அவனுக்கு ஜோசியமும் தெரியாது ஒரு மண்ணும் தெரியாது. நானாக்கும் அவனுக்குன்னு ஒரு வழியைக் காண்பிச்சுக் கொடுத்தேன்."

கப்பன்பார்க்கில் மகளுடன் உட்கார்ந்து கடலையைக் கொறித்தபடி கேதாரி - அனுமந்துவைப் பற்றிச் சொல்கிறார்.

"ஒண்ணுமே தெரியாதும்மா அவனுக்கு. எங்க ஆபீசுலே என்னோட செக்ஷன்லே ப்யூனா வேலை செஞ்சவன். எனக்குத் தெரிஞ்சே அப்பவே அவனுக்கு ரெண்டு பெண்டாட்டி. இப்போ எத்தனையோ. தேதி பத்து ஆச்சுன்னா நூறு, இருநூறுன்னு கடன் வாங்க வருவான். மத்தவங்க எல்லாம் சம்பளம் வந்த உடனே கழுத்துலே கத்தி வெச்சு கொடுத்த கடனை வசூல் பண்ணிடுவாங்க. நான் ஒருத்தன் தான் பாவம் ஒழியட்டும்னு விட்டு விடுவேன்."


ப்ரீத்தியின் முகம் ஆயிரம் வாட்ஸ் விளக்குகள் போல பளபளவென ஜொலித்தது. கேதாரி

வில்லை; என்றாலும் அனுமந்துவைப் பார்க்கக் கிளம்புகிறார்.

பழைய அழுக்கு காக்கிச் சட்டை அனுமந்து இல்லை இப்போது. கனமான சரீரம்... இடுப்பில் சாண் அகல சரிகை போட்ட மஞ்சள் பட்டு. கழுத்தில் கண்டு விரல் பருமனுக்குச் சங்கிலி. பத்து விரல் களில் இருபது மோதிரங்கள். வேட்டியை மிஞ்சும் அளவுக்கு ஜரிகையாலேயே நெய்த அங்கவஸ்திரத்தையும் மீறி கோபி சந்தனம் மார்பில் பளிச்சிட்டது. வாய் நிறைய வெற்றிலை, பாக்கு, புகையிலை இத்யாதிகளுடன் பொய்யும்.

இவர்கள் உள்ளே நுழைந்த போது வாசலில் ஏகப்பட்ட கார்களும், வர வேற்பு அறையில் அமர்க்களமாய்ப் போடப்பட்டிருந்த சோபாக்களில் மிகப் பெரிய வி.ஐ.பிக்களுமாய்க் காத்திருக்க - அங்கு உதவியாளராக இருந்த வருங்கால சின்ன அனுமந்துவிடம்





கேதாரிநாத் ஒரு துண்டுக் காகிதத்தில் தன் பெயரை எழுதிக் கொடுக்க -

அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் தொந்தி குலுங்க ஓடி வந்து விட்டார்.

"அண்ணா, சௌக்யமா இருக்கேளா?"

இப்படி ஆர்வமுடன் கேட்டு எட்ட இருந்தபடியே கட்டியணைத்து (நெருங்க விடாமல் தான் தொந்தி இடிக்கிறதே) கண் ணார ஜலம் விட, ப்ரீத்தி அவரையே பார்த்த படி இமைக்காமல் நின்றாள்.

"வாங்கோ வாங்கோ... உள்ளே போகலாம் வாங்கோ."

அனுமந்துவின் ஆலோசனை அறைகள் அவருடைய வாடிக்கையாளர்களின் அந்தஸ் துக்கும், செல்வாக்குக்கும் ஏற்றபடி இருந்தன.

எடுத்த எடுப்பில் நுழைந்த அறையில் இரண்டு புறமும் வரிசையாய் குஷன் வைத்த பிரம்பு நாற்காலிகள் போட்டு, நடுவே நீள

ஆரம்பம் 24

வாக்கில் ஒரு பிரம்பு டீபாயும் அனுமந்துவுக்கென்று ஒரு ஸ்பெஷல் சிம்மாசனமும் போடப்பட்டிருக்க... அங்கு அமர்ந்திருந்த ஓரிரு நபர்கள் உயர்ரக பீங்கான் கோப்பைகளில் தேநீர் அருந்திக் கொண்டிருந்தார்கள்.

அடுத்த அறையில் நீளவாட்டத்திலும், தனித்தனியாகவும் வெல்வெட் சோபாக்கள் போடப்பட்டிருக்க, நடுவே மயிலாசனம் போன்ற நாற்காலி அனுமந்துவுக்காக காத்திருந்தது. அங்கும் இரண்டு பேர் நுரை ததும்ப எவர்சில்வர் டபரா தம்ளர்களில் வந்த காப்பியை ஆற்றிக் குடித்துக் கொண்டிருந்தனர். இவர்கள் அத்தனை பேருமே அனுமந்துவைப் பார்த்ததும், ஏதோ தெய்வத்தையே பார்த்ததைப் போல, எழுந்து நின்று உட்கார்ந்ததை ப்ரீத்தி கவனிக்கத் தவறவில்லை.

மூன்றாவது அறையில் கால் வைப்பதற்கு மட்டும் ரத்னகம்பளம் விரிக்கப்பட்டு, மிச்ச இடமெல்லாம் தரையோடு தரையாக கனமான மெத்தைகளும், சாய்மானத்திற்குக் திண்டுகளும் போடப்பட்டிருந்தன.

வந்தவர்கள் ஜாதகத்தைக் கொடுத்து பலன் கேட்டுவிட்டு அப்படி விஸ்ராந்தியாய் ஒரு தூக்கமும் போட்டு விட்டுப் போகலாம் போல...

இவர்கள் போன சமயம் நல்ல வேளையாக அந்த அறையில் யாரும் இல்லை. மெலிதான ஃபாரின் யுடிகோலோன் வாசனை அறை முழுவதும் இதமாய்ப் பரவியிருக்க, அறைக்குள் நுழைந்ததுமே கதவை இறுக தாளிட்டுவிட்டு, நெடுஞ்சாண் கிடையாக கேதாரியின் பாதங்களில் விழுந்தார் அனுமந்து. நல்ல வேளையாக ப்ரீத்தி துள்ளி நகர்ந்தாள். இல்லாவிட்டால் அவளுக்கும் ஒரு நமஸ்காரம் கிடைத்திருக்கும்.

"இவ என் பொண்ணு. பேரு ப்ரீத்தி."

"அண்ணா, தெரியாதா எனக்கு. சின்னக் குழந்தையிலே எத்தனை தடவை இவளைத் தூக்கிண்டு மார்க்கெட்டுக்கும் கடைக்கும் ஓடியிருக்கேன் நான். என்ன சாப்பிடறேள்... சொல்லுங்கோ."

கேதாரி இதற்கு நேரிடையாக பதிலளிக்காமல், மகளைப் பார்த்து புன்னகைத்தார்.

"அம்மா, அனுமந்துவைப் பார்க்கணும்னு சொன்னே... கொண்டு வந்துவிட்டுட்டேன். இனிமே நீயாச்சு அவனாச்சு. என்ன பேசணுமோ பேசிக்கோ..."

அவர் இப்படிச் சொன்னவுடனேயே அனுமந்து கூசிக் குறுகி கைகளைக் குவித்தபடி சொல்கிறார்...

"அய்யோ, உங்க அப்பா சொல்லிக் கொடுத்த ஜோசியத்துக்கு மேல, ஒரு இம்மிகூட அதிகமா நான் கத்துக்கலேம்மா. நானும் தலைகாணி தலைகாணியா ஜாதக அலங்காரம்னும், நாடி ஜோதிடம்னும், அகத்திய ஜோதிடம்னும், ஆயிரத்தெட்டு புக்ஸ் வாங்கிப் படிச்சுப் பார்த்துட்டேன்.... ஒண்ணுமே புரியலே. எதுக்கு வம்புன்னு நமக்குத் தெரிஞ்ச ஒன்பது கிரஹங்களும், இந்த ஒன்பது வீட்டுக்குள்ளேதானே இருக்கப் போகுதுன்னு ஆகமட்டும் அப்படி இப்படி தாஜாபண்ணி தெரிஞ்சு வச்சுட்டிருக்கேன். நீ- அண்ணாவோட பொண்ணு. அவரோட புத்திசாலித்தனம் அப்படியே உன்கிட்டேயும் இருக்கும். என்னை ஏதாவது எடக்கு மடக்கா கேள்வி கேட்டுத் திணற வெச்சுடாதே... நான் தாங்க மாட்டேன்."

ப்ரீத்தி, தேங்காயைக் கீற்றுப் போட்டது போல் சிரித்தாள்.

"நான் கேட்க வந்தது ஜாதகத்தைப் பற்றியோ ஜோசியத்தைப் பற்றியோ இல்லே அங்கிள். எனக்கு ஒரு காரியம் உங்களாலே ஆக வேண்டியிருக்கு. அதுக்கு நீங்கதான் உதவணும்."

"சொல்லும்மா... நான் என்ன செய்யணும் சொல்லு."

ஒரு கணம் தயங்கிய ப்ரீத்தி, மெல்லக் கேட்கிறாள்...

"அந்த அவினாசிலிங்கத்தோட பையனுக்கு..."

"தலைவர் எங்கே நிக்க வெச்சாலும் நிக்கத் தயார்னு சொன்னது தப்பாப் போச்சு!"

"ஏன்? என்னாச்சு?"

"தலைவர் அவரோட வீட்டு கேட்ல செக்யூரிட்டியா நிக்க வெச்சுட்டார்!"

— கொங்கணாபுரம் வே. செந்தில்



திருவள்ளுவர் இடத்தில் மு.க. ஸ்டாலின்!

திராவிட பாரம்பர்யத்தினர் 'திருவள்ளுவர் ஆண்டு' என்றுதான் இதுவரை குறிப்பிட்டு வந்தார்கள். குமரிமுனையில் திருவள்ளுவர் சிலை நிறுவிய பின் அது 'அய்யன் திருவள்ளுவராண்டு' ஆயிற்று.

சமீபத்தில் வேலூர் மாவட்ட தி.மு.க.முன்னாள் செயலாளர் தோப்பூர் திருவேங்கடம் இல்லத் திருமண அழைப்பிதழில், 'புதிய ஆண்டு' ஒன்று அரங்கேறியுள்ளது. அந்தப் பத்திரிகையில், ''நிகழும் தளபதி மு.க. ஸ்டாலின் 49வது ஆண்டு மாசி மாதம் 24–ம் நாள் (8.3.2001)....'' என்று நீண்டு செல்கிறது அழைப்பிதழ் வாசகம்.



– இருள் நீக்கியான்

அவள் சொல்லச் சொல்ல வாயில் வெகு நேரமாய் அடக்கி வைத்திருக்கும் புகையிலையைத் துப்பக்கூட மறந்தவராய், வெற்றிலைச் சாறு முகவாயில் வடிவதைக் கூட உணராதவராய், திறந்த வாய் திறந்தபடி உட்கார்ந்திருக்கிறார்.

"என்னம்மா இது... இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடறே?"

இதற்கு கேதாரி சிறு குழந்தை போல கைகளைத் தட்டியபடியே சொன்னார்.

''நீ தான் அப்பவே சொன்னியே– அப்பாவுடைய புத்திசாலித்தனம் அப்படியே இருக்கும்னு. இவளுக்குப் பத்து மடங்கு புத்திசாலித்தனம் இருக்கு. என்ன பண்றது? மாட்டிட்டியா? பாரு... என் பொண்ணு கர்ணன் படத்துலே வர்ற கிருஷ்ண பரமாத்மா மாதிரி உன்கிட்டே வந்து வாக்கு வாங்கிட்டா. நான் நினைக்கிறேன் உனக்கு இப்போ நேரம் சரியில்லேன்னு."

அனுமந்து ஒரு கணம் தான் தயங்கினார். உடனே போய் எச்சிலைத் துப்பிவிட்டு வந்தார்.

''உங்கப்பா எனக்கு செஞ்சிருக்கற உதவிகளுக்கு நான் எத்தனை பிறவி எடுத்து நன்றிக் கடன் செலுத்தினாலும் போதாதும்மா... வேற யார் கேட்டிருந்தாலும், நான் இதைச் செய்ய மாட்டேன். காரணம்– அவினாசிலிங்கத்துக்கு என்மேல அத்தனை நம்பிக்கை."

ப்ரீத்தி இதைக்கேட்டு, நிஜமாகவே கர்ணன் பட என்.டி. ராமராவ் போல குறும்பாய்ச் சிரித்தாள்.

"ஒரு நல்ல விஷயத்துக்காகத்தானே கேட்கிறேன்."

பேசி முடித்துவிட்டு வெளியே வந்தவள் நேரே அஜய்க்கு எஸ்.டி.டி. செய்யப் போகிறாள்.

'இவளுக்குத்தான் எத்தனை புத்திசாலித்தனம். இவளை விடவும் அந்தப் பொண்ணு சுஜா எந்த விதத்தில் உசத்தி?'

பாழும் தந்தை மனம் விம்முகிறது.

(தொடரும்)

''மறியல் கூட்டத்தில் கலந்துகிட்டவங்கள, கண்ணீர்ப் புகை, லத்தி அடி இல்லாமலே போலீஸ்காரங்க, கலைஞ்சு போக வைச்சுட்டாங்களா...? எப்படி?''

''மஃப்டில போயி உண்டியல குலுக்க ஆரம்பிச்சாங்க, கூட்டம் கலைஞ்சிருச்சு!''

– சோழபுரம் யாக்கோபு





கல்கி அடுத்த இதழ் விடுமுறை ஸ்பெஷல்!
'நாங்க திருந்திட்டோம்!' – ஹாட்டான பேட்டை தாதாக்கள் கூலான கதை!
பட்ஜெட் டூர்ஸ்! – என்னென்ன பார்க்கலாம் எங்கெங்கே போகலாம். – ஒரு ரிப்போர்ட்
'தவிச்சுட்டோம்!' – டூர் அனுபவங்களை நினைவு கூர்கிறார்கள் வி.ஐ.பி.க்கள்
சின்ன சின்ன போட்டிகள் வாரந்தோறும்!
'தேன்கூடு' – புதிய வாசகர்களுக்கான புதிய பகுதி!
அதிக பக்கங்களுடன் வண்ணமயமாக வெளிவருகிறது!
மாயாஜாலில் சுஜா! – கோடையை மறக்க வைக்கும் குளுமையான டூர்!
– அருண்ணா சரண்யா எழுதும் விறுவிறுப்பான தொடர்கதை ஆரம்பம்

இனி தனிமை இல்லை!

வீட்டில் சின்னக் குழந்தைகள் இருந்தால், அவர்களை க்ரஷில் விட்டு விட்டு வேலைக்குப் போகலாம். வயோதிகர் இருந்தால்? வீட்டில் தனியாக விட்டுச் செல்லவும் மனமில்லாமல், முதியோர் காப்பகங்களில் தங்க வைக்கவும் பிடிக்காமல் வருந்துபவர்களின் பிரச்னைக்குத் தீர்வு காண நூதன க்ரஷ் ஒன்றை உருவாக்கியிருக்கிறார் டாக்டர் ராதா மூர்த்தி.

பெங்களூர் மல்லேஸ்வரத்தில் இருக்கும் 'நைட்டிங்கேல்ஸ் என்ரிச்மென்ட் சென்டர்' என்ற இந்தக் காப்பகத்தில் எண்பது உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அறுபது வயதிலிருந்து எண்பது வரை உள்ள சீனியர் சிட்டிசன்கள் ஆபீஸ் போவது போல காலை பத்து மணிக்குப் போய்விட்டு, மாலை ஆறு மணி அளவில் வீடு திரும்பி விடுகிறார்கள்.

எப்படி வந்தது இந்த ஐடியா?

"நான் முதலில் மருத்துவராகத்தான் பணியாற்றி வந்தேன். அங்கு பலவித நோயாளிகளைச் சந்திக்கும் வாய்ப்பும் அவர்களுடைய பிரச்னைகள், வேதனைகளைப் புரிந்துகொள்ள சந்தர்ப்பமும் கிடைத்தது. நிறைய பேரைத் தனிமைதான் பெரும் கவலையாக வதைக்கிறது என்பது தெளிவாகப் புரிந்தது. மகனோ அல்லது மகளோ, அவர்களுடைய பிள்ளைகள் எல்லோரும் வெளிநாட்டில் செட்டில் ஆகிவிட்டிருப்பார்கள். அல்லது வெளியூரில் எங்காவது இருப்பார்கள். பணவசதி இருந்தும், அனாதையாகிவிட்ட நிலை. ஓடி ஓடி வேலை செய்து, எல்லாரையும் நல்ல நிலைக்கு உயர்த்திவிட்ட பின்பு தாம் வேண்டாத சுமையாகி விட்டோமோ. இனி, எதற்குமே பிரயோஜனமில்லாமல் ஆகி விட்டோமோ என்ற தாழ்வு மனப்பான்மையால் குன்றிப் போய் விடுகின்றனர். இவர்கள் சுயமதிப்பீடும் குறைந்து உற்சாகமும் குன்றி குமைந்து கொண்டிருக்கின்றனர். இத்தகையவர்களை வளப்படுத்துவதற்காகவே இந்த க்ரஷ்ஷை ஆரம்பித்தேன்" என்கிறார்





தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதி, திறமை என்பது, பொது ஒழுக்கம், பொது அறிவு, மக்களைச் சமமாகக் கருதும் பொது நேர்மை — வஞ்சகம் — பொய் — களவு — சூது — இவற்றை வெறுக்கக் கூடிய தன்மை, நாணயம் முதலியவையாக இருக்க வேண்டும்.

— பெரியார்



டாக்டர் ராதாமூர்த்தி.

க்ரஷ், தனி பங்களாவில் இருக்கிறது. கேட்டைத் திறந்தவுடன் குரோட்டன்ஸ் செடிகளும், பூஞ்செடிகளும் பசுமையாக வரவேற்கின்றன. பெரிய ஹால், விசாலமான அறைகள், தியானம், பிராணாயாமத்திற்கென்றே தனி அறை. ஏரோபிக்சுக்குத் தனி கூடம் என்று சகல வசதிகளுடன் 'க்ரஷ்' பளிச் என்றிருக்கிறது. அடிக்கடி பல்வேறு துறைகளைச் சார்ந்த கவுன்சலர்கள் வந்து ஆலோசனைகள் தருகிறார்கள். சமுதாய மாற்றங்கள், கலாசார சீர்கேடுகள், அரசியல், ஆன்மிகம், மனவளம் என்று விதவிதமான தலைப்புகளில் கருத்தரங்கம் நடைபெறுகிறது. 'க்ரஷ்' உறுப்பினர்கள் உற்சாகமாக கலந்துகொண்டு விவாதிக்கிறார்கள்.

"இங்கே என் பேச்சை யார் கேட்கறா?" என்று யாரும் ஆதங்கப்பட அவசியமே இல்லை!

இந்த மையத்தில் கம்ப்யூட்டர் இருப்பதால், வெளிநாட்டில் இருக்கும் தத்தம் பிள்ளைகளுக்கு ஈமெயில் அனுப்பவும் இவர்கள் பயிற்சி பெறுகிறார்கள்.

திருநெல்வேலியைச் சேர்ந்த 71 வயதான சுப்ரமண்யம் வங்கியில் உயர் பதவியில் இருந்த பிறகு ஓய்வு பெற்றவர்.

"என் மனைவி அமெரிக்காவில் இருக்கிறாள். என் மகன்களுக்கு அங்கு வேலை. இங்கு வந்து போவது எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. இவ்வளவு கிழங்களை வச்சு சமாளிக்கிறது அவ்வளவு சுலபமல்ல. பொதுவாகவே கிழங்களுக்குப் பேச்சு கொஞ்சம் ஜாஸ்தி" என்று கலகலவென்று வெகு இயல்பாகப் பேசுகிறார்.

"என் அப்பா ராணுவத்தில் வேலை பார்த்தவர். என் கூட பிறந்தவர்கள் பன்னிரண்டு பேர். எல்லோரும் இன்றும் கடிதம் மூலமாக வேணும் தொடர்பு வைத்திருக்கிறோம். இந்த க்ரஷ் ஒரு வரப்பிரசாதம் என்றே சொல்ல வேண்டும். சுறுசுறுப்பாக இருக்கிறது. நம் வயதொத்தவர்களைப் பார்த்துப் பேசினால் ஓர் ஆறுதல் கிடைக்கிறது. அந்தக் காலத்தில் கூட்டுக் குடும்பம்னு இருக்கும். 'ஜேஜே'னு கலகலப்பா இருக்கும். இப்போது அப்படி யாரும் இருப்பதில்லை; அது சாத்தியமுமில்லை" என்கிறார் தெளிவான பார்வையுடன்.

பத்மாவதி சந்திரசேகர் சென்னை வானொலி நிலையத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். "என்னுடைய மூன்று மகன்களுமே அமெரிக்காவில் வேலை பார்க்கிறார்கள். மிகச் சமீபத்தில் நாலாவது மகனை இழந்து விட்டேன். நொறுங்கிப் போய் விட்டோம். எங்களுடைய வேதனைக்கு அளவேயில்லை. சில வருடங்கள் வெளிநாட்டில்தான் இருந்தோம். அங்கெல்லாம் முதியவர்களுக்கென சப்போர்ட் சிஸ்டம் அமைப்புகள் உண்டு. இங்கு வந்த பிறகு எப்படி தனிமையை, வேதனையை மறந்து வாழப் போகிறோம் என்று இருந்தது. இந்த க்ரஷ், கடவுளாக பார்த்து எங்களுக்கு அனுப்பிய ஓர் ஆறுதல் பரிசு என்றே சொல்லலாம்.

"நான் முழுக்க டீவி பார்த்து நேரத்தை வீணாக்குவது எனக்குப் பிடிக்காது. எத்தனையோ நல்ல விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம். நல்ல புத்தகங்களைப் படிக்கலாம். உடற்பயிற்சி செய்யலாம்... (ஒவ்வொரு வீட்டிலும் இந்த மாதிரி பெண்மணிகள் இருந்தால் மெகா சீரியல் தயாரிப்பாளர்களின் கதி??) என்று சொல்லும் பத்மாவதியின் கணவர் பார்க்கின்ஸன் நோயால் அவதிப்படுகிறார்.

குஜராத்தில் உயர் காவல் அதிகாரியாக பணிபுரிந்து ஓய்வு பெற்ற ராமச்சந்திரன் இங்கு பல மணி நேரங்கள் இருந்து இம்மையத்திலிருந்து பல உதவிகளைப் பெறுகிறார். "பணியில் இருந்தவரை சிறை, சட்டம், நீதி, திருடனைப் பிடிப்பது என்று கட்டுப்பாடான வாழ்க்கை வாழ்ந்தாச்சு. இப்பதான் வாழ்க்கையில் இன்னும் பல சுவாரஸ்யமான விஷயங்கள் இருப்பதே தெரியுது. சங்கீதம், ஆன்மிகம், புத்தகங்கள்... இதுக்கெல்லாம் இப்போதுதான் நேரமே கிடைச்சிருக்கு. என் மனைவிக்கு மூட்டு வலி... அதனால் நான் மட்டும்தான் தவறாமல் வருகிறேன். இங்கு வந்த பிறகு நாமும் உபயோகமாக பொழுதைக் கழிக்கிறோம் என்ற திருப்தி கிடைச்சிருக்கு" என்கிறார் மனப்பூர்வமாக.

— லதா சேகர்



• கோவிந்தவாசன்

தம்பி

த.மா.கா தொண்டர்களால் 'தம்பி' என்று பாசத்துடன் அழைக்கப்படுகிறார் மூப்பனாரின் மகன் கோவிந்தவாசன். த.மா.காவின் பொதுக்குழுவிலும் செயற் குழுவிலும் கடைசி வரிசையில் இவரைக் காணலாம். கட்சிப் பிர முகர்கள் அடையாளம் கண்டு முன் னணிக்கு அழைத்தாலும் நாசூக்காக மறுத்து விடுவார். எதிலும் அப்பா வின் பாணி. மூப்பனாரின் அசோகாசாலை வீட்டில், தொண் டர்களோடு தொண்டராக மதில் சுவர் ஓரத்தில் நின்றவாறு நோட் டம் விட்டுக் கொண்டிருப்பார். சாதா ரண தொண்டனின் மனக்குமுறலைக் கேட்கும் வாய்ப்பு கிடைக்கும். அது தலைவரின் காதுக்குப் போகும்.

கோவிந்தவாசனுக்கு அர சியல் ஆசைகள் உண்டா? சில மாதங்களுக்கு முன் னர் மகாபலிபுரத்தில் கோவிந்தவாசனும், தினகரனும், அன்பு மணியும் சந்தித்துப் பேசி த.மா.கா - அ.இ.அ.தி.மு.க - பா.ம.க கூட்டணிக்கு அச்சாரம் போட் டார்கள் என்ற செய்தி வந்தது. இப்போது நடந்திருப்பதைப் பார்த்தால் அதில் உண்மையிருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஜெயலலிதாவுக்குச் சொல்ல வேண்டிய பல விஷயங்களை கோவிந்த வாசன் மூலம் மூப்பனார் சொல்லி விடு கிறார் என்று சிதம்பரத்தின் ஆதரவாளர் கள் சொல்வதுண்டு.

ஒருமுறை த.மா.கா செயற்குழுவில் கோவைத்தங்கம் என்ற த.மா.கா பிரமுகர் "கோவிந்தவாசனை த.மா.கா இளைஞர் அணி தலைவராக நியமிக்க வேண்டும்" என்று பேசினார். உடனே மூப்பனார் "இது போல பேசினால் நான் ராஜினாமா செய்து விடுவேன்" என்று சொன்னார். மூப்பனா ருக்கு உடல்நிலை நன்றாக இருந்த நேரம் அது. இப்போது கோவிந்தவாசனின் முழு பராமரிப்பில்தான் மூப்பனார் இருக்கிறார் என்று கூடச் சொல்லலாம். அப்பாவின் உடல்நலத்தைக் கண்ணும் கருத்துமாக பாதுகாக்கிறார் வாசன். டாக்டர்களிடம் அழைத்துப் போவது, மாத்திரைகளை நேரத் துக்குக் கொடுப்பது என்று எப்போதும் உட னிருக்கிறார். கட்சித் தொண்டர்கள் யாரா வது குறைகளைச் சொன்னால் 'நான் பார்த்துச் செய்கிறேன்' என்று ஒற்றை வரியில் பதில் சொல்கிறார். தன்னைப் பார்க்க வரும் தலைவர்களுக்கு வாசனை அறிமுகப்படுத்தி வைக்கிறார் மூப்பனார்.

கட்சியில் பொறுப்புகள் வேண்டி பலர் வாசனை அணுகுகின்றனர். சில மாவட்டத் தலைவர்கள் நியமனங்களில் அவரது சிபாரிசு உண்டு என்றும் சொல்கிறார்கள். தேர்தல் நெருங்குவதால், சீட்டு கேட்டு அவ ரிடமும் சொல்லிவிட்டு மனுவும் கொடுக் கிறார்கள். தேர்தல் காரியங்களில், கட்சி வேட்பாளர்களுக்கு நிதி பிரித்துக் கொடுப் பது, போஸ்டர்கள் அச்சடிப்பது, அனுப்பு வது என்று வாசன் பிஸியாகி இருக்கிறார்.

"தலைவர் மகன் பொறுப்பிற்கு வரணும். இல்லையென்றால் மேல்மட்டப் பிரமுகர் கள் தலைவருக்குத் தவறான தகவல் தந்து, கட்சியைச் சீர்குலைத்து விடுவார்கள். தலை வர் இந்த விஷயத்தில் தயங்கவே கூடாது." என்று சொல்கிறார் சீனியர் த.மா.கா பிரமுகர் ஒருவர். தொண்டர்களின் எண்ண ஓட்டம் மூப்பனாருக்கும் தெரிந்திருக்க வேண் டும். எனவேதான் பாபநாசம் சட்ட மன்றத் தொகுதியில் கோவிந்தவாசன் போட்டியிட லாம் என்ற வதந்தி பலமாகவே அடிபடு கிறது. ஆயுத பேர ஊழல் தொடர்பாக வாஜ் பாய் அரசு பதவி விலகக் கோரி அ.இ.அ. தி.மு.க கூட்டணி நடத்திய ஆர்ப்பாட்டத்தில் அப்பாவுடன் வாசனும் கலந்து கொண்டார்.

- கௌசி

ராஜேஷ்குமார்

சௌம்யாவின் மை தீட்டிய விழிகள் சற்றே வியப்பில் விரிந்து யமுனாவின் மேல் திகைப்பாய் நிலைத்தது.

"அண்ணி...! வெளியே போகப் போறீங்களா?"

"ஆமா..."

''எதுக்கு! யாரையாவது பார்க்கணுமா?"

''யாரையும் பார்க்கிற துக்காக கிடையாது.''

"பின்னே...?"

''கோயிலுக்குப் போக ணும்."

"கோயிலுக்கா... எந்தக் கோயிலுக்கு...?"

''பக்கத்துத் தெருவில் இருக்கிற பஞ்சமுக ஆஞ்ச நேயர் கோயிலுக்குத்தான்..."

சௌம்யா தன் தோள்களை அழகாய் ஜெர்க் செய்துவிட்டு சிரித்தாள்.

"பக்கத்துத் தெருவில் இருக்கிற கோயிலுக்குத் தானே? சாயந்திரம் அண்ணன் ஆபீஸிலிருந்து வந்ததும் ரெண்டு பேருமா சேர்ந்து போய்ட்டு வாங்க. உடம்பு சரியில்லாத இந்த நேரத்துல நீங்க மட்டும் ஏன் தனியா போகணும்...?"

யமுனா சௌம்யாவின் தோளில் கை வைத்தாள்.

"தப்பா நினைச்சுக்காதே சௌம்யா...! நான் இப்போ கோயிலுக்குப் போறது என்னோட தனிப்பட்ட ஒரு வேண்டுதலுக்காக."

சௌம்யாவின் விழிகள் இன்னமும் ஒரு மில்லி மீட்டர் பரப்புக்கு விரிந்தது.

''தனிப்பட்ட வேண்டுதலா?"

"ம்... இந்த வீட்ல என்ன ஒரு நல்ல காரியம் நடந்தாலும் உடனடியா நான் ஆஞ்சநேயர் கோயிலுக்குப் போய் வெண்ணெய்ச் சாத்துப்படி பண்றது வழக்கம். உனக்குக் கல்யாணம் நிச்சயமான அன்னிக்கும் யாருக்கும் தெரியாமே ஆஞ்சநேயர் கோயிலுக்குப் போய் வெண்ணெய்ச் சாத்துப்படி பண்ணிட்டு



வந்தேன். இன்னிக்கு நான் உண்டாகியிருக்கிற நல்ல விஷயம் எல்லார்க்கும் சந்தோஷத்தைக் கொடுத்திருக்கு. அந்த சந்தோஷத்தைக் கொடுத்த கடவுளுக்கு நான் நன்றி சொல்ல வேண்டாமா.... அத்தையும் மாமாவும் இருக்கும்போதே பர்மிஷன் கேட்கலாம்னு நினைச்சேன். ஆனா அவங்க கண்டிப்பா ஒத்துக்க மாட்டாங்க. இப்ப அவங்க வீட்ல இல்லை. நான் போய்ட்டு வந்துடட்டுமா...?''

''என்ன அண்ணி இது...! அம்மாவும் அப்பாவும் வெளியே போகும்போது என்கிட்டே என்ன சொல்லிட்டுப் போனாங்க தெரியுமா...?''

''என்ன சொன்னாங்க...?''

''அண்ணி எதுக்கும் ரூமை விட்டு வெளியே வரக் கூடாது. என்ன வேணும்னு கேட்டு நீதான் கொண்டு போய்க் கொடுக்கணும்னு சொல்லிட்டுப் போயிருக்காங்க. நீங்க என்னடான்னா ரூமை விட்டு வெளியே வந்ததுமில்லாமே கோயிலுக்கு வேற போகணும்னு சொல்றீங்க...! வேண்டாங்கண்ணி... அப்பாவுக்கும் அம்மாவுக்கும் விஷயம் தெரிஞ்சுதுன்னா என்னை ஒரு வழி பண்ணிடுவாங்க. சாயந்திரம் அண்ணன் வந்ததும் அவர் கூடவே கோயிலுக்குப் போய்ட்டு வாங்க. அதுதான் உத்தமம்.''



''ப்ளீஸ் சௌம்யா...! என்னோட வேண்டுதலைப் பற்றி உன்னோட அண்ணன்கிட்டே சொன்னா அதை அவர் ஒரு பொருட்டாவே எடுத்துக்க மாட்டார். எல்லாம் இன்னொரு நாளைக்குப் போலாம்னு சொல்லித் தட்டிக் கழிச்சிடுவார். இப்பவே ஒரு அரை மணி நேரம் போய்ட்டு வந்துடறேனே... ப்ளீஸ்! என் உடம்புக்கு ஒண்ணும் இல்லை. கொஞ்ச நேரம் படுத்து ரெஸ்ட் எடுத்ததுல எல்லாம் சரியாயிடுச்சு....''

சௌம்யா சில விநாடிகள் யோசித்துவிட்டு நிமிர்ந்தாள்.

''அண்ணி! நீங்க இப்ப கோயிலுக்குப் போகணும். அவ்வளவுதானே....?''

''ஆமா...''

''சரி... வாங்க... ரெண்டு பேரும் போய்ட்டு வந்துடலாம்.''

''என்னது...! நீயும் வர்றியா...?''

''ஆமா....''

''வேண்டாம்....''

''ஏன்... நானும் உங்க கூட கோயிலுக்கு வந்தா என்ன...?''

''கல்யாணம் நிச்சயமான பிறகு நீ வெளியே வர்றது சரியில்லை. மாப்பிள்ளை வீட்டுக்காரங்க யாராவது பார்த்துட்டா அது ஒரு பேச்சுக்கு இடம் கொடுத்த மாதிரி ஆயிடும். நான் மட்டும் போய்ட்டு சீக்கிரமா வந்துடறேன். நான் கோயிலுக்குப் போறது வீட்டு வேலைக்காரிக்குக் கூட தெரிய வேண்டாம்.''

சௌம்யாவின் நெற்றியில் இலேசாய் வியர்வை மினுமினுத்தது.

''எனக்கு பயமாயிருக்கண்ணி...''

''என்ன பயம்?''

''வெளியே போயிருக்கிற அப்பாவும் அம்மாவும் திடீர்னு வந்துட்டா...?''

"அவங்க கல்யாண அழைப்புக்காக போயிருக்காங்க. எப்படியும் வீட்டுக்குத் திரும்ப மத்தியானம் ஒரு மணிக்கு மேலே ஆயிடும். நான் கோயிலுக்குப் போய்ட்டு பத்தரை மணிக்குள்ளே வந்துடறேன்."

"அ... அண்ணி..."

"பயப்படாதே! சரியா அரை மணி நேரம். வீட்ல இருப்பேன். வேலைக்காரி எங்கே....?"

"பின்கட்டுல பாத்திரம் தேய்ச்சுக்கிட்டு இருக்கா."

"எப்படியும் அந்த வேலை முடிய ஒரு மணி நேரமாயிடும். நான் அதுக்குள்ளே வந்துடறேன்..."

"நம்ம ஊரு மாரியாத்தாதான் இன்னைக்கு நமக்குப் படியளந்திருக்கா சரசு."

"அடப்பாவி! மாரியாத்தா உண்டியல்லயே கையை வச்சிட்டியா...?"

– சீர்காழி வி. ரேவதி



"அ.... அண்ணி...."

"ப்ளீஸ்.... செளம்யா... எனக்காக அந்த உதவியைக்கூட நீ செய்யக்கூடாதா...? கோயிலுக்குப் போய்ட்டு வந்தாத்தான் என்னோட மனசுக்குக் கொஞ்சம் ஆறுதலாயிருக்கும்...."

செளம்யா அரைமனத்தோடு தலையசைத்து வைக்க, யமுனா மலர்ந்தாள்.

"தேங்க்ஸ்... செளம்யா... நான் ரூமுக்குப் போய் வேற சேலையை மாத்திக்கிட்டு வந்துடறேன்" சொன்ன யமுனா வேகவேகமாய் தன் அறைக்குள் நுழைந்து வேறு சேலையோடு பளிச்சென்று வந்தாள். கையில் பூக்கூடை.

"அண்ணி! பத்தரை மணிக்குள்ளே வந்துடணும்."

"கவலைப்படாதே...! அதுக்கு முன்னாடியே நான் இங்கே இருப்பேன்" சொல்லிவிட்டு யமுனா விடுவிடென்று நடக்க ஆரம்பித்த விநாடி –

ஹாலின் மூலையில் இடம்பிடித்திருந்த டெலிபோன் தன் தொண்டையைக் கனைக்க ஆரம்பித்தது. யமுனா கண்ணைக் காட்ட செளம்யா ரிஸீவரை எடுத்தாள். மெல்ல குரல் கொடுத்தாள்.

"ஹலோ...."

"யாரு? செளம்யாவா?" மறுமுனையில் அகில் குரல் கேட்க செளம்யா கலவரமானாள்.

"ஆ...மாண்ணா..."

"என்ன... குரல் ஒரு மாதிரியிருக்கு. தூங்கிட்டே பேசறியா...?"

"இல்லேண்ணா... டீ.வி. பார்த்துட்டிருந்தேன்."

"சரி... அண்ணிகிட்டே ஃபோனைக் குடு..."

"அ... அண்ணியா...? பலாப் பிசினில் ஈ ஒட்டிக் கொண்ட தினுசில் குரல் தொண்டையிலேயே ஒட்டிக் கொள்ள ரிஸீவரின் வாயை இடது கை விரல்களால் பொத்திக் கொண்டு யமுனாவிடம் கிசுகிசுத்தாள்.

"அண்ணி...! லைன்ல அண்ணன்! நான் என்ன சொல்லட்டும்... உங்களைப் பேசச் சொல்றார்..."

"கொண்டா...!" யமுனா ரிஸீவரை தன் காதுக்குக் கொடுத்தாள்.

"ஹலோ..! நான்தாங்க..."

"யமுனா...! என்ன பண்ணிட்டிருக்கே....?"

"செளம்யாவோடு உட்கார்ந்து டீவி பார்த்துட்டிருக்கேன்."

"அவளுக்கு என்னாச்சு...? போன்ல அவ சரியாவே பேசலை.. அண்ணிகிட்ட ஃபோனைக் கொடுன்னு சொன்னா அ... அண்ணியான்னு ஏதோ திகிலடிச்ச மாதிரி பேசறா...?"

"டீவி. பார்த்துட்டிருக்கும்போதே கொஞ்சம் அசந்து தூங்கிட்டா போலிருக்கு. தூக்கக் கலக்கம் தெளியாமே பேசினா அப்படித்தான் இருக்கும்."

"சரியான தூங்குமூஞ்சி... கட்டிக்கப் போற மாப்பிள்ளை ரொம்பவும் பாவம்..."

"சரி... இப்ப எதுக்காக ஃபோன் பண்ணியிருக்கீங்க...?"

"சும்மாதான்."

"சும்மாவா...! ஆபீஸ்ல வேலை எதுவும் கிடையாதா...?"

"மத்தவங்க வேலை பார்க்கட்டும். எனக்கு இன்னிக்கு வேலை பார்க்கவே பிடிக்கலை..."

"ஏன்...?"

"நீ எனக்குக் கொடுத்த அப்பா பிரமோஷன்தான்...! நினைச்சுப் பார்க்கும் போதே ஹார்ட்டுக்குள்ளே ஒரு ஐஸ் துண்டம் வழுக்கிட்டுப் போற மாதிரியிருக்கு..."

"இதை ஆபீஸ் நேரத்துல ஃபோன் பண்ணிச் சொல்லணுமா...?"

"அந்த செளம்யா தூங்குமூஞ்சி பக்கத்துல இருக்காளா.... தூங்கறதுக்காக அவ ரூமுக்கு போய்ட்டாளா?"

"என்ன விஷயம் சொல்லுங்க..."

"உனக்கு ஏதாவது ப்ரஸண்ட் பண்ணலாம்னு இருக்கேன். என்ன வேணும் சொல்லு..."

"நெருக்கமா கட்டின ஒரு முழம் முல்லைப் பூ..."

"கொஞ்சம் காஸ்ட்லியா கேட்கக் கூடாதா?"

"ஒரு பெண்ணுக்கு இதைவிட காஸ்ட்லி வேற எதுவும் கிடையாது. பூ மட்டும் வாங்கிட்டு வாங்க போதும்."

"என்ன... யமுனா... எங்கேயாவது வெளியே கிளம்பிப் போகப் போறியா?"

"இ... இல்லையே... ஏன் அப்படிக் கேட்கறீங்க...?"

> 'எங்கள் சாதி தான் பெரிய சாதி
> எங்கள் மதம் தான் பெரிய மதம்
> எங்கள் கட்சிதான் பெரிய கட்சி' என்று சொல்லி வோட்டுக் கேட்பது அயோக்கியத்தனம். இதை ஒப்புக் கொண்டு வோட்டுப் போடுவது முட்டாள்தனம். பெரும்பான்மை என்பதாலேயே அது ஜனநாயக மாகிவிடுமா? அப்படியானால் இந்தியாவின் தேசியப் பறவையாக கொசுதான் இருக்க முடியும்.
>
> – பெரியார்தாசன்



"இல்ல... எப்பவுமே ஃபோன் எடுத்தா கொஞ்சம் நிதானமா பேசுவே. இன்னிக்கு பேச்சுல ஏதோ அவசரம். வெளியே புறப்பட்டுப் போகும் போது ஃபோன் வந்துட்டா நாம எப்படிப் பேசுவோமோ அப்படியிருக்கு உன்னோட பேச்சு..."

"உடம்புக்குக் கொஞ்சம் அசதியாயிருக்கு. அதுதான்!"

"சரி.. போய் ரெஸ்ட் எடு... முடிஞ்சா நான் லீவு போட்டுட்டு மத்தியானம் வீட்டுக்கு வந்துடறேன்."

"வீணா... எதுக்கு லீவு...?" யமுனா கேட்டுக் கொண்டிருக்கும்போதே – மறுமுனையில் ரிஸீவர் கவிழ்ந்து கொள்ளும் சப்தம் கேட்டது.

யமுனா ரிஸீவரை வைத்துவிட்டு முகத்தில் அரும்பியிருந்த வியர்வைத் துளிகளைச் சேலைத் தலைப்பால் ஒற்றிக் கொண்டே செளம்யாவைப் பார்த்தாள். அவள் அவஸ்தையாய்ப் புன்னகைத்தாள்.

"அண்ணி! எனக்குப் பயம்மாயிருக்கு."

"பயப்படாதே...! நான் கிளம்பட்டுமா?"

"நீங்க கோயிலுக்குப் புறப்பட்டுப் போனதும் அம்மாவோ அப்பாவோ போன் பண்ணி உங்களைக் கேட்டா நான் என்ன பதிலைச் சொல்றது அண்ணி...?"

"அண்ணி தூங்கிட்டிருக்குன்னு சொல்லு..."

"லேட் பண்ணிடாதீங்கண்ணி! பத்தரைக்குள்ளே வந்துடுங்க..."


"ம்..."

யமுனா தலையாட்டி விட்டு பூக்கூடையோடு வேகவேகமாய் வாசலை நோக்கிப் போனாள். செளம்யா கலவரமாய்ப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

வருண் திகைத்த விழிகளோடு தயானந்தையே பார்த்துக் கொண்டிருக்க அவர் அவனை புன்னகையோடு ஏறிட்டார்.

"என்ன சொல்றே வருண்...?"

"ஸ... ஸார்... வந்து..."



தாயொன்று சென்னையிற் கந்தகோட்டத்துள் வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே!

– அருட்பா

அன்பளிப்பு: இந்த இதழுடன்
கந்தகோட்டம் ஸ்ரீ முத்துக் குமார சுவாமி வண்ணப்படம்
அடுத்த இதழுடன் அன்பளிப்பு:
அபூர்வமான குருவாயூர் கிருஷ்ணன் வண்ணப்படம்

"சொல்லு..."

"இது ரொம்ப பெரிய விஷயம். என்னால முடியும்னு தோணலை."

"ஏன் முடியாது...?"

"கிர்த்திவாசன் ரிச்சி டாப்-10ல் இடம் பெற்று இருக்கக்கூடிய மிகப் பெரிய பணக்காரர். டெல்லி வரைக்கும் அரசியல் செல்வாக்கு உள்ளவர். அவரோட கோட்டையை ஊடுருவி என்னால உள்ளே போக முடியும்னு தோணலை."

"இந்த பார் வருண்...! கிர்த்திவாசனை நான் கொலை பண்ணணும்னு நினைச்சிருந்தா கூலிப்படை ஆட்களை வெச்சு எப்பவோ காரியத்தை முடிச்சிருப்பேன். அது எனக்கு ஒரு பெரிய விஷயமே கிடையாது. ஆனா என் மனைவி வைசாலியோட மரணத்துக்குக் காரணம் அந்த கிர்த்திவாசன் தானான்னு எனக்கு உறுதியா தெரியணும்."

"டிரைவர் முருகப்பன் சொன்னது பொய்யாய் இருக்கும்னு நினைக்கறீங்களா ஸார்...?"

"மே பீ...! அந்த முருகப்பனுக்குக் கிர்த்திவாசன் மேல் தனிப்பட்ட முறையில் ஏதாவது கோபம் இருக்கலாம். கிர்த்திவாசன் கொலை செய்யப்படணும்கிற வெறியில் முருகப்பன் பொய் சொல்லியிருக்கலாம். இது ஒரு சந்தேகம்தான்... நூறு சதவீத உண்மை தெரியாமே கிர்த்திவாசன் மேல கை வைக்க நான் விரும்பலை."

"ஸார்...! என்னால இந்த உண்மையைக் கண்டுபிடிக்க முடியும்னு நீங்க நினைக்கறீங்களா...?"

"கண்டிப்பா..."

"எப்படிச் சொல்றீங்க...?"

"ஒரு பெண்ணோட மானம் பறிபோக இருந்த வேளையில் உன்னோட நியாயமான கோபம் வெளிப்பட்டு ஒரு தாதாவோட அக்கிரமத்துக்கு முற்றுப்புள்ளி வெச்ச சம்பவம் ஒண்ணே போதும்."

"ஸார்! அது தற்செயலாய் நடந்தது..."

"அது என்னைப் பொருத்தவரைக்கும் தற்செயல் கிடையாது. நற்செயல்" தயானந்த் பணம் அடுக்கியிருந்த ப்ரீப்கேஸை எடுத்து நீட்டினார்.

"ம்... வாங்கிக்க..."

"வேண்டாம் ஸார்! ஒரு கொலையைப் பண்ற அளவுக்கெல்லாம் எனக்குத் தைரியம் கிடையாது."

"சரி... நீ கொலையைப் பண்ண வேண்டாம். உண்மையை மட்டும் கண்டுபிடிச்சுக் கொடு, போதும்."

"என்ன உண்மை...?"

"என்னோட மனைவி வைசாலியை உயிரோடு தகனம் பண்ணினது கிர்த்திவாசன் தானாங்கிற உண்மை. அது உண்மையாய் இருந்தா அந்த ஆளைத் தீர்த்துக்கட்ட நான் வேற வழி பார்த்துக்கறேன்..."

"ஸார்... எனக்கு உதறலாயிருக்கு..."

"மொதல்ல... ப்ரீப்கேஸைக் கையில வாங்கு. இந்த உதறல் நின்னு போயிடும்..."

நிமிஷ நேர யோசனைக்குப் பின் வருண் பண வாசனை அடிக்கும் அந்த ப்ரீப்கேஸை வாங்கிக் கொண்டான்.

வருணின் வாழ்க்கையில் விதி இரண்டாவது தடவை கோணலாய்ப் புன்னகை செய்தது.

(தொடரும்)



தேர்தலில் நிற்கல்!

வித்தியாசமான விளம்பரம் ஒன்று திருச்சி பதிப்பு தினசரியில் வெளியாகி இருந்தது. விளம்பரம் தந்திருந்தவர் முசிறி, நீதிமுத்து மணல் சீனிவாசன்.

''யாம் உண்மை என்று கண்ட பலவற்றுள் எண்களைக் காட்டிலும் சிறந்த உண்மை வேறொன்றும் இல்லை. இந்த உண்மையைப் படித்துணர்ந்த உயர் அதிகாரிகளே! பிறருக்கு உரைத்த சட்டமன்ற உறுப்பினர்களே! 158 - முசிறி தொகுதி மக்கள் அனைவரும் அறிந்த குறியீட்டு எண்களை வாழ வையுங்கள்'' என்கிற கொள்கையைப் பரப்ப அரசியல் கட்சி சாரா வேட்பாளராக நா. மு. நீதிமுத்து மணல் சீனிவாசனாகிய நான் தேர்தலில் போட்டியிடுவதை வாக்காளப் பெருமக்களே! நீங்கள் விரும்புகிறீர்களா? இல்லையா? என்பதை ஓர் அஞ்சலட்டையில் 'விருப்பம்' அல்லது 'விருப்பம் இல்லை' எனக் குறித்து அனுப்பி உதவுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்!'' இதுவே அந்த விளம்பர வாசகம்.

விவரம் அறிந்திட நேரில் அவரைச் சந்தித்தோம் நாம்.

''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'னு சொல்லியிருக்காங்க. ஆனால், இந்த அரசு அதிகாரிகளாகட்டும், சட்டமன்ற உறுப்பினர்களாகட்டும், எண்ணையும் எழுத்தையும் மதிப்பதே இல்லீங்க. அதனாலத்தான் சட்டமன்றத் தேர்தல்ல நாம நின்னா என்னன்னு தோணிச்சு. இதுக்காகவே ஆயிரம் ரூபா செலவு பண்ணி பத்திரிகையில விளம்பரம் குடுத்தேன். ஐயாயிரம் நோட்டீஸ் அடிச்சேன். ஆனா பாருங்க, இதுவரைக்கும் மொத்தத்துல ஓர் இருநூறு தபால் கார்டுதான் வந்திருக்கு. அதுலேயும் இரண்டு பிரிவா பிரிச்சு வெச்சிருக்கேன். எல்லாத்தையும் படிச்சிப் பாருங்க. இந்தாங்க!'' என்று மிகவும் பொறுமையுடன் அந்த இரு கட்டுகளையும் கொடுத்தார் நீதி முத்து மணல் சீனிவாசன்.

'தேர்தலில் நீங்கள் நிற்க விருப்பம்' என்று நூற்றி ஐம்பது கார்டுகள் வந்திருந்தன. நிற்க வேண்டாம் விருப்பம் இல்லை என ஐம்பது தபால் கார்டுகள் வந்திருந்தன. ஒவ்வொன்றாய்ப் படித்துப் பார்த்தோம். விருப்பம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்த அஞ்சலட்டைகளில் புகழ்ந்தும், விருப்பம் இல்லை என வந்திருந்த அஞ்சலட்டைகளில் இகழ்ந்தும் எழுதப்பட்டிருந்தன.

தேர்தலில் நிற்க வேண்டாம் எனக் குறிப்பிட்டிருந்த ஒரு கடிதத்தில் எழுதியிருந்தது இதுதான். ''தாங்கள் இதுவரைக்கும் காவிரி ஆற்றில் மணல் எடுத்து அடித்த கொள்ளை போதாது என்று சட்டமன்றத்துக்கு வேறு செல்ல விரும்புகிறீராக்கும்? அதெல்லாம் வேண்டாம். வேண்டவே வேண்டாம்!''

'என்ன முடிவு செய்துள்ளீர்கள்?'

''இருநூறு கார்டெல்லாம் வெச்சு முடிவுக்கு வர முடியுங்களா?'' எனக் கேட்டுவிட்டு அப்பாவித்தனமாகச் சிரிக்கிறார் முசிறி, நீதி முத்து மணல் சீனிவாசன்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



தேர்தல் என்பது பூரணத்தின் ஒரு பகுதி; பூரணம் என்பது தென்னகத்தின் நல்வாழ்வு, தமிழ் மொழியின் பாதுகாப்பு, ஜனநாயகத்தின் உணர்ச்சி, மக்கள் முகத்தில் தோன்றும் புன்னகை!
- கலைஞர் மு. கருணாநிதி



மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

'லாங் லாங் அகோ' போட்ட திட்டங்கள் எல்லாம் நிறைவேறிடும். குடும்பத்தில் குஷிதான். காசு மேலே காசு வந்து கொட்டுகிற நேரமிது. ஆனா, அதுக்காக வாரி விட்டுறாதீங்க. சின்னச் சின்னத் தடைகள் வந்துக்கிட்டுதான் இருக்கும். நிதானமா, பல்டி அடிக்காமே தாண்டுங்க. கூட்டாகத் தொழில் புரிகிறவங்களும் கூட்டணி அமைக்கிற வங்களும் உஷார்! குறிப்பா, அரசியல்வாதிகள் எட்டு திக்கிலிருந்தும் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டி வரும். அஷ்டாவதானியா மாறிடுங்க, வேறே என்ன செய்யறது? அப்பாவோட சொத்தோ தாத்தாவோட சொத்தோ கைநழுவிப் போக வாய்ப்பிருக்கு, ஜாக்கிரதை!



ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

உங்க புத்திசாலித்தன மும் திறமையும் பவர் சோப் கணக்கா பளிச்சிடப் போகுது.

அக்னிசர்மா

பக்கம்

ஏப்ரல்

4 முதல் 10


வரை

இழுத்துக்கிட்டே கழுத்தறுந்த வேலைகள் எல்லாம் 'டக்,டக்'னு முடிஞ்சுடும். அரசியல் வாதிகளோட கொள்கைகளுக்கு அமோக வர வேற்பு இருக்கும். தேர்தலையே ஜெயிச்ச மாதிரிதான் வைச்சுக்கங்களேன். பணம் கொடுக்கல் வாங்கல், ஸ்பெகுலேஷன் துறைகளில் இருக்கிறவங்க உஷார்! வீண், வம்பு, சண்டை, சச்சரவு இதிலெல்லாம் மூக்கை நுழைக்காதீங்க.



மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர் பூசம் 3-ம் பாதம் வரை)*

உங்களோட சாமர்த்தியம் கொடி கட்டிப் பறக்கப் போகுது. ஜெட் வேகத்தில் செயல்படப் போறீங்க. அரசியல்வாதிகள் கன விலும் நினைச்சுப் பார்க்காத திருப்பத்தைச் சந்திக்கப் போறாங்க. நீங்க உத்தியோகஸ்தரா, இன்கிரிமென்ட் இதோ வந்துகிட்டே இருக்கு. எந்த வேலையைச் செஞ்சாலும், ஆத்துலே ஒரு கால் சேத்துலே ஒரு கால் வைக்காம, முழு கவனத்தோட சிரத்தையா செய்யுங்க. அதிகமா உழைக்க வேண்டி வரலாம்.



கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

ஆசையே அலை போலே, நாமெல்லாம் அது மேலேன்னான் ஒரு கவிஞன். உங்களோட ஆசையெல்லாம் நிறைவேறப் போகுது. பணப் போக்குவரத்து ஆஹா, ஓஹோ! ஹர-ஹர-சிவ-சிவன்னு சாமி காரியத்திலே முழு மூச்சாக இறங்கிடுவீங்க. வேலை இல்லாதவர்கள் அப்பாயின்ட் மெண்ட் ஆர்டரை 'எனி டைம்' எதிர்பார்க்கலாம். எதிர்பாராத செலவுகள் கையைக் கடிக்கும். 'குரோர்பதி', 'கோடீஸ்வரன்' – எல்லாத்தையும் ஒரு ரவுண்டு வாங்க, அதிர்ஷ்ட வாய்ப்பு நிறைய இருக்கு!




சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

எடுத்தக் காரியங்களை செஞ்சு முடிப்பதற்குள்ளே முழி பிதுங்கிடும். மனசில் குழப்பம், சஞ்சலம், துயரம் இருந்துக் கிட்டே இருக்கு. 'எங்கே நிம்மதி'ன்னு சிவாஜி ஸ்டைலில் பாடுகிற லெவலுக்குப் போய்டுவீங்க. போதாக்குறைக்கு உடம்பு வேறே படுத்தி எடுக்கும். கடவுள் மேலே பாரத்தைப் போட்டுட்டு நீங்க பாட்டுக்கு உங்க வேலையைச் செஞ்சுகிட்டுப் போயிடுங்க. ஒரு தடவைக்கு நாலு தடவை சிந்திச்சுச் செயல்பட்டா முக்கால்வாசி சங்கடங்களை 'பூ'ன்னு ஊதித் தள்ளிடலாம். உங்களுடைய உழைப்பும் திறமையும் வீண் போகாது.



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*


துணிவும் தன்னம்பிக்கையும் எங்கிருந்தோ வந்து உங்க மனசுக்குள் புதுக் குடித்தனம் ஆரம்பிச்சிடும். அப்புறம் என்ன, எடுத்த காரியமெல்லாம் ஜெயம்தான்! எதிரிகள் எல்லாம் 'ஜீபூம்பா' மாதிரி ஒரே நொடியில் காணாமல் போயிடுவாங்க. வீடு, வாசல், டூவீலர்னு ஏதாவது வாங்கப் போறீங்க. ஆனா, சில பிரச்னைகள் ஏற்படத்தான் செய்யும். உங்க செல்வாக்குக்கும் அந்தஸ்துக்கும் பங்கம் வராது.



துலாம் : (சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)


உங்க நிர்வாகத் திறமையும் செயல் திறமையும் 'கும்'ன்னு விலைவாசி கணக்கா ஏறிடும். எதிரிகள் எல்லாம் 'கப், சுப், சுபர்தார்'னு அடங்கிப் போய்டுவாங்க. தெய்வ அநுக்கிரஹம்னா என்னன்னு புரிஞ்சுக்குவீங்க. மனசு தலைக்காவேரி கணக்கா தெளிவா இருக்கும். ஆனால் பேச்சில் மட்டும் கடுமையே கூடாது, கிராண்ட் ஸ்வீட்ஸ் பாதாம் அல்வா மாதிரி ஸ்வீட்டா இருக்கணும். வியாபாரிகள் அகலக்கால் வைச்சா வழுக்கி விழுந்திடுவீங்க. பொதுவாகவே நூறு பெர்சென்ட் வளர்ச்சி என்பது இருக்காது, ஏதாவதொரு குறை இருந்துக்கிட்டே இருக்கும். டும், டும், டும் எல்லாம் கூட தடைபட சான்ஸ் இருக்கு. அதனாலே புது முயற்சிகளை எல்லாம் சட்டசபையில் ஒத்திப் போடுற மாதிரி ஒத்திப் போட்டுடுங்க.

நடக்கும்!




விருச்சிகம் : (விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

உங்க மனசில் துணிவும் தன்னம்பிக்கையும் ஆறாக பெருக்கெடுத்து ஓடும். அப்புறம் என்ன, வெற்றி மேல் வெற்றிதான். நல்லவங்க, முக்கியமானவங்க சகவாசத்தாலே நல்லது நடக்கும். வெளிநாட்டில் இருக்கிற பசங்க வரப் போறாங்க. ஜேபி நிறைய பணம் இருந்துக்கிட்டே இருக்கும்ங்கிறதாலே போனஸ் உற்சாகம். அதிர்ஷ்டம் ஒரு தடவைதான் கதவைத் தட்டும் என்பாங்க. ஆனா இந்த வாரம் அது உங்க வீட்டு காலிங்பெல்லை அடிச்ச வண்ணம் இருக்கப் போகுது. கெட்டிக்காரத்தனமாகப் பயன்படுத்திக்கங்க.



தனுசு : (மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)

விசேஷமான நன்மைகள் எதுவும் எதிர்பார்த்தீங்கன்னா ஏமாந்து போவீங்க. மனசில் ஏதாவது ஒரு குழப்பம் 'ஷிப்ட்' சிஸ்டத்திலே இருந்துக்கிட்டே இருக்கும். உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கங்க, அது முன் அறிவிப்பு இல்லாமே ஸ்ட்ரைக் செய்ய வாய்ப்பிருக்கு. கைப்பொருள் பத்திரம். ஜாமீன், பொருளாதார சிக்கல்னா, பத்து அடி தூரம் ஓடி வந்திடுங்க. எதிலும் அவசரப்படாமே நிதானமா நடந்துக்கங்க. புது முயற்சிக்கெல்லாம் ஒரே வார்த்தையில் 'நோ' சொல்லிடுங்க!



மகரம் : (உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)

உங்க புத்திசாலித்தனமும் சாமர்த்தியமும் போட்டி போட்டுக்கிட்டு வெளியே வரும். வெற்றியைத் தவிர நீங்க வேறே எதையுமே நினைச்சுப் பார்க்க மாட்டீங்க. துணிச்சலான காரியங்களில் கிரண்பேடி கணக்கா புகுந்து விளையாடுவீங்க. எதிரிகள் எல்லாம் மாயமாய் மறைஞ்சிடுவாங்க. பியூட்டி பார்லருக்குப் போகாமலேயே உங்க முகவசீகரம் கூடும். பேச்சு அதைவிட வசீகரமாக இருக்கும். குடும்பத்தில் எல்லாரும் உங்களைத் தலையில் தூக்கி வைச்சுக் கிட்டுக் கொண்டாடுவாங்க. அப்பப்போ எதிர்பாராத செலவுகள் தலை தூக்கும்.



மகர ராசிக்காரரான எஸ். ஜானகிக்கு கலக்கலான வாரமாம்!



கும்பம் : (அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)

அதிபுத்திசாலித்தனமா காரியங்களைச் செஞ்சு முடிப்பீங்க. கோர்ட் வழக்குன்னாலும் சரி, டெஸ்ட் - மாட்ச், விளையாட்டுன்னாலும் சரி, வெற்றியோ வெற்றிதான். எல்லாரும் ஆஹா – ஓஹோன்னு பாராட்டுகிற அளவுக்கு, வி.வி.எஸ். லக்ஷ்மணன் லெவலுக்குப் போயிடுவீங்க. விருதுகள், பரிசுகள் எல்லாம் உண்டு. உடம்பை மட்டும் சர்வ ஜாக்கிரதையாகப் பார்த்துக்கங்க. பேச்சில் கடுமையை இரண்டு டோஸ் குறைச்சு இனிமையை நாலு டோஸ் கூட்டுங்க.



மீனம் : (பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

உடல்நிலை கொஞ்சம் டிரில் வாங்கப் போகுதுங்க. முக்கியமா, கண் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் வரலாம். ஒரு கிலோ கேரட்டைச் சாப்பிட்டு வைங்க. பணம், காசு, கார்ப்பரேஷன் தண்ணி கணக்கா வத்திடும். கொடுக்கல் – வாங்கல் விஷயங்களில் கண்ணில் எண்ணெய் விட்டுக்கிட்டு கவனமாக இருங்க. ஆனால் உழைப்புக்கும் திறமைக்கும் பலனை நிச்சயம் அடையலாம். கொஞ்சம் பொறுத்திருங்க.

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார் 6



தேவதைகளெல்லோரும் பரோக்ஷ ப்ரியர்கள். நம் கண் முன்னே வரமாட்டார்கள். மறைந்திருந்து பலனைக் கொடுக்கக் கூடியவர்கள்.

பகவான், சர்வ தேவதைகளுக்கும் தேவாதி ராஜனாக இருப்பதனாலே, எல்லா தேவதைகளுக்கும் அதி தேவதையாய் இருப்பதனாலே- எல்லாவற்றிலும் அவன் மறைந்தே உறைகிறான்.

உடல்மிசை உயிரென எங்கும் கரந்து, எங்கும் பரந்துளன்- அப்படியானால் என்ன...? எங்கும் பரந்திருப்பவன் எங்கும் மறைந்தும் இருப்பவன். யாராலும் அவனைப் பார்க்க முடியாது என்கிறது நாராயண உபநிஷத். ஆழ்வார் சொல்கிறபோது அவனைக் 'கட்கிலி' என்று குறிப்பிடுகிறார். கட்கிலி என்றால் கண்ணுக்கு இலக்காகாதவன், என்று அர்த்தம்.

'கட்கிலி! காணுமாறு அருளாய்' என்று அவனையே வேண்டுகிறார் ஆழ்வார்.

ஹே பிரபு! உன்னைப் பார்க்கும்படியாய் நீதான் அருள் பண்ண வேண்டும். அல்பமான இந்த நேத்திரத்தினால் உன்னைப் பார்க்க முடியுமா?... ஆனால் பார்க்க வேண்டும் என்று அவனே அருளினால், அதைத் தடுக்க யாரால் முடியும்? அப்படித் தடுப்பது அவ்வளவு சுலபமா?

'காணுமாறு அருளாய், காகுத்தா கண்ணனே!'

என்று நம்மாழ்வார் அதனால்தான் பாடுகிறார்.

'ஹே கிருஷ்ணா! ஒரு தடவை கண்களால் காண நீ வாராயோ! உன் ரூபம் எப்படி? இதெல்லாம் பார்க்க ஆசையாய் இருக்கிறது' என்கிறார்.

ஆகையால் மறைந்து உறைவது பகவானுடைய தன்மை. -இதுவே விச்வ சப்தத்தால் சொல்லப்படுகிறது. இந்த பிரபஞ்சத்தில் உள்ளதையெல்லாம் பார்த்து. இதை உண்டாக்கிய ஒருவன் இருக்கிறான் என்று நிர்ணயம் பண்ணுகிறோம்.

லோக்யத இதி லோகம்-எல்லோராலும் பார்க்கப்படுவதால் இதற்கு லோகம் என்று பெயர். கண்களால் இதைப் பார்க்கிறோம். பார்த்த மாத்திரத்திலேயே எத்தனையோ விஷயங்கள் தெரிகின்றன.

காஞ்சிபுரத்தில் அழகாய்த் திருச்சின்னம் ஊதுவார்கள். ஊதினால் எம்பெருமான் எழுந்தருள்கிறான் என்று அறிகிறோம். திருவீதி புறப்பாடு-அதை உலகத்துக்குத் தெரிவிக்கும்படியான அடையாளமாகத் திருச்சின்னம் ஊதப்படுகிறது.

தேவாதி ராஜன் சன்னதியிலே ஊதுகிற ஓசை, தூப்புல் என்கிற க்ஷேத்திரத்தில், ஸ்வாமி தேசிகனுடைய திருச்செவியிலே வந்து விழுகிறது. அதைக்கேட்டு எல்லோரும் சேவிக்கப் புறப்படுகிறார்கள். அவர்கள் சேவிக்கத் தருந்தவனாய் அங்கே வருவது யார்? ஈருலகைப் படைத்தவன்!

ஈருலகு என்பதற்கு ஈர்க்கும் உலகு என்றொரு பொருள். ஈர்க்கும் சக்தி இருப்பதால் அப்பொருள் என்கிறார் ஸ்வாமி தேசிகன். எதை ஈர்க்கும் சக்தி...?

வஸ்துக்களை ஈர்க்கும் சக்தி என்பது அல்ல; இந்த

குறைவொன்றுமில்லை

உலகு நமது அந்தகரணத்தையே இழுக்கிறது. மனத்தை அடியோடு இழுக்கிறது. ஆகையினால் தான் இதெல்லாம் சாசுவதம், நாமும் சாசுவதம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

மொக்குள் (நீர்க்குமிழி) உலகத்திலே உட்கார்ந்திருக்கிற நாமெல்லாம் சாசுவதமா...?

ஸ்மர நித்யம் அநித்யதாம்;

நித்யதாம் அநித்யம் ஸ்மர!

இது எதுவும் சாசுவதம் இல்லை என்பதைத்தான் நாம் நித்யம் ஸ்மரிக்க வேண்டும். இதையே சாசுவதம் என்று ஒருவன் நினைத்துக் கொண்டிருந்தால், துர்க்குணங்களெல்லாம் அவனிடத்திலே சேர்ந்து, அடியோடு படுகுழியில் தள்ளும்.


ஆகையினாலே, விவேகமுடையவனாக இருக்க வேண்டும்.

பிரும்ம சூத்ர பாஷ்யத்தின் மந்திர சுலோகத்திலேயே சொல்லியிருக்கிறது-இதெல்லாம் ஒரு விளையாட்டு பகவானுக்கு என்று சொல்லிவிட்டார் ஆசார்யர்.

ஆகையால், அனைத்துக்கும் காரணமான பரப்ரும்ஹத்தை நாம் உணர வேண்டும்.

நம் வாழ்நாளிலே காரண விசாரம் என்பது பண்ணியாக வேண்டும். காரணம் எது எது என்று ஆராய வேண்டும். அந்த ஆராய்தலாகிற பெரிய காரியத்தையே பகவான் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறான்.

பூர்வ மீமாம்ஸா சாஸ்திரம், உத்தர மீமாம்ஸா சாஸ்திரம் என்று இரண்டு- பூர்வ மீமாம்ஸை என்பது ஜைமினி என்கிற மஹரிஷியால் இயற்றப்பட்ட சூத்திரங்கள். கர்ம மீமாம்ஸை என்றே இதற்குப் பெயர். வேதத்தில் பூர்வ பாகத்தில் சொல்லப்பட்ட அத்தனையையும் விசேஷமாக ஜைமினி மஹரிஷி விளக்கிக் காட்டுகிறார். அதன் பிறகு பிரும்ம மீமாம்ஸை... அந்த உயர்ந்ததான உபநிஷத் அர்த்தங்களை வியாஸ பகவான் அருளிச் செய்திருக்கிறார்.



வியாஸருடைய அவதாரமே அனுப்பிரவேச அவதாரம்தான். ராமனுடைய அவதாரம் சாக்ஷாத் அவதாரம். கிருஷ்ணனுடைய அவதாரம், விஷ்ணுவினுடைய சாக்ஷாத் அவதாரம். நரசிம்ஹாவதாரம் என்பதும் விஷ்ணுவினுடைய சாக்ஷாத் அவதாரம்.

வியாஸாவதாரம் என்பது அனுப்பிரவேசாவதாரம் என்று பெயர். வேதங்களை விவரித்ததனாலே அவருக்கு வியாஸர் என்று

பெயர் வந்தது. பராசர மஹரிஷியினுடைய திருக்குமாரர் அவர்- விஷ்ணு புராணத்திலே பராசரர் தன் பிள்ளையினுடையே பெருமையைத் தானே சொல்கிறார்:

"மைத்ரேயா! என் பிள்ளை வியாஸரைப் பற்றி நீ சாமானியமாக நினைக்காதே! விஷ்ணுவினுடைய அவதாரம் அவன். இல்லையென்றால் மகாபாரதம் என்கிற அவ்வளவு பெரிய கிரந்தத்தை இயற்றியிருக்க முடியுமா?" என்கிறார். "ஆகையினாலே, அவரை நாராயணன் என்று நீ உணர்வாயாக" என்கிறார்.

ஆகையினாலே, அந்த எம்பெருமான் நாராயணனின் அம்சம் வியாசரிடத்திலே நிறைய இருப்பதனாலே அவரை அனுப்பிரவேச அவதாரம் என்றது.

வியாஸர் இயற்றியதும், உயர்ந்த ரீதியிலே பகவானுடைய பெருமைகளையெல்லாம் விளக்கிக் காட்டும்படியானதுமான வேத, இதிகாச, புராணங்கள் இத்தனையும்- 'காரணமான பரப்ரும்மத்தை உணரவேண்டும், உணர வேண்டும்' என்றே நமக்கு உபதேசிக்கின்றன.

வியாஸ மஹரிஷி, முதல் சுலோகத்திலேயே என்ன சொல்கிறார்...?

'பிரும்ம விசாரம் பண்ண வேண்டும்;
அவனைத் தெரிந்துகொள்ள வேண்டும்;
அவனைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற இச்சை பிறக்க வேண்டும்...' என்கிறார்.

ஆனால் பகவானைக் குறித்து தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை நமக்குள் தன்னடைவே வருகிறதா? இல்லையே!

அது எப்போது வரும்...? மீதியெல்லாம் நமக்குக் கிடைக்காதபோது வரும்!

போக-பாக்யங்கள் எதுவும் கிடைக்கவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள்... கஷ்டத்தையே அனுபவித்து அவஸ்தைப்படுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள், அப்போது கொஞ்சம் அவரை அதிகமாக நினைக்கத் தோன்றும். 'என்ன பண்ணலாம்..? அவரைப் போய்க் கேட்கலாமா? இவரைப் போய்க் 'கேட்கலாமா...? எதைப் பண்ணினால் கஷ்டம் தீரும்...?' என்று பரப்ருமத்தினுடைய விசாரம் நமக்கு பயபக்தியோடு வந்து விடுகிறது.


அப்படியானால், கஷ்டம் என்பது நமக்கு வேண்டுமா? வேண்டாமா...?

கட்டாயம் வேண்டும்!

ரோகம் என்பது வேண்டுமா வேண்டாமா..? கட்டாயம் வேண்டும்.

ரோகம் இல்லாத வாழ்வுதானே நல்லது என்று சாஸ்திரம் சொல்கிறது...? எனக் கேட்கலாம்.

அருள்வாக்கு!



ஆசிரியர்களெல்லாம் உண்டியின் உதாரணத்தை ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். நம் கை நிறைய, பை நிறையக் காசு இருந்தாலும் உண்டியில் அப்படியே கொட்டிவிட முடியுமா? அதிலுள்ள சின்ன த்வாரத்தின் வழியாக ஒவ்வொரு காசாகத்தானே போட வேண்டும்? முதலில் போட்டது சிக்காமல் உள்ளே போய்விட்ட அப்புறம், அதுவாகப் போகாவிட்டால் உண்டியைக் குலுக்கி அதைப் போகப் பண்ணிய அப்புறம்தானே அடுத்த காசைப் போட வேண்டும்?

இதற்கொரு பதில் இருக்கிறது.

நாராயண பட்டாத்திரி விசேஷமாக நாராயணீயம் எழுதினார். எழுதிவிட்டு அவர் குருவாயூரப்பனுக்கு வந்தனம் பண்ணவில்லை! தமக்கு வந்த ரோகத்துக்கு நமஸ்காரம் பண்ணினார்!

'இந்த ரோகமே வரவில்லையென்றால், நாராயணீயம் என்கிற கிரந்தம் வந்திருக்குமா? குருவாயூரப்பனிடத்திலே ஈடுபட்டிருக்க முடியுமா?' என்கிறார் அவர்.

அப்படி நமக்கு பகவான் சிக்ஷிக்கிறான். சிக்ஷையினாலே நல்லதை உண்டு பண்ணுகிறான்.

கஷ்டம், ரோகம், சிரமம், மனத்திலே பலவிதமான வியாகூலங்கள்-இதெல்லாம் பகவான் நமக்குக் கொடுத்த பெருமை என்று யார் நினைக்கிறார்களோ, அப்படிப்பட்டவர்களுக்கு விசேஷமாக அனுக்கிரஹம் பண்ணுகிறான். அதனாலே வியாகூலம் வரும்போது பகவானை தியானம் பண்ண வேண்டும்.

ஒருவர் மிகவும் சிரமப்படுகிறார் என்றால், பகவான் நாமத்தைச் சொல்ல வேண்டும். 'சிரமப்படுகிறேன்', 'சிரமப்படுகிறேன்!' என்று வெறுமே சிரமத்தையே சொல்லக் கூடாது. அப்படிச் சொன்னால் பிரயோஜனமில்லை என்று சொல்லிவிட்டது சாஸ்திரம்.

இதை யார் சொல்கிறார்கள்...? அடியேன் சொல்லவில்லை. விதுரர் சொல்கிறார். ஒரே ராத்திரியில் மகாபாரதத்திலே ஐந்நூறு சுலோகங்களைப் பாடுகிறார். விதுர நீதியென்றே பெயர் அதற்கு.

விதுரர் இதராளுடைய மனம் புண்படா

அப்படித்தான், ஒவ்வொரு விஷயத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் ஒவ்வொன்றாக மாணவர்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்களுடைய அறிவுக்குள்ளே செலுத்த வேண்டும். சொன்ன ஒவ்வொரு அம்சமும் சிக்காமல் அவர்களுக்குள்ளே போய் விட்டதா என்பதைக் கேள்வி கேட்டு நிச்சயப்படுத்திக் கொண்டு, அப்புறமே அடுத்த அம்சத்துக்குப் போக வேண்டும். ஒன்று உள்ளே போகவில்லையென்றால் நிதானம் இழக்காமல், கோபப்படாமல் மாறாக அவர்களுக்கு உத்ஸாஹம் ஊட்டுகிற வகையிலே மறுபடியும் தெளிவாக எடுத்துச் சொல்லி உள்ளே போகப் பண்ண வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

மல் பேசக் கூடியவர். அப்படிப்பட்டவர் கூட கொஞ்சம் 'சுருக்'கென்று சொல்கிறார். மனத்திலே தைக்கும்படியாகச் சொல்கிறார்.

இரண்டு பேரைப் பிடித்து தரதரவென்று இழுத்துக் கொண்டு வரவேண்டும் என்கிறார் விதுரர்.

இழுத்துக் கொண்டு வந்து என்ன பண்ண வேண்டும்...? இரண்டு பேருக்கும் கழுத்திலே பெரிய பாறாங்கல்லைக் கட்ட வேண்டும். சிறிய கல்லாகக் கட்டினால் பிரயோஜனமில்லை. பெரிய கல்! அதைக் கொண்டு வந்து கட்டி, சமுத்திரத்துக்கு அந்த இரண்டு பேரையும் இழுத்துக் கொண்டு போய், அப்படியே இறக்கிவிட வேண்டும். மறுபடியும் எழுந்து வராத வண்ணம் உள்ளே தள்ளி அமுக்கிவிட வேண்டும்.

பெரும் பொருள் படைத்தவர்கள் இருக்கிறார்களே... அவர்கள் தானம் பண்ணாமலிருந்தால், அந்த திரவியத்தை ஏழை எளியவர்கள் பயனடையக் கொடுக்காமலிருந்தால், அப்படிப்பட்டவர்களையும்....

தாரித்ரியத்தில் அடிபட்டுக் கொண்டிருக்கும் ஒருவன் பகவான் நாமாவைச் சொல்லாமலிருந்தால் அவனையும் பிடித்துத்தான் இப்படித் தண்டிக்க வேண்டும் என்கிறார் விதுரர்.

இவ்வாறு விதுரரே சொல்கிறார் என்றால், அது எவ்வளவு கொடியதான விஷயம்!

தாரித்ரியம், சிரமம், கஷ்டம், ரோகம், எல்லாவற்றையும் பகவான் எதற்காகக் கொடுக்கிறான் என்றால், அவனை நினைப்பதற்காகத்தான்!

இத்தனை நாட்களாக நினைத்தோமா இல்லையா? என்பதும் அவனுக்கே தெரியும். நமக்கு வேண்டுமானால் தெரியாமல் இருக்கலாம்! ஆனால் அவனுக்கு நன்றாகத் தெரியும்!

நம்மைக் காட்டிலும் ரொம்ப முயற்சி பண்ணுகிறான் பகவான். 'இன்னும் இரண்டு வருஷம்தானே இவன் இருக்கப் போகிறான்; இப்படி வீணாகப் போய்க் கொண்டிருக்கிறானே...?' என்று ஒரு பெரிய ரோகத்தை அவனுக்குக் கொடுத்து விடுவான். வீட்டை விட்டு அவன் எழுந்து போக முடியாதபடி பண்ணிவிடுவான்.

இத்தனை நாளாக வீணான காரியத்தில் போய்க் கொண்டிருந்த அந்த நபரை, அந்த இரண்டு வருஷமும் வீட்டிலேயே உட்கார வைத்து, ராமாயணம், பாகவதம் எல்லாவற்றையும் படிக்க வைத்துவிடுவான்!

பகவான் பண்ணுகிற உபகாரம் இது!

ஆகையால், ரோகம் வந்தால் கஷ்டப்படலாமோ...? பகவான் நம்மை சிக்ஷிப்பதற்காகவே, நம்மைச் சோதிப்பதற்காகவே செய்கிறான்.

பாத்திரம் கறுப்பாக இருந்தால், அழுக்காக இருந்தால், சுத்தம் பண்ணுகிறோம். திருப்பித் திருப்பிச் சுத்தம் பண்ணுகிறோம். கொள்ளிடக்-காவிரிக் கரையிலே பாத்திரம் சுத்தம் பண்ணிக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம்.

வெளியிலே எல்லோரும் நன்றாகச் சுத்தம் பண்ணிவிடுவார்கள். பார்ப்பதற்குப் பளபளவென்று இருக்கும். உள்ளுக்குள்ளே கையை விட்டால் கொழகொழவென்று இருக்கும்!

உள்ளும் புறமும் ஒரேமாதிரி சுத்தமாயிருக்கும் ஸ்ரீரங்கத்திலே! அந்தக் காவேரியில் இருக்கிற மண்ணை உள்ளே போட்டோமானால் உள்ளே இருக்கிற அழுக்கெல்லாம் வெளியே வந்துவிடும். நன்றாகப் பளிச்சென்று ஆகிவிடும்.

அந்தப் பாத்திரம் எப்படி சுத்தமாகிறதோ, அந்த மாதிரி நாமும் உள்ளும் புறமும் சுத்தமாகவிருக்க வேண்டும். வெளியே மட்டும் சுத்தமாயிருந்துவிட்டு உள்ளே அழுக்காய், துர்வாசனை நிறைந்திருந்தால் பலனுண்டா?


பரமாத்மாதான் உள்ளுக்குள்ளேயும் சுத்தம் பண்ணுகிறான் நம்மை!

ஆகையினால் நாம் பரமாத்மாவை நன்றாக ஆராய வேண்டும்.


ஆராய வேண்டுமானால் அவனிடத்திலே புத்தி போக வேண்டும்.

புத்தி போக வேண்டுமானால் நிறைய கஷ்டங்கள் வேண்டும்! அவை வந்தால்தான் அவனிடத்திலே போவோம்!

(வளரும்)



Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)



கந்தகோட்டம் ஸ்ரீ முத்துக்குமார சுவாமி

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2000 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka